# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 கார்த்திகை 03 ஞாயிற்றுக்கிழமை (18-11-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:357


## மட்டக்களப்பு ஐ.தே.க. வேட்பாளர் நேற்று சுட்டுக்கொல்லப்பட்டார்!

### ஒந்தாச்சிமடத்தில் கொடூரம்

மட்டக்களப்பு,நவ.18

ஐக்கிய தேசியக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் தம்பிராஜா ஜெயக்குமார் நேற்று மாலை 6 மணியளவில் இனந்தெரியாத நபாகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்; அவரது மெய்ப்பாதுகாவலர் படுகாயமடைந்தார்.

மட்டக்களப்பு ஒந்தாச்சிமடம் ஐம்பது வீட்டுத் திட்டப் பகுதியில் பிரசாரத்தை முடித்துக்கொண்டு களுவாஞ்சிக்குடி நோக்கி வாகனத்தில் திரும்பிக் கொண்டிருந்த சமயம் மோட்டார் சைக்களில் வந்த இருவரால் இவர் வழிமறித்துச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஜெயக்குமார் கடந்த பொதுத் தேர்தலிலும் ஐ.தே.கட்சி சார்பில் போட்டியிட்டவர்; முன்னாள் பட்டிருப்புத் தொகுதி ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் தம்பிராஜாவின் மகன்; அவர் ஓய்வு பெற்ற உதவிப் பொலீஸ் அத்தியட்சகரும் கூட.

ஐம்பது வீட்டுத் திட்டப் பகுதியில் பிரசாரத்தை முடித்துக்கொண்டு அவர் காரில் திரும்பிக் கொண்டிருந்தார். அவருடன் பிரசாரத்துக்குக் கூட்ச

(18ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். ஐ.தே.க. வேட்பாளர்களுக்கு பாதுகாப்புக் கோருகின்றார் ரணில்

கொழும்பு,நவ.18

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் யாழ்.மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்கள் அனைவருக்கும் - அவர்கள் நெடுந்தீவு உட்பட சகல இடங்களுக்கும் சென்று தேர்தல் பிரசாரப் பணிகளில் ஈடுபடக் கூடியதாக - போதிய பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்று ஐ.தே.கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தேர்தல் ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்றுமுன் தினம் தேர்தல் ஆணையாளரைச் சந்தித்து உரையாடியபோது அவர் இவ்வாறு கோரினார்.

யாழ்.மாவட்டத்தில் நீதி, நியாயமான தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

வாக்களிப்பு நடைபெறும் தினத்திற்கு 14 தினங்கள் முன்பாக நெடுந்தீவில் பொலீஸ் நிலையம் ஒன்று நிறுவப்படவேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார். (உ-6)

# ஐ.தே.க. அரசுடன் பேசுவதானாலும் கூட புலிகள் மீதான தடை நீக்கப்படவேண்டும்

## ‘தமிழ் கார்டியன்’ தகவல்

லண்டன்,நவம்பர்18

**புதிதாக ஆட்சிக்கு வரக்கூடிய ஐ.தே.கட்சி அரசுடன் விடுதலைப் புலிகள் பேசுவதானால் கூட அதற்குப் புலிகள் மீதான தடை நீக்கப்படவேண்டும். புலிகளுடன் பேசும்போது ஐ.தே.க. அரசு, வேறு தமிழ்க் கட்சிகள், அமைப்புகள் ஆகியவற்றுடன் பேசக்கூடாது. இதுதான் புலிகளின் நிலைப்பாடு.**

**லண்டனில் இருந்து வெளிவரும் - விடுதலைப் புலிகளின் பின்னணியுடன் பிரசுரிக்கப்படும் - ‘தமிழ் கார்டியன்’ ஆங்கிலப் பத்திரிகை இவ்வாறு தகவல் வெளியிட்டிருக்கின்றது.**

அந்தப் பத்திரிகையின் கடந்த வார இதழின் ஆசிரிய தலையங்கத்திலேயே இப்படித் தெரிவித்திருக்கின்றது.

இதற்கிடையில் -

"ஐ.தே.கட்சி ஆட்சிக்கு வந்தால் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் இன்றியே அந்த அரசுடன் பேசத் தயார்!" என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் உயர் தலைவர் வெளிப்படுத்தியிருக்கின்றார் என 'டெய்லி ஸ்ரார்' பத்திரிகை தனது இணையத் தளச் செய்தியில் தெரிவித்திருக்கின்றது.

'தமிழ் கார்டியன்' பத்திரிகை தனது ஆசிரிய தலையங்கத்தில் தெரிவித்திருப்பதாவது:-

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி புலிகளை முறியடிப்பது என்று முழு மூச்சாக இருக்கின்றது. எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சி அப்படியில்லை. புலிகளுடன் சமாதானப் பேச்சு நடத்துவதில் அது தீவிரமாக உள்ளது.

சிங்கள மக்கள் மத்தியில் அது தவறான எண்ணத்தை ஏற்படுத்தும் ஆபத்து இருக்கின்றதென்று தெரிந்தும் ஐ.தே.க. பேச்சு நடத்த விரும்புகிறது.

தமது இயக்கம் மீதான தடையை நீக்கினால்தான் புலிகள் ஐ.தே.கட்சியுடன் பேசுவார்கள். தம்முடன் பேசும்போது வேறு தமிழ் அமைப்புகள், அரசியல் கட்சிகள் ஆகியவற்றுடன் ஐ.தே.க. பேசுவதைப் புலிகள் விரும்பவில்லை.

தமிழ் மக்களுக்கும் சுயநிர்ணய உரிமை வேண்டும் என்ற புலிகளின் அரசியல் கொள்கையையும் - முக்கியமாக அவர்களின் போராட்டத்தையும் - தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு முழுமையாக ஆதரிக்கின்றது.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை என்று தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு கூறுவதைத் தனித்

(18ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா சிதம்பரபுரத்தில் சுரேஷ் அணி மீது தாக்குதல்

வவுனியா சிதம்பரபுரம் பகுதியில் தேர்தல் பிரசாரப் பணிக்காகச் சென்ற தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பைச் சேர்ந்த ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஷ் அணி) வேட்பாளர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்றுப் பிற்பகல் 4.30 மணியளவில் இந்தப் பகுதிக்கு தேர்தல் பிரசாரத்துக்குச் சென்ற சமயமே இவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனால் வேட்பாளர்கள் சென்ற வாகனம் கடும் சேதத்துக்குஉள்ளானது.

உதயசூரியன் சின்னத்துடன் இனிமேல் இந்தப் பகுதிக்கு தேர்தல் பிரசாரப் பணிகளுக்காக வரவேகூடாது என்று தாக்குதல் நடத்தியவர்கள் எச்சரிக்கை செய்ததாக சுரேஷ் அணியினர் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதலைப் புளொட் அமைப்பினரே மேற்கொண்டதாக ஈ.பி.ஆர்.எல்.எவ் (சுரேஷ்) அணியினர் குற்றஞ்சாட்டியுள்ளனர். (ம-164)



தேர்தல் வாக்களிப்பைக் கண்காணிப்பது தொடர்பாக ஆராயவென கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்துள்ள விசேட குழுவைச் சேர்ந்தவர்களான தேசிய சமாதானப் பேரவையின் தலைவர் ஜெகான் பெரேரா, சுவீடன் தூதரகத்தின் 2ஆவது செயலாளர் ஸ்ரீனா கார்க்குன் (Stina Karhun), நிமால் பெர்னாண்டோ, எவ்.ரவீந்திரன் ஆகியோர் யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளை நேற்று சந்தித்து உரையாடியபோது எடுக்கப்பட்ட படம். *(படம்: பொ. இராஜேஸ்வரன்)*

## வாக்குகளை சரியாகப் பயன்படுத்த கோருகின்றது யாழ். பல்கலை சமூகம்

யாழ்ப்பாணம்,நவ.18

"கடந்த காலங்களில் நடந்த பொதுத் தேர்தல்களை நாம் புறக்கணித்து வந்த சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி தேர்தல் மோசடிகள் மூலம் குறைந்த அளவு வாக்குகளுடன் பதவிக்கு வந்தன சில ஆயுதம் ஏந்திய தமிழ்க் கட்சிகள். இந்தக் கட்சிகளின் பிரதிநிதிகளை தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக உலகுக்குக் காட்டிய ஸ்ரீலங்கா அரசு, அவர்களின் ஆதரவுடன் தமிழினத்தின் மீதான ஆக்கிரமிப்பு யுத்தத்தினை நடத்தி வருகின்றது.

"எனவே தமிழ் பேசும் மக்களாகிய நாம் எதிர்வரும் பொதுத் தேர்தலில் மிகவும் விழிப்புணர்வோடு எமது வாக்குரிமைகளைப் பயன்படுத்த வேண்டியது அவசியம்."

- இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளது யாழ்.பல்கலைக்கழகச் சமூகம். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், மாணவர் ஒன்றியம், ஊழியர் சங்கம் ஆகிய அமைப்புக்கள் இணைந்து பல்கலைக்கழக சமூகம் என்ற பெயரில் அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளன.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் நாம் மிகவும் விழிப்புடனும் அக்கறையுடனும் செயற்பட வேண்டிய ஓர் இக்கட்டான நிலையில் உள்ளோம்.

1977ஆம் ஆண்டின் பின்னர் ஸ்ரீ

(18ஆம் பக்கம் பார்க்க)

## தம்பலகாமம் பகுதியில் குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

திருகோணமலை,நவ.18

தம்பலகாமம் பட்டிமேடு பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

தம்பலகாமம், சிப்பித்திடல் பகுதியைச் சேர்ந்த - 7 பிள்ளைகளின் தந்தையான - சிவபாதலிங்கம் என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார். இவரது வீட்டுக்கு அருகில் இருந்த மற்றொரு வீட்டின் முன்பாக இவரது சடலம் சூட்டுக் காயங்களுடன் காணப்பட்டது. சடலம் காணப்பட்ட

(18ஆம் பக்கம் பார்க்க)




அஞ்சாத வாழ்வுக்கும் அழிந்த வாழ்வை மீட்பதற்கும்

மீன் சின்னத்துக்கே உங்கள் வாக்கு

தம்பிராஜா சுபத்திரன் (றொபேட்)

சுயேச்சைக் குழு

ஈ.பி.ஆர்.எல்.எவ்.

(93926)

# புலிகளைத் திருப்திப்படுத்தும் தீர்வையே தமிழ் மக்களும் ஏற்பர்

## முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர் கூறுகின்றார்

கொழும்பு,நவ.18

விடுதலைப் புலிகளைத் திருப்திப்படுத்தக்கூடிய ஓர் அரசியல் தீர்வையே இனப்பிரச்சினை விடயத்தில், தமிழ் மக்களும் ஏற்றுக்கொள்வர். முஸ்லிம் காங்கிரஸின் யாழ்.மாவட்ட வேட்பாளர் ஞா.ஆனந்தகுமார் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கில் இருந்து இடம்பெயர்ந்து புத்தளத்தில் வாழும் முஸ்லிம்களிடையே உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

சிங்கள அரச இனவாதங்களே தமிழ் இளைஞர்களை ஆயுதம் ஏந்திப் போராட வைத்தன. போராட்டத்தின் சூத்திரதாரிகளாக சிங்களப் பேரினவாதிகள் இருக்கும்போது உரிமைக்காகப் போராடுபவர்களை எப்படிப் பயங்கரவாதிகளாக முத்திரை குத்தமுடியும். தமிழ் மக்களின் விடுதலைக்கான புலிகளின் ஆயுதப் போராட்டம் நியாயமானதே.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

சிங்களப் பேரினவாத அரசுகள் இன்று முஸ்லிம் மக்கள் மீதும் தங்களது அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்துவிட்டிருக்கின்றன. மாவனல்ல மற்றும் மருதானைப் பள்ளிவாசலுக்கு முன் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களின்போது அரசு நடந்துகொண்டமுறை இதற்கு நல்ல உதாரணமாகும். சில சந்தர்ப்பவாத அரசியல்வாதிகள் தங்களின் சுயநல அரசியலுக்காக உலக நாடுகளுக்குச் சென்று பேசி விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் ஆக்கியிருக்கலாம். இந்த நிலை நீக்கப்பட்டுத் தமிழர் விடுதலைப் போராட்டம் உலக அரங்கில் நியாயப்படுத்தப்படவேண்டும். அதற்கான குரலாக நான் நிற்பேன். எனக்கு அரசியல் மூலம் இலாபம் தேடவேண்டிய அவசியம் இல்லை. நாடாளுமன்றம் செல்லக்கூடிய வாய்ப்புக் கிடைத்தால் சுயநலமில்லாமல் நேர்மையாகவும் இதயசுத்தியுடனும் செயற்படுவேன்.

இன்று வடபுலத்து முஸ்லிம்கள் தங்களின் தாயகப் பிரதேசமான யாழ்ப்பாணத்தை விடுத்துப் புலம்பெயர்ந்து வாழ்கின்றார்கள். அதுபோல் யாழ்ப்பாணத்தை மரபுவழித் தாயகமாகக் கொண்ட தமிழர்களும் வன்னிக் காடுகளில் தஞ்சம் புகுந்து சொல்லொணாத் துயரங்களுக்கு

(15 ஆம் பக்கம் பார்க்க)

### தென்மராட்சி அதிபர்கள் கூட்டம்

தென்மராட்சி,நவ.18

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் எதிர்வரும் 20ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு வலய அலுவலகத்தில் நடைபெறும்.

பாடசாலையின் சம்பளப் பட்டியல் பிரகாரம் ஆசிரியர்களின் எண்ணிக்கை (ஆசிரிய கலாசாலைக்குச் சென்றோர், பகுதிநேர ஆசிரியர்கள் உள்ளடங்கலாக)-

கல்விசாரா ஊழியர்கள் விவரம் (அமைய நிவாரண ஊழியர்கள் உட்பட) -

தரம் 9 பொதுப் பரீட்சைக்கான புள்ளிப் பதிவுப் படிவம் -

ஆகியவற்றை தம்மோடு எடுத்து வருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அதிபர்களுக்கு அறிவித்துள்ளார். (ஐ-117)

### தொற்று நோய் தடுப்பு நிகழ்ச்சித் திட்டம்

யாழ்ப்பாணம்,நவ.18

யாழ் றோட்டறிக் கழக ஆதரவுடன் யாழ்.பல்கலைக்கழக சமுதாய மருத்துவத்துறை மாணவர்கள் ஏற்பாடுசெய்துள்ள தொற்று நோய்கள் பரவுவதைக் கட்டுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம் இன்று கொட்டடி நமசிவாயம் வித்தியாலயத்தில் இடம்பெறும். இதில் உணவு கையாளும் முறை பற்றிய விளக்கங்களும், தனிநபர் சுகாதாரம் பற்றிய விளக்கங்களும் அளிக்கப்படவுள்ளன.

இத்திட்டத்தின் ஒரு பகுதியாக யாழ். றோட்டறிக் கழகம் கொட்டடிப் பகுதியிலுள்ள பொதுக் கிணறுகளைச் சுற்றி மறைப்பு வேலிகளை அமைக்க முன்வந்துள்ளது. (ம)

### பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,நவ.18

அராலி சரஸ்வதி மகாவித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய அதிபர் திருமதி கோ.அம்பலவாணர் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் யாழ்.பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். சங்கானைக் கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.செல்லையா சிறப்புவிருந்தினராகக் கலந்துகொள்வார். திருமதி இராசலட்சுமி பாலசுந்தரம் பிள்ளை பரிசில்களை வழங்குவார். (ஐ-7)

### அதிபர்கள் கூட்டம்

வலிகாமம்தெற்கு,நவ.18

உடுவில் கல்விக் கோட்ட பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் நாளை திங்கட்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் உதவிக் கல்விப் பணிப்பாளர் அ.தற்பரானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஐ-152)

### வடபகுதி மக்களுக்கு ஜனாதிபதி உரை

யாழ்ப்பாணம்,நவ.18

ஜனாதிபதி சந்திரிகா குமரதுங்க எதிர்வரும் 24ஆம் திகதி சனிக்கிழமை செய்மதி மூலம் வடபகுதி மக்களுக்கு உரையாற்றுவார் என இணையத் தளச் செய்தி ஒன்று தெரிவித்தது. (உ.)


## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 25 - 03 - 1943 | மறைவு 23 - 10 - 1998

### அமரர் கந்தையா தயாபரன்

(சங்கானை ப.நோ.கூ.சங்கம், சங்கானை)

திதி: 18.11.2001

நீண்டதொரு வரலாற்றில் என்றும்
உற்றாரும் சுற்றத்தாரும் வாழ்த்திட
நிலையான வாழ்வு வாழ்ந்திட்ட
என் இதயத் தெய்வமே!
வாழ்வில் தனியாய் எமக்கெல்லாம்
உறுதுணையாக வாழ்ந்து காட்டிய
எங்கள் பெருந்தகையே!
பேரோடும் புகழோடும் சென்றீர்கள்!
ஆனாலும்......
ஆறவில்லை என் துயரம்
என்றென்றும் உங்கள் நினைவை
ஏற்றிவைப்போம் நம் நினைவில்.

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி
மகேஸ்வரி.

உடுவில் பிராய். (94623)

## ஜேர்மனியில் திருமணம்

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விஷு வருஷம் கார்த்திகைத் திங்கள் 3ஆம் நாள் (18.11.2001) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 11.25 மணிமுதல் பிற்பகல் 13.05 வரை உள்ள சுபமுகூர்த்த வேளையில்

திருநிறைசெல்வன் **சிவதாசன்** அவர்களுக்கும்



திருநிறைசெல்வி **வாசுகி** அவர்களுக்கும்

தெய்வத்திருவருளை முன்னிட்டு BEGEGNUNGSSTATTE, TAL, STR. 3, 38642 GASLAR-OKER மண்டபத்தில் திருமணம் நடைபெறும் என்பதை எமது உறவினர்கள், நண்பர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

திரு.திருமதி கந்தர்,
மிருசுவில் வடக்கு,
(C/19354) மிருசுவில்.

திரு.திருமதி சிவசம்பு,
"ரதிவாசம்"
மீசாலை கிழக்கு, மீசாலை.

(இரு வீட்டார் அழைப்பு)

## துயர் பகிர்கின்றோம்

நவீல்ட் செவிப்புலனிழந்தோர் பாடசாலை பழைய மாணவர் சங்கக் கணக்குப் பரிசோதகரும், நவீல்ட் பாடசாலைக் கணக்காளருமான

### வேதநாயகம் பீற்றர் தேவதாஸ்

அவர்கள் காலமானதையிட்டு மீளாத்துயரில் ஆழ்ந்திருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு. எமது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(94629) நவீல்ட் பழைய மாணவர் சங்கம்,
கைதடி.

## கண்ணீர் அஞ்சலி

### வேதநாயகம் பீற்றர் தேவதாஸ்

யாழ். மறை மாவட்ட மரியாயின் சேனை கொமிற்சிய போஷகராக ஐந்து அண்டுகள் சேவை புரிந்தவரும், யாழ். புனித யுவானியார் ஆலய மரியாயின் சேனைச் சிருஷ்டிகரின் மாதா பிரசீடியத்தின் தலைவராக அர்ப்பணத்துடனும், நல்உள்ளத்துடனும் மரியாயின் சேனைக்கு ஊழியம் செய்தவருமான ஓர் உத்தம சேவையாளரை மரியாயின் சேனை இழந்து தவிக்கின்றது.

### வேதநாயகம் பீற்றர் தேவதாஸ்

அவர்களின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (94627)

மரியாயின் சேனையாளர்,
புனித யுவானியார் ஆலயம்.

## மரண அறிவித்தல்கள்

### மு.சண்முகலிங்கம்

காரைநகர் செம்பாடு தங்கோடையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் முன்னாள் அ.மு.கடை (பதுளை) உரிமையாளருமான மு.சண்முகலிங்கம நேற்று (17.11.2001) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் முருகேசு தம்பதியினரின் அன்பு மகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், பொன்னுடையார் நாகலிங்கத்தின் அன்பு மருமகனும், சுந்தரமூர்த்தி, மகேஸ்வரி ஆகியோரின் சகோதரரும், கமலாதேவி, சிவபாக்கியம், சோமசுந்தரம், மீனாட்சிசுந்தரம், இந்திராதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஞானசுந்தரம், ஞானம்பாள், ஞானசேகரம் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சாரதாதேவி, K.C.கந்தசாமி (C.T.B), மௌனராணி ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.11.2001) ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் சாம்பலோடை மயானத்தில் தகனஞ்செய்யப்படும் என்பதை அறியத்தருகிறோம்.

செம்பாடு,
தங்கோடை, காரைநகர். (93928)

தகவல்:
ஞானசேகரம் (மகன்)

### கந்தையா நாகரட்ணம் (ராணி)

மட்டக்களப்பு ஏறாவூரைப் பிறப்பிடமாகவும், ஈச்சமோட்டையை வசிப்பிடமாகவும், கொழும்புத்துறை சிலாபத்தைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நாகரட்ணம் நேற்று (17.11.2001) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை கந்தையாவின் அன்பு மனைவியும், தெய்வேந்திரம் (படப்பிடிப்பாளர், சங்கீதா போட்டோ), பூரணம், ரவிச்சந்திரன் (சிலாபம்), சந்திரகுமார் (ஜேர்மனி), தேவகுமார் (டோகா), சாந்தி (மன்னார்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ராகினி, செல்வரட்ணம், சாந்தினி, யூட் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.11.2001) திங்கட்கிழமை 116, கொழும்புத்துறை சிலாபத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

1/7,புது வீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம். (94642)

தகவல்:
க. தெய்வேந்திரம் (மகன்)
(சங்கீதா போட்டோ)

### வேதநாயகம் பீற்றர் தேவதாஸ்

(கணக்காளர் - நவீ(f)ல்ட் பாடசாலை, கைதடி)
(பொருளாளர் - புனித மரியாளின் சேனை யாழ். மாவட்டம்)
(தலைவர் - மரியாளின் சேனை, புனித யுவானியார் ஆலயம்)

நாரந்தனையைப் பிறப்பிடமாகக்கொண்ட வேதநாயகம் பீற்றர் தேவதாஸ் 14.11.2001 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிலிப்வேதநாயகம் - விலீனாமுத்து வேதநாயகம் ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சந்தியாப்பிள்ளை நல்லையா (ஆசிரியர்) - செபஸ்ரியம்மா யோகரட்ணம் தம்பதியினரின் பாசமிகு மருமகனும் காலஞ்சென்ற லூட்ஸ் மாகிறட் (சறோஜினி) அவர்களின் அன்புக் கணவரும் விஜித்தா குயின்ரஸ், விஜயதாஸ் (ஆஸ்திரேலியா), விஜேந்திரா, விஜயராஜ் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் திருஞானம் குயின்ரஸ் (விரிவுரையாளர், பலாலி ஆசிரியர் கலாசாலை), ஸ்ரெலா (ஆஸ்திரேலியா), சுகந்தி ஆகியோரின் மாமனாரும் தனுஷன் (புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்), கீர்த்திகா, நிஜே (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பேரனும் திருமதி செல்வராஜா மரிஸ்ரலா (வவுனியா), காலஞ்சென்ற மரியதாசன் (மலேசியா), ஹெலன் (கனடா), ஜேசுதாசன் (கனடா) ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற செல்வராஜா (G.S., வவுனியா), லோகி (கனடா), ஞானானந்தன் (கனடா), ஞானராணி (கனடா), டன்ஸ்ரன் (லண்டன்), காலஞ்சென்ற பஸ்ரியன் (பிரான்ஸ்), றெமி தேவசகாயம் (New Victors - ஆஸ்திரேலியா), அன்ரன் (லண்டன்), ஞானம் (லண்டன்), சாள்ஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்க ஆராதனைக்காக நாளை (19.11.2001) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து புனித யுவானியார் ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, இறுதி நல்லடக்கம் புனித மரியாளின் சேமக்காலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

28/1, சோமசுந்தரம் அவெனியூ,
சண்டிக்குளி.
T.P. - 2379. (94645)

தகவல்:
திருஞானம் குயின்ரஸ்
(மருமகன்)

# ராணுவத் தலைநகர் கந்தகாரையும் தலிபான் படையினர் கைவிட்டனர்!

பெஷாவர்,நவ.18

தமது வலுக்கோட்டையாகத் திகழ்ந்த கந்தகாரிலிருந்து தலிபான்கள் பின்வாங்கிச் செல்லத் தொடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. தலைவர் முல்லா முஹமட் ஓமரின் உத்தரவை அடுத்தே தலிபான்கள் கந்தகாரைக் கைவிட்டு பின்வாங்குவதாகக் கூறப்படுகிறது.

உள்ளூர் பஸ்தூன் இனத் தலைவர்களிடம் கந்தகார் நகரின் கட்டுப்பாட்டை ஒப்படைத்துவிட்டு, தலிபானகளை அங்கிருந்து வெளியேறுமாறு முல்லா முஹமட் ஓமர் உத்தரவிட்டதாகவும் -

அதற்கு இணங்கியே கந்தகாரிலிருந்த ஆயிரக்கணக்கான தலிபான் படையினர் வெளியேறத் தொடங்கியுள்ளதாகவும் - ஆப்கான் செய்தி நிறுவனம் தெரிவித்தது.

மூன்று பக்கங்களும் உயரமான மலைப் பகுதிகளாலும், ஒரு புறத்தால மட்டுமே தரைவழியாக உள்நுழையக் கூடியதுமான கந்தகார் நகரம் தலிபான்களுக்கு முழுப் பாதுகாப்பான வலுக்கோட்டையாக இருந்தது; அத்துடன் தலிபான்களின் இராணுவத தலைநகர் என்றும் கருதப்பட்டு வந்தது. ஆனாலும் அமெரிக்க விமானங்களின் வான் தாக்குதலை அடுத்து காபூல் உட்பட தமது வலுவான நிலைகளில் இருந்து பின்வாங்கிவரும் தலிபான்கள் இறுதியில் கந்தகாரையும் கைவிட்டுச் செல்கின்றனர். இதற்கிடையில், நேற்று குண்டுஸ் நகரில் வடக்குக் கூட்டணிப் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டுள்ள தலிபான் நிலைகள் மீது அமெரிக்க விமானங்கள் குண்டுவீசின. இங்கு சுமார் மூவாயிரம் தலிபான் வீரர்கள் சிக்கியிருப்பதாகக் கருதப்படுகிறது. (ஒ)

# பாகிஸ்தானியப் பழங்குடியிடம் ஒஸாமா பின்லேடன் தஞ்சம்?



தெஹ்ரான்,நவ.18

இஸ்லாமியத் தீவிரவாதி ஒஸாமா பின்லேடன் ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேறி, பாகிஸ்தானின் பழங்குடிப்பிரதேசத்துக்குள் நுழைந்திருக்கக் கூடும் என்று ஈரான் வனொலி நேற்றுத் தெரிவித்தது. ஆனால் பாகிஸ்தானிய அரசு இதனை முற்றாக மறுத்துவிட்டது.

ஆப்கானிஸ்தான் எல்லை அருகே அமைந்துள்ள - பாகிஸ்தானியப் பழங்குடியினர் வசிக்கும் பிரதேசங்கள் பெயரளவில் மட்டுமே இஸலாமபாத் ஆட்சிக்கு கட்டுப்பட்டிருப்பதாகவும் -

ஆனால் எத்தகைய அரசு இஸ்லாமபாத்தில் இருந்தாலும், பழங்குடிப் பிரதேசங்களில் பழங்குடித் தலைவர்களின் ஆட்சியே நடத்தப்படுவதாகவும் - கூறப்படுகிறது.

பாகிஸ்தானியப் பழங்குடியினர் ஒஸாமா பின்லேடனுக்கு முழு ஆதரவு அளித்து வரும் நிலையில், அந்தப் பகுதியே பின்லேடன் மறைந்து வாழ தற்போது உகந்த இடமென்று கருதப்படுகிறது.

இவற்றைச் சுட்டிக் காட்டிய ஈரான் வானொலி, ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் பின்னடைவைச் சந்தித்து வரும் இந்த வேளையில் பின்லேடன் பாகிஸ்தானியப் பழங்குடிப் பிரதேசத்துக்குள் நுழைந்திருக்க அதிக வாய்ப்பிருப்பதாக கருத்து வெளியிட்டது. (ஒ)

# சரணடையும் தலிபான் வீரர்களை வடக்குக்கூட்டணி கொன்று குவிப்பு!

லண்டன்,நவ.18

சரணடையும் தலிபான் படைவீரர்களை வடக்குக்கூட்டணியினர் கொன்று குவித்து வருவதாக ஐ.நா.குற்றஞ் சாட்டியுள்ளது.

வடக்கு ஆப்கானிஸ்தானிய நகரான மஷார் - ஏ - ஷெரீபை தலிபான்களிடமிருந்து கைப்பற்றிய வடக்குக்கூட்டணிப் படைகள், அங்கு சரணடைந்த தலிபான்களைச் சுட்டும், வெட்டியும் கொன்றதாக நேரில் கணடவர்கள் தெரிவித்தாக ஐ.நா.அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தலிபான்களின் வலுக்கோட்டையாக இருந்த, வடக்கு ஆப்கானின் பிரதான நகரான மஷார் - ஏ - ஷெரீபை கடந்த வாரம் வடக்குக் கூட்டணி கைப்பற்றியபோதே மனிதப் படுகொலைகள் அதிகளவில் இடம பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆயினும் இதனை வடக்குக் கூட்டணி மறுத்துள்ளது. வடக்குக்கூட்டணியின் பிராந்தியத் தளபதி மொகமட் மொஹாகெக் இது தொடர்பாகக் கூறுகையில் -

தம்மிடம் பிடிபட்ட தலிபான் வீரர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கியிருப்பதாகவும் - மோதலின்போது தலிபான்கள் சரணடைவதற்கு சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டதாகவும் -

அதையும் மீறி வடக்குக்கூட்டணிப் படைகளுடன் மோதிய பாகிஸ்தானியப் போராளிகள் அடங்கிய தலிபான் வீரர்களில் 520 பேர் மோதலில் கொல்லப்பட்டதாகவும் - தெரிவித்தார்.



நிச்சயமற்ற எதிர்காலத்துடன் கைதாகிச் செல்லும் தலிபான்கள்.

ஆனால், வடக்குக்கூட்டணியினரிடம் சரணடைந்த பின்னரே தலிபான்கள் கொல்லப்பட்டதாக ஐ.நா. அறிக்கைகள் தெரிவித்தன.

மஷார் - ஏ - ஷெரீபில் காயம் பட்ட தலிபான்கள் தங்கியிருந்த பாடசாலை கட்டமொன்றை வடக்குக் கூட்டணிப் படைகள் டாங்கிகளால் தரைமட்டமாக்கியதாக தலிபான் குற்றஞ்சாட்டியுள்ளது.

அதில் தங்கியிருந்தவர்கள் சரணடைவதற்கோ அல்லது அங்கிருந்து வெளியேறுவதற்கோ அவகாசம் தரப்படாமல், கட்டடத்துடன் சேர்த்து நசுக்கிக் கொல்லப்பட்டதாக தலிபான் தெரிவித்தது.

இதேவேளை -

வடக்குக்கூட்டணி பிடித்த இடங்களில் சட்டம், ஒழுங்கு முற்றாக அறுறுப் போய்விட்டதாகவும -

ஆயுதம் தாங்கியவர்கள் வீடுகளையும் வர்த்தக நிலையங்களையும் சூறையாடி வருவதாகவும் - பிரிட்டிஷ் ஐ.ரி.என். தொலைக்காட்சிச் செய்தியாளர் அன்ட்ரு கதர்வூட் தெரிவித்துள்ளார். (ஒ)

## சரணடைய விரும்புவதாக வீரப்பன் அனுப்பிய ஒளிநாடா



சென்னை,நவ.18

சந்தன மரக் கடத்தல்காரன் வீரப்பன் சரணடைய விரும்பம் தெரிவித்து ஒளிநாடா ஒன்றை தமிழகப் பத்திரிகை ஆசிரியர் ஒருவருக்கு அனுப்பி வைத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

அரசியல் வார இதழான 'நெற்றிக்கண்' பத்திரிகை ஆசிரியர் மணி தனக்கு வீரப்பன் அனுப்பிய அந்த ஒளிநாடாவை நேற்றுச் சென்னையில் செய்தியாளர்களிடம் போட்டுக்காட்டினார். இந்த ஒளிநாடா குறித்து முதலமைச்சர் பன்னீர் செல்வத்திடம் தான் தெரிவித்ததாகவும் -

ஆனால் இதுவரை அரசிடம் இருந்து பதிலேதும் கிடைக்கவில்லை என்றும் - மணி அப்போது கூறினார்.

செய்தியாளர்களிடம் போட்டுக் காட்டப்பட்ட ஒளிநாடாவில் -

தன்னைப் பிடிப்பதற்கு காட்டுக்கு அனுப்பப்பட்ட தமிழக - கர்நாடகக் கூட்டு அதிரடிப்படையினர் தமது தேடுதல் பணிகளை நிறுத்தவேண்டும் என்றும் - வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள் மூலம் இதனை அறிவித்த பிறகு, தான் சரணடையும் திகதி, இடம் பற்றித் தெரிவிப்பதாகவும் - வீரப்பன் கூறியுள்ளான். சரணடையும் போது பொது மன்னிப்பு கோரப்போவதாகத் தெரிவித்துள்ள வீரப்பன், செய்தியாளர்கள் தன்னைச் சந்திக்க விரும்பினால் அதற்கு ஒழுங்கு செய்துதருவதாகவும் குறிப்பிட்டுள்ளான். (ஒ)


## கறுப்பும் ஓர் அழகுதான்...!



வெள்ளை இனப் பெண்களும், மிஞ்சிப்போனால் இந்திய மங்கைகளும் சுவீகரித்துக் கொண்ட உலக அழகிப் பட்டத்தை எவரும் எதிர்பார்க்காத வகையில் தட்டிச் சென்ற ஆபிரிக்கக் கறுப்பின அழகி அக்பானி டரேகேவை பாராட்டி மகிழும், போட்டியில் கலந்துகொண்ட பிறநாட்டு அழகிகள்.

நைஜீரியாவின் அக்பானி டரேகோ

# உலக அழகிப் பட்டம்வென்ற முதல் ஆபிரிக்க கறுப்பின அழகி




சன்சிற்றி,நவ.18

உலக அழகிப்பட்டம் வென்ற முதல ஆபிரிக்க கறுப்பின அழகி என்ற பெருமையை நைஜீரிய நாட்டு அழகி ஆக்பானி டரேகோ பெற்றார்.

தென்னாபிரிக்க நகரான சன்சிற்றியில் நேற்றுமுன்தினமிரவு இடம்பெற்ற 90 நாடுகளின் அழகிகள் பங்குபற்றிய 2001 ஆம் ஆண்டுக்கான உலக அழகிப் போட்டியிலேயே அக்பானி பட்டம் வென்று முடிசூடிக் கொண்டார்.

கணனி விஞ்ஞானத்துறை மாணவியான 18 வயது அக்பானி உலக அழகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதும் கரகோஷங்களாலும், ஆரவாரத்தாலும் போட்டி இடம பெற்ற அரங்கம் அதிர்ந்தது.

90 நாடுகளுக்கும் மேற்பட்ட அழகிகளில் - தொலைக்காட்சி நேயர்களின் வாக்களிப்பின் அடிப்படையில் - 10 அழகிகள் முதற்கட்டமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களில் அக்பானியை உலக அழகியாக போட்டி நடுவர்கள் தெரிவுசெய்தனர்.

உலக அழகியாக முடி சூடிக் கொண்டதும் 'மிகமிக மகிழ்ச்சிகரமான, வார்த்தைகளால் விவரிக்க முடியாத தருணம் இது. எனது நாடான நைஜீரியாவில் எனது வீட்டில் என்னை எதிர்பார்த்துக் காத்திருப்பவர்களை பெருமைப்படுத்திவிட்டேன்' என்று ஆனந்தக் கண்ணீருடன் அக்பானி கூறினார்.

போட்டியின் பின்னர் அவரது எதிர்காலத் திட்டம் பற்றிக் கேட்கப்பட்டபோது, 'நான் நிலைக் கண்ணாடி முன்பாக நிற்கும் போது கணனி விஞ்ஞானியாகவும் - அதேசமயம் பிரபல 'மொடலா'கவும் ஆக விரும்பும் இளமையான ஓர் இளம் பெண்ணையே காண்கிறேன்' என்று அக்பானி பதிலளித்தார்.

உலக அழகிப்பட்டம் வெல்லும் நான்காவது ஆபிரிக்க அழகி அக்பானி ஆவார். ஆயினும் இவரே இந்தப்பட்டத்தை வென்ற முதலாவது ஆபிரிக்கக் கறுப்பின அழகி.

1959 மற்றும் 1974 ஆகிய ஆண்டுகளில் தென்னாபிரிக்காவைச் சேர்ந்த வெள்ளையின அழகிகளும், 1954 ஆம் ஆண்டில் எகிப்தைச் சேர்ந்த அரபு அழகியொருவரும் உலக அழகிப்பட்டம் வென்றிருந்தனர்.

இதேவேளை, 1970 ஆம் ஆண்டிலிருந்து உலக அழகிப் போட்டிகளுக்கு - அது பெண்களை தரம் தாழ்த்துவதாகக் கூறி - எதிர்ப்புத் தெரிவித்து வந்த பெண்ணியல்வாதிகள், சிறுவர்கள் குறித்து பிரச்சினைகளில் நிதி திரட்டவும், விழிப்புணர்ச்சியை உருவாக்கவும் தற்போது உலக அழகிப் போட்டி பயன்படுவதால், தமது எதிர்ப்பை இந்த வருடம் கைவிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

பலஸ்தீனருக்குச் சாதகமான

# பெரஸின் ஐ.நா. உரைக்கு இஸ்ரேலில் கடும் எதிர்ப்பு

லண்டன்,நவ.18

பெரும்பாலான இஸ்ரேலியர்கள் பலஸ்தீன இராச்சியம் உருவாவதை ஆதரிப்பதாக இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சர் சிமொன் பெரஸ் ஐ.நா. சபையில் தெரிவித்தார்.

இதனால் இஸ்ரேலிய அரசியல் தலைவர்களின் கடும் எதிர்ப்புக்கு பெரஸ் இலக்காகியுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் பெரஸ் 20 நிமிடம் உரையாற்றினார்.

பலஸ்தீனர்களின் சுதந்திரத்தைப் பெரும்பாலான இஸ்ரேலியர்கள் அங்கீகரிப்பதாகவும் -

பலஸ்தீனர்களுக்கு தனி நாடொன்று அமைவதற்கு அவர்கள் ஆதரவளிப்பதாகவும் - அப்போது பெரஸ் குறிப்பிட்டார். ஆனாலும் இது இஸ்ரேலிய அரசின் கொள்கை அல்ல என்று அவர் வலியுறுத்தினார்.



சிமொன் பெரஸுடன் கோபி அனான்

இதனாலேயே பெரஸ் கடும் எதிர்ப்பையும் விமர்சனத்தையும் எதிர்கொண்டுள்ளார்.

இஸ்ரேலிய அமைச்சரவை பெரஸைப் பதவி விலகும்படி கோரியுள்ளது.

ஆனாலும் பிரதமர் ஏரியல் ஷெரோன் இது தொடர்பாகக் கருத்து எதனையும் தெரிவிக்கவில்லை. ஆகவே பெரஸின் கருத்துக்கு பிரதமரின் ஆதரவு இருப்பதாகக் கருத வேண்டியிருப்பதாக இஸ்ரேலிய ஊடகங்கள் தெரிவித்துவருகின்றன.

இஸ்ரேலிய கூட்டணி அமைச்சரவை பலஸ்தீன விவகாரம் தொடர்பாக பிளவுபட்டு நிற்பதையே இந்தச் சர்ச்சை எடுத்துக்காட்டுவதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

இது ஒருபுறமிருக்க, மத்திய இஸ்ரேலின் ரமேல் நகரில் பலஸ்தீனர் ஒருவரைச் சுட்டுக்கொன்ற இஸ்ரேலியப் பொலீஸார், மற்றொரு பலஸ்தீனரைக் காயப்படுத்தியதாகவும் -

பலஸ்தீனப் பிரதேசமான காஸாவில் இஸ்ரேலிய இராணுவத்தின் டாங்கிகள் பலஸ்தீனப் பொலீஸ் நிலையம் மற்றும் பண்ணை வீடு ஆகியவற்றைத் தகர்த்ததாகவும் - தெரிவிக்கப்பட்டது. (ஒ)

3ஆயிரம் ரூபா சம்பள உயர்வு கோரி

# வேலைநிறுத்தத்தில் குதிப்பதற்கு அரச தொழிற்சங்கங்கள் முஸ்தீபு

கொழும்பு,நவ.18

எதிர்வரும் முதலாம் திகதி முதல் நாடு முழுவதும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவதற்கு அரசாங்கத் தொழிற்சங்கங்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றன.

அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ப தமக்கு வழங்கப்படும் மாதாந்தச் சம்பளத்தை மேலும் 3 ஆயிரம் ரூபாவால் அதிகரித்து வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தே தாம் இந்த வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் -

நாடு முழுவதும் தாம் நடத்தவுள்ள இந்த வேலைநிறுத்தப் போராட்டத்தில் சுமார் 170 அரசாங்க தொழிற்சங்கங்கள் ஈடுபடவுள்ளதாகவும் -

அரசாங்கத் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-6)

# பொதுநலவாய அமைப்பின் பிரதிநிதிகள் தேர்தல் கண்காணிப்புக்கு வரமாட்டார்கள்

## பணத்தையும் காலத்தையும் வீண்விரயம் செய்யும் வேலையாம்

கொழும்பு,நவ.18

பொதுத் தேர்தலைக் கண்காணிக்க பொதுநலவாய அமைப்பின் பிரதிநிதிகள் இலங்கை வரமாட்டார்கள்.

தேர்தல் கண்காணிப்பில் ஈடுபடுவதால் எந்தப் பயனும் ஏற்படுவதில்லை என்று அவர்கள் கருதுவதே இதற்கான காரணம் என்று கூறப்படுகின்றது.

பொதுநலவாய அமைப்பின் பிரதிநிதிகள் இம்முறை தேர்தலைக் கண்காணிக்க இங்கு வரமாட்டார்கள் என்ற தகவலை ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்களே வெளியிட்டன.

அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

பொதுத் தேர்தலைக் கண்காணிக்க இலங்கை வரவிருக்கும் சர்வதேச பிரதிநிதிகள் குழுவில் பொதுநலவாய அமைப்பின் பிரதிநிதிகள் இடம்பெறமாட்டார்கள்.

2000 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின்போது இடம்பெற்ற வன்முறைகள், மோசடிகள், அதிகார துஷ்பிரயோகங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாக பொதுநலவாய அமைப்பினால் அறிக்கைகளும் சிபாரிசுகளும் சமர்ப்பிக்கப்பட்டன. அவை குறித்து எந்தவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. இதற்கெனப் பல ஆயிரம் டொலர்கள் செலவிடப்பட்டன. எனவே பிரயோசனமற்ற ஒரு செயலில் மீண்டும் ஈடுபட்டு, காலத்தையும் பணத்தையும் வீண்விரயம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

இப்படிக் கருதியே பொதுநலவாய அமைப்பின் பிரதிநிதிகள் இம்முறை தேர்தல் கண்காணிப்புப் பணியில் கலந்துகொள்ளாமல் தவிர்த்து விட்டனர். - என்று தெரிவிக்கப்பட்டது. (உ)




## பொதுத் தேர்தல் - 2001

**மலரும் ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியில்.....!**

குடாநாட்டு அரச ஊழியர்களின் நல்வாழ்வு சிறக்கும்.

★ அனைத்து அரச ஊழியர்களின் இடர்காலக் கொடுப்பனவு முழுமையாக - தாமதமின்றி - முழு நிலுவைகளுடன் மூன்று மாத காலத்துக்குள் சேர்த்து வழங்கப்படும்.

★ அரச ஊழியரின் சம்பள நிலுவைகள், சம்பள உயர்வுகள், பதவி உயர்வுகள் வழங்குவதிலுள்ள தாமதம் நீக்கப்படும்.

★ எந்தவித அரசியல் தலையீடுகளும் இன்றி - கட்சி முகாம்கள், அலுவலகங்களுக்குச் சென்று கைகட்டிச் சேவகம்புரியாமல் - சுயாதீனமாக - தமது மனச்சாட்சிப்படி - நீதி, நியாயப்படி - அரச ஊழியர்கள் பணியாற்றுவதற்கான சூழ்நிலை மீண்டும் ஏற்படுத்தப்படும்.

★ வன்செயல் பாதிப்பு நஷ்டஈடு சகல அரச ஊழியர்களுக்கும் சமச்சீராகக் கிடைப்பது உறுதி செய்யப்படும்.

★ அரச ஊழியர்கள் தமது போக்குவரத்து 'வாரண்ட்டை' பயன்படுத்தக்கூடிய வழமை நிலை ஏற்படுத்தப்படும்.

★ ஊழலற்ற அரச நிர்வாக இயந்திரம் அரசியல் தலையீடின்றி - லஞ்ச லாவண்யமின்றி - இயங்குவது உறுதி செய்யப்படும்.

★ வாழ்க்கைச் செலவுக்கேற்ப சம்பள உயர்வு வழங்கப்படும்.

**தி.மகேஸ்வரன்,**
முதன்மை வேட்பாளர்,
யாழ்.மாவட்டம்.

(C/19355)

**ஐக்கிய தேசியக் கட்சி** X 4


# இரண்டாவது நாளாக டாக்டர்கள் வேலைநிறுத்தம்

கொழும்பு,நவ.18

அரச வைத்திய அதிகாரிகளின் வேலைநிறுத்தம் நேற்று இரண்டாவது நாளாகத் தொடர்ந்தது.

மருத்துவப் பட்டம் பெறாதவர்களை மருத்துவச் சேவையில் இணைக்கும் அரசின் முடிவைக் கைவிடவேண்டும் என்று கோரியே வைத்திய அதிகாரிகள் சங்கம் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளது.

வெள்ளிக்கிழமை மட்டும் அடையாள வேலைநிறுத்தம் செய்ய அவர்கள் திட்டமிட்டிருந்தனர். ஆனால் வெள்ளி மாலை சுகாதார அமைச்சு அதிகாரிகளுடன் நடத்தப்பட்ட பேச்சுக்கள் தோல்வியடைந்ததை அடுத்து அவர்கள் நேற்றும் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இதனால் பெரும்பாலான வைத்திய சேவைகள் சீர்குலைந்தன. அவசர சிகிச்சைகள் மட்டுமே மேற்கொள்ளப்பட்டன. (ம)

## முன்னாள் அமைச்சர் மொண்டெகு நேற்று மரணமானார்

கொழும்பு,நவ.18

முன்னாள் அமைச்சரும் ஐ.தே. கட்சிப் பிரமுகருமான மொண்டெகு ஜெயவிக்கிரம நேற்று அதிகாலை மரணமானார். அவருக்கு 91 வயது.

1947ஆம் ஆண்டு அரசியலில் பிரவேசித்த இவர் வெலிகமத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராகப் பல ஆண்டுகள் இருந்து வந்தார். (உ)

## கணிப்பீட்டு அறிக்கை வழங்கலும் பரிசளிப்பும்

நல்லூர் சயன்ஸ் அக்கடமியின் பரிசளிப்பு விழாவும் கணிப்பீட்டு அறிக்கை வழங்கும் நிகழ்வும் இன்று பிற்பகல் 3.15 மணிக்கு இயக்குநர் சரா.புவனேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக மல்லாகம் மகாவித்தியாலய சிரேஷ்ட ஆசிரியர் எஸ்.சோதிலிங்கம் கலந்து கொள்வார். (ம)

## கிருமிநாசினி விசிறியவர் மயங்கினார்

பயிற்றங்கொடிக்கு கிருமிநாசினி விசிறிய இளைஞர் மயக்கமடைந்த நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் கொடிகாமம் பாலாவிப் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த ரங்கநாதன் சிவகுமார் (வயது17) என்னும் இளைஞரே அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-117)

## வாதுவையில் சிங்கள இளைஞனும் கைது!

வாதுவையில் 27 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டது தொடர்பாக சிங்கள இளைஞன் ஒருவரையும் வாதுவ பொலீஸார் கைது செய்துள்ளனர்.

தமிழ் இளைஞர்கள் தங்குவதற்கு இடம்பெற்றுக் கொடுத்தார் என்ற சந்தேகத்திலேயே முனசிங்க என்ற இந்த சிங்கள இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளான்.

கைதான 27 தமிழ் இளைஞர்களும் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்படுகின்றனர்.(ம)

## அரச ஊழியருக்கு மீண்டுமொரு சம்பள உயர்வு

அரச ஊழியர்கள் மற்றுமொரு சம்பள உயர்வை பெறவிருக்கின்றனர்.

அரச ஊழியர்களின் சம்பள முரண்பாடுகள் குறித்து ஆராய்ந்த திஸ்ஸ தேவேந்திரா தலைமையிலான குழு அடுத்தவாரம் தனது இடைக்கால அறிக்கையை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கவிருக்கின்றது.

அதன் பின்னர் இந்தச் சம்பள உயர்வு குறித்து அறிவிக்கப்படும் என்று கூறப்பட்டது. (ம)


★ தமிழ் மக்களின் இன்னல் தீர....

★ இனப்பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காண....

★ எமது மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கு முடிவு கட்ட....

## ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிப்போம்!



முதன்மை வேட்பாளர்
தி.மகேஸ்வரன்
இல.4



பொ.சிவபாதம்
இல.6



இ.அருணாசலம்
இல.1

**ஐக்கிய தேசியக் கட்சி** X

(C/19356)

உதயன்

## கறைபடியாத வெற்றியை ஈட்டுவதே அழகு!

"வடக்கில் ஆயுதமுனையில் எவரும் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடமுடியாது; மக்களை அச்சுறுத்தவும் அனுமதிக்கப்படமாட்டாது. இத்தகைய செயல்களைத் தடுப்பதற்காக பொலீஸாருக்கு விசேட உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

"கள்ளவாக்குப் போடுவோருக்கு எதிராகவும் கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்."

- இவ்வாறு பொலீஸ் தலைமையகம் அறிவித்திருக்கின்றது.

வடக்கு விவகாரம் சம்பந்தமான பிரத்தியேக அறிவிப்பு இது.

இதுமட்டுமல்லாமல், முழு இலங்கைக்கும் பொதுவான - தேர்தல் தொடர்பான - அறிவுறுத்தல் ஒன்றும் பொலீஸ் மா அதிபரால் சகல பொலீஸ் நிலையங்களுக்கும் விடுக்கப்பட்டுள்ளது.

தேர்தல் சுவரொட்டிகளை ஒட்டுவோர் மற்றும் 'கட் அவுட்' பதாகைகளைக் கட்டுவோர் உடன் கைது செய்யப்படுவர் என்றும் -

இதறகான, கடுமையான உத்தரவு பொலீஸ் மா அதிபரால் விடுக்கப்பட்டிருக்கின்றது என்றும் - தெரிவிக்கப்படுகின்றது.

அசையும் வாகனங்களில் ஒலிபெருக்கிகளைப் பொருத்தி தேர்தல் பிரசாரங்களைச் செய்யக்கூடாது என்பதும் பொதுவான தேர்தல் சட்டவிதி.

ஆனால் -

தேர்தல் பிரசாரங்கள் மற்றும் போஸ்டர் ஒட்டும் நடவடிக்கைகளின் போது பகிரங்கமாக ஆயுதங்களுடன் நடமாடுவது -

மூலைமுடுக்கு எங்ஙனும் போஸ்டர் ஒட்டுவது, பதாகை கட்டுவது -

ஓடும் வாகனங்களில் ஒலிபெருக்கி பூட்டி பிரசாரப்படுத்துவது -

எலலாமே இங்கு "அப்பன் குதிருக்குள் இல்லை" என்ற பாணியில் தொடர் கதையாகத் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

யாழ்.மாவட்டத்தில் தேர்தல் களத்தில் இருக்கும் அரசியல்வாதிகளுக்கு, அவர்களின் கட்சிகள் அல்லது குழுக்களைச் சேர்ந்த தொண்டர்களுக்கு அச்சுறுத்தல் உள்ளது, உயிராபத்து உள்ளது என்பதை மறுக்கமுடியாது. எனவே அவர்களது நடமாட்டத்துக்கு - பாதுகாப்புக்கு - ஆயுதங்கள் வழங்கப்பட்டிருப்பது அரசின் பார்வையில், அக்கட்சியினரின நோக்கில் தவறானதல்ல. அது அவர்களுக்கு வேண்டியதே.

ஆனால் அதைத் தேர்தல் நடவடிக்கைகளில் - பிரசாரச் செயற்பாடுகளில் - தங்களுக்கு மேலதிக அனுகூலமான விடயமாக - ஒரு வசதியாக - அவர்கள பயன்படுத்துகின்றார்களா என்பதுதான் கேள்வி.

அபபடிப் பயன்படுத்தாமல் உறுதிப்படுத்துவதுதான் இப்போது முக்கியமே தவிர, ஆயுதங்களுடன் நடமாடுவதை அரசியல பிரசாரமாகப் பயன்படுத்திக் கூக்குரல் இடுவதல்ல.

இதுதொடர்பான குற்றச்சாட்டு - குடாநாட்டைப் பொறுத்தவரை - ஈ.பி.டி.பியினருக்கு எதிராகவே அதிகம் எழுப்பப்படுகின்றது. ஆனால் அதை ஈ.பி.டி.பி. தலைவர்கள் அடியோடு மறுத்துவருகின்றார்கள்.

1994 பொதுத் தேர்தலிலும், கடந்த ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலிலும் ஈ.பி.டி.பி. ஈட்டிய வெற்றியுடன் தேர்தல் மோசடிகள், தில்லுமுல்லுகள் குறித்துப் பரவலான குற்றச்சாட்டுகள் எழுப்பப்பட்டது தெரிந்ததே.

வெற்றியீட்டியோருக்கு எதிராகத் தோற்றவர்கள் இவ்வாறு கூக்குரல் இடுவது - குற்றம் சுமத்துவது - எல்லாம் வாஸ்தவம்தான் என்றாலும் -

கடந்த இரண்டு பொதுத் தேர்தல்களில் தீவுப்பகுதியிலும், கடந்த பொதுத் தேர்தலில் கண்டியிலும் நடந்தவற்றை இவ்வாறு தோற்றவர்கள், வென்றவர்களுக்கு எதிராகச் சுமத்தும் வழமையான குற்றச்சாட்டாக மட்டும் மக்களும், சர்வதேச உலகமும் கருதவில்லை என்பது பலருக்கும் தெரிந்த உண்மைதான்.

அவ்வாறில்லாமல் கறைபடியாத வெற்றியை ஈட்டுவதுதான் கட்சிகளுக்கு அழகு. தேர்தல் அறிவிப்பின் ஆரம்பத்தில் காட்டும் இத்தகைய நேர் சீரான போக்கை - தேர்தல் முடிந்து வாக்குகள் எண்ணும் பணி பூர்த்தியாகும் வரை - சம்பந்தப்பட்டோர் அனைவரும் கடைப்பிடிக்க வேண்டும்; அதைக் களத்துக்கு வராத - வர இயலாத - தலைவர்கள் தாம் இருக்கும் இடத்தில் இருந்துகொண்டே உறுதிப்படுத்த வேண்டும் - வெறுமனே தமது தொண்டர்கள் கூறும் 'உண்மைகளை' மட்டும் நம்பிக்கொண்டிருக்காமல் - இதனையே இப்போது வற்புறுத்த விரும்புகின்றோம்.

### நவாலி சென். பீற்றேர்ஸ் ஆலயம் அருகில்

# அரச மரம் வேரோடு சாய்ந்து கூ. சங்கக் கட்டடம் சேதம்

நாவலி,நவ.18

நவாலி சென். பீற்றேர்ஸ் தேவாலயத்திற்குச் சமீபமாக பிரதான வீதியோரம் நின்ற சுமார் நூற்றாண்டு பழமை வாய்ந்த பாரிய அரச மரமொன்று நேற்றுமுன்தினம் வேரோடு சாய்ந்தது. இதனால் மானிப்பாய் ப.நோ.கூ. சங்கக் கிளைக் கட்டடம் பலத்த சேதத்திற்குள்ளாகியது. அருகில் இருந்த தனியார் வர்த்தக நிலையம் ஒன்றும் சேதத்திற்குள்ளாகியது.

கூ.சங்கக் கிளைக் கட்டடம் சேதமடைந்ததால் அக்கிளையில் நிவாரண விநியோகத்திற்காக வைக்கப்பட்டிருந்த பொருள்கள் மானிப்பாய் ப.நோ.கூ.சங்கத்தின் தலைமையகத்துக்கு லொறிகள் மூலம் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. (ஐ-100)

## நாட்டு நடப்பு

களவு - III

**ஆடுமாடு அவிட்டு வந்தால் அடையாளம் காட்டென்பார்கள்**
**மாடுவெட்டி வித்தால் மறுக்கின்றார் சைவர் உண்ண - நாடுமிக**
**சைவம் தளைத்தோங்கி சரியாக வளர்வதனால்**
**கைவிட்டேன் கால்நடைக் களவு**

*- விகடகவி.*

# திரண்டால் மிடுக்கு!

மணிமண்டபம்

"இரக்கமற்ற"- "அரக்கத்தனம் நிறைந்த" - "மகா மோசமான" - "பயங்கரவாத இயக்கம்" எனக் குறிசுடப்பட்டு -

இலங்கை அரசால் தடைசெய்யப்பட்ட இயக்கம் -

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம்.

இந்த இயக்கத்தினருடன் தொடர்பு வைத்துக்கொள்வது - இணைந்துகொள்வது -

அவர்களுக்கு உதவி செய்வது -

அவர்களுடைய நடமாற்றம் பற்றி நன்கு தெரிந்தும் அதுபற்றி உரிய அதிகாரிகளுக்கு உரிய முறையில் அறிவிக்காதிருப்பது -

அவர்களுக்குச் சாதகமாகப் பிரசாரம் செய்வது -

எல்லாமே, மிகப் பாரிய குற்றங்களாகக் கருதப்பட்டு, "குற்றவாளி"களுக்கு மிகப் பெரிய தண்டனைகள் வழங்குவதற்குச் சட்ட ஏற்பாடுகள் இங்குள்ளன.

தண்டனைகள் வழங்கப்பட்டும் வருகின்றன.

இலங்கை அரசு திரும்பத் திரும்ப விடுத்த வேண்டுகோளுக்கு அமைய -

அமெரிக்கா, இந்தியா, இங்கிலாந்து, கனடா போன்ற வல்லாண்மை மிக்க நாடுகளும் அந்த இய்க்கத்தினரைத் தடைசெய்துள்ளன.

இந்த நிலையில் -

விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளாற் பெரிதும் "பாதிக்கப்பட்ட" - "பாதிக்கப்படுகின்ற" நாடு என்ற வகையில் மிக முக்கியமான பொதுத் தேர்தலொன்றை இந்த நாடு எதிர்கொள்கின்ற இந்த வேளையில் -

விடுதலைப் புலிகள் இயக்கத்தை அதன் வேரோடும் வேரடி மண்ணோடும் அழித்தொழிப்பதே எமது முக்கியமான குறிக்கோள் -

தேர்தலில் வெற்றிபெற்று நாம் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்தால் -

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரை முடுக்கி விடுவோம் -

நாட்டின் அபிவிருத்தித் திட்டங்கள் எல்லாவற்றையும் தற்காலிகமாக நிறுத்தி வைத்து - கிடைக்கக் கூடிய வளங்கள் எல்லாவற்றையும் ஒன்றுதிரட்டி அந்த இயகத்துக்கு எதிரான போரைத் தொடர்வோம் -

இறுதிப் புலி வீரன் இருக்கும் வரை எங்கள் போர் ஓயமாட்டாது - ஓயவேமாட்டாது -

என்ற ரீதியிலேதான் -

இலங்கையிலுள்ள அரசியற் கட்சிகளின் - முக்கியமாக - பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த பேரினவாதக் கட்சிகளின் - தேர்தல் விஞ்ஞாபனங்கள் அமைந்திருக்க வேண்டும் -

ஆனால், அதற்கு மாறாக -

ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணி - பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி - மூன்றாவது சக்தியாக வளர்ந்துவரும் மக்கள் விடுதலை முன்னணி - உள்ளிட்ட பெரும்பான்மை இனக் கட்சிகளெல்லாம் விடுதலைப் புலிகளுடன் பேசுவோம்; இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வைக் காண்போம் என்பதற்குத்தான் -

முதலிடத்தையும் முக்கிய இடத்தையும் கொடுத்திருக்கின்றன.

இந்த மாற்றத்திற்கு -

நாட்டைப் பேரழிவிலிருந்து காப்பாற்ற வேண்டுமென்றால் -

போருக்கு உடனடியாகவோ வெகு விரைவிலோ முற்றுப்புள்ளி இடப்பட வேண்டும்; விடுதலைப் புலிகளுடன் ஆக்க பூர்வமான - அந்தரங்க சுத்தியுடனான பேச்சுவார்த்தையை மேற்கொண்டால் மட்டுமே போருக்கு முற்றுப்புள்ளி இடலாம் என்பதையும் -

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரைத் தொடர்வதனால், அவர்களை அழித்தொழிப்பதற்குப் பதிலாக, சிங்கள இனமே சிறுகச் சிறுக அழிந்தொழியும் என்பதையும் -

விடுதலைப் புலிகளைத் தத்தம் நாடுகளிற் தடை செய்துள்ள வல்லரசுகள் -

சர்வதேசப் பயங்கரவாதியான ஒசாமா பின்லேடனுக்கு எதிராக ஓரணியிலே திரண்டு ஆக்ரோஷத்துடன் போரிட்டு வரும் வல்லரசுகள் -

விடுதலைப் புலிகளின் ஆயுதப்போராட்டத்தை அங்கீகரிக்காவிட்டாலும் அவர்களின் கோரிக்கைகளிற் பொதிந்திருக்கும் யதார்த்தத்தையும் நேர்மையையும் நீதியையும் நியாயத்தையும், அவற்றுக்கு வலுவூட்டும் வரலாற்றுக் காரணிகளையும் அறிந்து வைத்துள்ளமை காரணமாக -

எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் இலங்கை அரசுடன் சேர்ந்து விடுதலைப் புலிகளுக்கு எதிராகக் களத்தில் நின்று போரிடுவதற்கு முன்வரமாட்டா என்பதையும் -

இந்தக் கட்சிகள் ஒவ்வொன்றும் உணர்ந்துள்ளமையே காரணம் என்பது மறுக்க முடியாதது.

தேர்தலில் வெற்றி பெற்றதன்பின் இந்தப் பெரும்பான்மை இனக் கட்சியினர் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவார்களா -

அவர்களுடன் இணைந்து, இனப்பிரச்சினைக்கு நீதி நியாயமான தீர்வை எட்டுவார்களா -

அப்படி எட்டப்பட்ட தீர்வை - எதிர்க்கட்சியினரும் சந்தர்ப்பவாதிகளும் இனவெறியாளர்களும் ஒன்றுதிரண்டு எதிர்த்தாலும் அந்த எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் -

விசுவாசமான முறையில் நடைமுறைப்படுத்துவார்களா -

என்பவையெல்லாம் எதிர்வுகூற முடியாத சங்கதிகள்தாம் -

எண்பது ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ் மக்களை ஏமாற்றுவதையே தம்முடைய "இயல்பாகவும் இலட்சியமாகவும்" கொண்டவர்கள் -

ஒரே இரவில் உண்மைக்காக உழைக்கும் உத்தமர்களாக உருவெடுப்பார்கள் என்பது எதிர்பார்க்க முடியாத ஒன்றுதான் -

ஆனால் -

எந்த மக்களின் விடுதலைக்காக - விமோசனத்துக்காக - வாழ்வுக்காக - வளத்துக்காக - நிம்மதிக்காக - நிரந்தர மகிழ்ச்சிக்காக - விடுதலைப் போராளிகள் தம்மை ஆகுதியாக்கி வருகின்றார்களோ -

அந்த மக்கள் -

அந்த ஈழத்துத் தமிழ் மக்கள் -

நடக்க இருக்கும் தேர்தலை -

நடந்து முடிந்தவற்றுக்கு நன்றி தெரிவிக்கும் சந்தர்ப்பமாக ஆக்காமல் -

நடக்க வேண்டியவற்றை நாட்டுக்கும் உலகுக்கும் எடுத்துக் கூறும் நல்ல சந்தர்ப்பமாகக் கருதி -

'அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு' என்பதை நினைவில் நிறுத்த -

விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தி - இனப்பிரச்சினைக்கு நீதி நியாயமான தீர்வைக் கண்டு நிரந்தரமான சமாதானத்தை எட்டுவதற்கு அந்தரங்க சுத்தியுடன் முன்வராத எவருமே -

ஆட்சிப் பீடத்தில் அரை நொடியும் நீடிக்க முடியாது என்ற அப்பட்டமான உண்மையை -

சம்பந்தப்பட்ட அனைவருக்கும் உறைப்பாக உணர்த்தும் வகையிற் செயற்படப் போவதாக பகிரங்கமாக வாக்குறுதி வழங்கியுள்ள அணியினரை மட்டும் தெரிவு செய்யவும் -

வாக்குறுதி அளித்தபடி அவர்கள் - அட்சரம் பிசகாமற் - செயற்படுகின்றார்களா என்பதைக் 'கண்ணில் எண்ணெய் விட்டபடி' கண்காணித்துக் கொண்டிருக்கவும் -

முன்வந்தால் -

நாடு வாழும் -

நாமும் வாழ்வோம் -

சண்டை இன்றி - பகைமை இன்றி - சர்வதேசப் புகழுடன் நாடு வாழும்.

தலை நிமிர்ந்து - நிலை உயர்ந்து - தமிழர்களாக நாமும் வாழ்வோம்!

*சித்தன்*

# அரச அதிபரின் முத்திரையுடன் லொறிகள் தனியாருக்குச் சேவை

## தவிர்க்குமாறு கண்டிப்பான உத்தரவு

யாழ்ப்பாணம்,நவ.18

யாழ்.மாவட்ட தனியார் பாரவூர்திச் சங்கத்தில் பதிவு செய்யப்பட்டு காங்கேசன்துறை, பருத்தித்துறை ஆகிய துறைமுகங்களில் சேவையில ஈடுபடும் லொறிகள், ஏனைய தனியார் சேவையில் ஈடுபடும் பொழுது 'அரச அதிபர்' என்ற முத்திரையை நீக்கிய பின்னரே சேவையில் ஈடுபட வேண்டும் என பாரவூர்திச் சங்கம் அறிவித்துள்ளது.

தனியார் லொறிகள் தனிப்பட்டவர்களின் பொருள்களை ஏற்றிஇறக்கும்போது 'அரச அதிபர்' என்ற முத்திரையை லொறியில் பொருத்திக் கொண்டு சேவையிலீடுபட்டு வருவது அவதானிக்கப்பட்டுள்ளதாகவும் -

அரச அதிபரின் கட்டுப்பாட்டின் கீழ் துறைமுக சேவையில் ஈடுபடும் போது மட்டுமே அந்த முத்திரையைப் பயன்படுத்த வேண்டும் என்றும் -

சங்கம் கண்டிப்பான அறிவுறுத்தலை விடுத்துள்ளது.

இதேவேளை -

இந்த நிபந்தனையை மீறுகின்ற லொறிகள், துறைமுக சேவையிலிருந்து இடைநிறுத்தப்படும் எனவும் பாரவூர்த்திச் சங்கம் அறிவித்துள்ளது. (ஐ-4)

### நாளை

கார்த்திகை 4
திங்கட்கிழமை
திதி : சதுர்த்தி
நண்பகல் 12.06 வரை.
நட்சத்திரம் : பூராடம்
முன் இரவு 11.12 வரை.
கரிநாள்
சுபநேரம் : 12.09 - 1.39
ராகுகாலம் : 7.39 - 9.09
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

நெஞ்சம் ஆலயமாவது அல்லது அற்பப் பொருளாவது நாம் அதில் போட்டுவைத்திருக்கும் எண்ணத்தைப் பொறுத்தது.

### அச்சுறுத்தல் தகவல் உண்மையானால்

# ரணிலுக்கு பூரண பாதுகாப்பை அரசு உடனடியாக வழங்கும்

## அமைச்சர் ஜயரத்ன கூறுகின்றார்

கொழும்பு,நவ.18

விடுதலைப் புலிகளால் ரணில் விக்கிரமசிங்கவின் உயிருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருப்பது உண்மையானால் அரசு அவருக்கு பூரண பாதுகாப்பை உடனடியாக வழங்கும்.

- இவ்வாறு கூறுகின்றார் அமைச்சர் டி.எம்.ஜயரத்ன.

விடுதலைப் புலிகள் இயக்கதை விட்டு விலகிய நான்கு தமிழ் இளைஞர்களுக்கு, ஸ்ரீலங்கா இராணுவப் புலனாய்வுப் பிரிவு விசேட பயிற்சி கொடுத்து தன்னைக் கொல்வதற்கு தயார்செய்துவருவதாக ரணில் விக்கிரமசிங்க செய்தி ஊடகங்களுக்குத் தெரிவித்துவருகின்றார்.

ஆனால் இதுவரை இந்த விடயம் குறித்து ரணில் விக்கிரமசிங்க அரசிடமோ, தகுந்த அதிகாரிகளிடமோ முறைப்பாடு செய்யவில்லை.

எனினும் அச்சுறுத்தல் உள்ள ஒருவருக்கு உரிய பாதுகாப்பை வழங்குவது அரசின் கடமை.

- இவ்வாறு அமைச்சர் டி.எம். ஜயரத்ன தெரிவித்ததாக இலங்கை வானொலி தெரிவித்தது. (க-7)

### மாதாந்த உதவிப் பணம்

நவாலி,நவ.18

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களினதும் மற்றும் காசோலை, தொழுநோய், புற்று நோய என்பவற்றிற்கான உதவிப் பணத்தினைப் பெறுபவர்களுக்குமான நவம்பர் மாதத்திற்குரிய கொடுப்பனவு அந்தந்த தபாலகங்களுக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்டவர்கள் தத்தமது தபாலகங்களுக்குச் சென்று கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஐ-100)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

4 மாதம் சின்னயுடன் ஒரு ஜமுனா பாரி ஆடு விற்பனைக்குண்டு. இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (94590)

சுழிபுரம் பறாளாய் வீதியில் 6 பரப்பில் 4 அறைகள்கொண்ட வீடும், 25 பரப்பு நளவராய் என்று அழைக் கப்படும் நெற்காணியும் விற்பனைக் குண்டு. (சுழிபுரம் தபாற் கந்தோருக் கும் விக்ரோறியாக் கல்லூரிக்கும் அருகல்) தொடர்புகொள்ளவும் :- **J.G.L.** றொசயிறோ சாமுவேல் சன்ஸ் அன் கொம்பனி, யாழ்ப்பாணம். (94546)

புதிய மொடல் டிஸ்க் அன்ரனா வுக்கு உரிய டிஜிட்டல், அனலொக், பொய்சினா, றிசீவர் **Euro Star L.N.B.F** விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.213, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். **T.P. 2863** (94550)

5 அடி சுற்று 9 அடி நீளம் கொண்ட பூவரசு மரம் விற்பனைக்குண்டு லொறி, வணடில் பாவனைக்குரியது தொடர்பு:- குட்டியண்ணா, தெனியம்பை, வல் வெட்டித்துறை. (94610)

60 நாள்கள் நிரம்பிய டாசோன் ஆண் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- 67/43, தர்மலிங் கம் அவனியூ, கொட்டடி, யாழ்ப்பாணம். (94616)

NOKIA கையடக்கத் தொலைபேசிக் குரிய புதிய பற்றறிகள் சார்ச்சருடன் விற்பனைக்கு உண்டு. SANYO கை யடக்கத் தொலைபேசிக்கு உரிய அதிசக்திவாய்ந்த அன்டனாக்களும் விற்பனைக்கு உண்டு. உங்களது கையடக்கத் தொலைபேசியுடன் மாலை 4 மணிக்குப் பின்னர் நேரில் தொடர்புகொள்ளவும். என்.தவநாய கம். சிறுப்பிட்டி மத்தி, நீர்வேலி. 070-212559. (94617)

பப்படம் தயாரிப்புக்கான தளபா டங்களும் டிரேட்மார்க்கும் மற்றும் வீட்டுப் பொருள்களும் விற்பனைக் குண்டு. தொடர்பு:- திரு.அச்சா, சாவற்கட்டு, சுதுமலை தெற்கு, மானிப்பாய். (94630)

## இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு

BROILER,COCKERELS, CULLBIRDS, SOUP CHICKEN தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். இல.19, முருகசர் ஒழுங்கை, முத்தி ரைச்சந்தையடி, நல்லூர். (94589)

இறைச்சிக்கோழி (Broilers), கல் பேட்ஸ், சேவல் என்பன விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம்செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு:- இல.15, 6ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (94607)

## புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்கு

PRIMA, GREENVALLY, புறொயிலர் குஞ்சுகள் 2 மாதம் வளர்ந்த PRIMA சிவப்பு குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- வை.சிவகுமார், 461, நாவலர் வீதி, ஆனைப்பந்தி. (94609)

புறொயிலர் **(1Kg 170/=),** கல் பேடஸ் என்பன விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்தல் இலவசம். தொடர்பு:- மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில். (94614)

## தேவை

டீசல் லீஸ்டர் இஞ்சின் 7-10KV இடைப்பட்ட டைனமோவுடன் புதிய அல்லது நல்ல நிலையிலுள்ள ஜெனரேட்டர் தேவை. தொடர்பு:- 305, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி. (94595)

## திருமண சேவை

அரசாங்க உத்தியோகம், வெளி நாடுகளில் வேலை பார்க்கும் இரு பாலாரினதும் குறிப்புகள் உண்டு. துரிதமான, திருப்திகரமான சேவை. தொடர்பு:- கு.திருவிளங்கம், வாசிக சாலை ஒழுங்கை, 3ஆம் கட்டையடி, கல்வியங்காடு. (94574)


# தமிழர் கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டம் - 2001

இடம்: அரியாலை ஸ்ரீ கலைமகள் ச.ச.நிலைய முத்தமிழ் கலையரங்கு.
காலம்: இன்று (18.11.2001) ஞாயிற்றுக்கிழமை பி.ப 5.00 மணி

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள்

★ திரு.அ. விநாயகமூர்த்தி
★ திரு.சி.வீ.கந்தையா சிவஞானம்
★ திரு.ஜீ.ஜீ.கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

ஆகியோர் இந்நிகழ்வில் உரையாற்றவிருப்பதனால் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(93925) - அரியாலை ஆதரவாளர்கள் -

# நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

விமானத்தாக்குதலினால் முற்றாக அழிந்த எமது குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தைப் புனரமைப் பதற்கு 2001ஆம் ஆண்டு வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபை நிதியிலிருந்து, முதல் கட்ட நிதியை எமக்குத் தருவதற்கு உதவிசெய்த பெருந்தகைகளான -



மாண்புமிகு அமைச்சர்
கே.என்.டக்ளஸ் தேவானந்தா
அவர்களையும்



யாழ்.நாடாளுமன்ற உறுப்பினர்
உயர்திரு.
கே.வி.குகேந்திரன் (ஜெகன்)
அவர்களையும்

தோழர் கேதீஸ் (மனோ) அவர்களையும்
குருநகர் மக்கள் இணைப்பாளர் தோழர்
றிகன் அவர்களையும்
மற்றும் கடந்த ஐந்து ஆண்டுகளாக குருநகர் மீனவர்களின் பிரச்சினை சம்பந்தமாக நாடும்போதும், தேடும்போதும் முன்வந்து உதவிகள் புரிந்தமைக்காக குருநகர் மீனவ மக்களின் சார்பில் மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கத்தினர். (94633)


# பேராசிரியர் கோபாலகிருஷ்ண ஐயர் புதிய கலைப் பீடாதிபதியாகத் தெரிவு

யாழ்ப்பாணம்,நவ.18

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தின் கலைப்பீடாதிபதியாக பேராசி ரியர் ப.கோபாலகிருஸ்ணஐயர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை பல்கலைக் கழக மூதவையினால் இவர் ஏகமன தாகப் போட்டியின்றித் தெரிவு செய் யப்பட்டார்.

மறைந்த பேராசிரியர் கைலாச நாதக் குருக்களின் சிஷ்யனான இவர் யாழ்.பல்கலைக்கழக இந்துநாகரிகத் துறைத் தலைவராகக் கடமையாற்றி வந்தார். அத்துடன் பல்கலைக்கழக இராமநாதன் ஆய்வு நிறுவனம், நியர்த்தீ, இந்து குருமார் ஒன்றிய வித்வத் சபை ஆகியவற்றின் தலைவராகவும் பதவி வகித்தவர்.

கடந்த காலங்களில் பதில் கலைப் பீடாதிபதியாகவும் பணியாற்றிய இவர் கலைப்பீடாதிபதி செ.பாலச்சந்திரன் மரணமானதை அடுத்து புதிய கலைப் பீடாதிபதியாகத் தெரிவு செய்யப்பட் டிருக்கிறார். (ஐ-10-றி)

## மக்கள் வங்கியின் வாடிக்கையாளருக்கு 'ரீ.வி'கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,நவ.18

மக்கள் வங்கியினால் நடத்தப் பட்ட ஜனஜய/ஜனஸ்ரீ பரிசுத்திட்டத் தின் கீழ் பரிசு பெற்ற வங்கி வாடிக் கையாளர்களுக்கான வர்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங் கும் வைபவம் நேற்றுக் காலை மக்கள் வங்கியின் யாழ் பல்கலைக் கழகக் கிளையில் நடைபெற்றது.

மக்கள் வங்கியின் யாழ்.பிராந் திய முகாமையாளர் மு.க.சிவபாத விருதயர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மூன்று வாடிக்கை யாளர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட் டன.

மக்கள் வங்கியின் யாழ் பல்க லைக்கழகக் கிளை முகாமையாளர் திருமதி பி.ரகுவும் இந்நிகழ்வில் கலந்துகொண்டார். (க-ரி)

## போசாக்குக் குறைந்த மாணவர்களுக்கு உதவக்கோரிக்கை

மூளாய்,நவ.18

வலிகாமம் மேற்குப் பகுதிகளில் மந்த போசாக்கு நிலையில் உள்ள மாணவர்களுக்கு உதவும் வகையி லான உடனடியான உதவித திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தும்படி வலி.மேற்குப் பிரதேச செயலா ளரிடம் கோரிக்கை முன்வைக்கப் பட்டுள்ளது. வலிகாமம் மேற்குப் பிர தேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற பிரதேச ஒருங் கிணைப்புக்குழு கூட்டத்தின்போதே சுகாதாரப் பகுதியினரால் பிரதேச செயலரிடம் மேற்படி கோரிக்கை முன்வைக்கப்பட்டது. (க-99)

## இளைஞர் விடுதலை

கொழும்பு,நவ.18

களுத்துறை தொலைத் தொடர்பு நிலையத்தைக் குண்டுவைத்து தகர்த்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட இளை ஞர் இரண்டு வருடங்களின் பின்னர் களுத்துறை நீதிமன்றத்தினால் விடு தலை செய்யப்பட்டார்.

சி.ராஜி (24 வயது) என்ற இளை ஞரே விடுதலை செய்யப்பட்டார்.(க)


# மணமகள் ஒப்பனை பயிலரங்கு

இந்து, கிறிஸ்தவ, குஜராத்திய மணப் பெண்களை அலங் கரிக்கும் பிந்திய பாணை முறைகளுடன் சில முடியலங்கார (Hair Style) செயன்முறை களும அரங்கில் இடம் பெறும்.

காலம்: 21.11.2001
(புதன் கிழமை)
காலை 9 மணிமுதல்
★இரவை ந்தாள்கள்
நடைபெறும்.
ஆர்வமுள்ள அனைவரும் கலந்துகொள்ளலாம்.

தூரிகை
M.M.V. றோட்,
நெல்லியடி


## கூட்டம்

இலங்கை தொழில் நுட்ப சேவை யாளர் சங்கத்தின் யாழ்.பிராந்தியக் கிளையின் கூட்டம் இன்று ஞாயிற் றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு கொக்குவில் உப பணிமனை கேட் போர் கூடத்தில் நடைபெறவுள்ள தாக அதன் செயலாளர் அறிவித் துள்ளார். (ஐ-72)


# தெல்லிப்பழை பிரதேச செயலக அருகில்

# ஈ.பி.டி.பியின்

# மாபெரும் தேர்தல் பிரசாரக் கூட்டம்

இன்று (18.11.2001) ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணி
தலைமை:- க. நாகராசா (ஜே.பி.)
(முன்னாள் மகாஜனக்கல்லூரி அதிபர்)
பிரதம பேச்சாளர்:- ச. சிவதாஸன்
காங்கேசன் தொகுதி வேட்பாளர்
அனைத்து அன்பு நெஞ்சங்களையும்
அன்புடன் வரவேற்கின்றோம்.

காங்கேசன் தொகுதி அமைப்பாளர்
தி-சிவகுமார் - (வேலு)

(93927)



# முக்கிய அறிவித்தல்

## தென்மராட்சி ஒருங்கிணைந்த கிராமிய கைத்தொழில் அபிவிருத்திச் சங்கம்

மேற்படி சங்க அங்கத்தவர்களுக்கான கூட்டம்

இடம்:- யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மண்டபம்.
காலம்:- 23.11.2001 வெள்ளிக்கிழமை பி.ப.2.00 மணி (புதிய நேரம்)
விடயம்:- அங்கத்தவர் பதிவும் தொழில் அபிவிருத்தி ஊக்குவிப்பு செயல் திட்டம்.
(புதிதாகத் தொழில் தொடங்குபவர்களும் இணைந்து கொள்ளலாம்)

தலைவர்,
செ.தா.நவரத்தினம்,
'விமலாஸ்', மானிப்பாய்.
16.11.2001.

(94628)

செயலாளர்,
க.இரவீந்திரநாதன்.


# வல்வெட்டித்துறை நகராட்சிமன்றம்

## 2002 ஆம் ஆண்டுக்கான ஆதனவரி பற்றிய அறிவித்தல்

2002 ஆம் ஆண்டுக்கான ஆதனவரி சென்ற வருடம் (2001ஆம் ஆண்டு) நடைமுறையில் இருந்த அறவீடு விகிதமே மாற்றமின்றி நடைமுறையில் இருக்கும்.

2002ஆம் ஆண்டுக்கான

முதலாம் காலாண்டுக்கான வரி மார்ச் மாதம் 31ஆந் திகதிக்கு முன்னரும்,

2 ஆம் காலாண்டுக்கான வரி ஜூன் மாதம் 30ஆந் திகதிக்கு முன்னரும்,

3 ஆம் காலாண்டுக்கான வரி செப்ரெம்பர் மாதம் 30ஆந் திகதிக்கு முன்னரும்,

4 ஆம் காலாண்டுக்கான வரி டிசெம்பர் மாதம் 31ஆந் திகதிக்கு முன்னரும் செலுத்தப்பட வேண்டும்.

### விசேட கழிவு

1. 2002 ஆம் ஆண்டின் 4 காலாண்டுகளுக்குமான தொகையை 31.01.2002 ற்கு முன்னர் ஒரே தடவையில் செலுத்துபவர்களுக்கு 10 சதவீத கழிவு வழங்கப்படும்.
2. 2002 ஆம் ஆண்டின் ஒவ்வொரு காலாண்டுக்குமான தொகையைக் காலாண்டின் முதல் மாத முடிவுக்குள் செலுத்துபவர்களுக்கு 5சதவீத கழிவு வழங்கப்படும்.

### தண்டம்

குறிப்பிட்ட காலாண்டுக்கான வரியை அக்காலாண்டு முடிவடைவ தற்கு முன் செலுத்தப்படாதவிடத்து,

1. வெற்றுக் காணிகளுக்கும் குடியிருப்பு ஆதனங்களுக்கும் 15சதவீத தண்டமும்
2. வியாபார நோக்கத்துக்கான ஆதனங்களுக்கு 20சதவீத தண்டமும் அறவிடப்படும்.

### வரி விலக்கும் ஆட்சேபனையும்

சேதமடைந்துள்ள, காலியாகவுள்ள ஆதனங்களுக்கான வரி விலக்கின் பொருட்டும் விதிக்கப்பட்ட ஆதனவரிக்கெதிரான ஆட்சேப னையின் பொருட்டுமான எழுத்துமூல விண்ணப்பங்கள் 31.01.2002 இற்கு முன்னர் எமக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

வரியிறுப்பாளர்களுக்குச் சுகாதார வசதி போன்ற அடிப்படை வசதி களைச் செய்வதற்கு இவ்வரி நிலுவைகளைச் செலுத்தி எமக்குப் பூரண ஆதரவு தருமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்

நகராட்சிமன்ற அலுவலகம்,
வல்வெட்டித்துறை.
2001.11.07

ம.க.சிவாஜிலிங்கம்,
தலைவர்,
நகராட்சிமன்றம், வல்வெட்டித்துறை.

(C-19345)

# வன்னிமக்களின் அவலம் தீர்ப்பதில் கஞ்சத்தனத்தைக் காட்டியது அரசு

**விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தின் துணைவியாரான அடேல் பாலசிங்கத்தின் 'சுதந்திர வேட்கை' என்னும் ஆங்கில நூலின் மொழிபெயர்ப்புத் தொடர் இது.**

மழை வந்தால் வெள்ளம் சூழ்ந்து, அகதிகளாகத் தங்கியிருக்கும் மக்களை எவ்வளவுதூரம் அல்லல்படுத்தும்! அதேபோன்று வன்னியில் 1996-1997ஆம் ஆண்டுகளில் மலேரியா நோய் பரவிய சமயத்திலும் மக்களை வாட்டி வதைத்தது.

பொருளாதாரத் தடையினால் மருந்துகளில்லாத நிலையில், மூலை முடுக்குகளிலும், வீதிகளிலும் மக்கள மலேரியா நோயினால் நடுநடுங்கி, போகுமிடம் தெரியாமல் அவஸ்தைபட்டனர்.

மலேரியாவின் ஆரம்பக் கட்டத்தில் ஏற்படும் குளிரைச் சமாளிப்பதற்காக - போஷாக்குக் குறைவினால் மெலிந்த - உடலை துவாய் அல்லது மெல்லிய போர்வையினால் மூடிக்கொண்டு மக்கள் திரிவதை வீதிகளில் எங்கும் காணக்கூடியதாயிருநதது.

தாய்மார் பலர் தங்கள் நோயுற்ற குழந்தைகளைச் சுமந்தபடி பஸ் தரிப்பு நிலையங்களில் மழையில் அல்லது தகிக்கும் வெயிலில் மருத்துவமனைக்குப் போவதற்காகக் காத்து நின்றதையும் நாங்கள் பார்த்திருக்கிறோம்.

பஸ்ஸுக்காக நிற்பதை விட நடந்து சென்றால் விரைவில் போய் விடலாம் என்று தள்ளாடி நடந்த கூட்டத்தையும் கண்டோம்.

பலர் தமது சொந்த முயற்சியினால் வேலை தேடுவதில் ஈடுபட்ட போதிலும், வேலையில்லாப் பிரச்சினையே பெரும் பிரச்சினையாக இருந்தது. இதனால் ஏற்பட்ட பணக்கஷ்டம் யாழ்ப்பாண மக்களின் சுதந்திரத்திலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தித் துனபத்தின் எல்லைக்கே கொண்டு போய்விட்டது.

வாழ்க்கைச் செலவு உயர்வும், பொருளாதாரத் தடையும் பல குடும்பங்களில் உணவுக்காகச் செலவிடும் பணத்தைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியிருந்தன.

சில குடும்பங்கள் பட்டினி கிடப்பதாக விடுதலைப் புலிகளுக்குத் தகவல்கள் கசிந்தபோது விடுதலைப் புலிகளின் புனர்வாழ்வுப் பிரிவினர் இந்த அவலமான குடும்பங்களுக்கு உதவ முன்வந்தனர்.

### போஷாக்கின்மை

வன்னி முழுவதிலும் போஷாக்கின்மையால் குழந்தைகள் பானை வயிறும், சுருங்கிய தோலும், மெலிந்த காலும், நரைத்த முடியும், வளர்ச்சிக் குறைவுமாகத் தோற்றமளித்தனர்.

மலேரியா, நெருப்புக்காய்ச்சல் போன்ற பொதுவான நோய்களுக்குக் கொடுக்கப்படும் மருந்துகளுக்கும் சாதாரண காய்ச்சலுக்குக் கொடுக்கப்படும் பரசித்தமோல் மாத்திரைகளுக்கும் கூடத் தட்டுப்பாடு நிலவியது.

'பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போல்' அவர்களை மேலும் துன்பத்துக்குள்ளாக்கியது. இதனால் மக்கள் நோய் வாய்ப்படும் ஆபத்தே நிலவியது.

அன்றாட வாழ்க்கையைச் சமாளிப்பதே ஆயிரக்கணக்கில் இடம்பெயர்ந்த மக்களுக்கு பெரும் அல்லலாக இருந்தது. அக்கரைப் பச்சையைத் தேடி இந்த மக்களில் பலர் வவுனியாவுக்குப் போகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

வாழ்க்கைச் சுமையைத் தாங்க முடியாமல் புதிய வாய்ப்புத் தேடி வவுனியாவுக்குச் சென்ற மக்களில் பலரும், இலங்கை இராணுவமும் பொலீஸாரும் சுற்றிவளைத்து நடத்திய தேடுதல்களில் கைதுசெய்யப்பட்டு பல்வேறு அகதிமுகாம்களில் முடக்கப்பட்டனர்.

சுதந்திரமாக நடமாடும் உரிமை மறுக்கப்பட்ட இந்தத் தமிழ் அகதிகள் 'திறந்த வெளிச் சிறைகளில்' தொடர்ந்து வாழும்நிலை ஏற்பட்டது.

யாழ்ப்பாணத்துக்கு அல்லது இந்தியாவுக்கு கடினமான பயணத்தைத் துணிச்சலாக மேற்கொண்டவர்களின் பயணங்கள் கூட அங்கே அகதிமுகாம்களில்தான் முடிவடைந்திருக்கின்றன.

### புனர்வாழ்வு அமைப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவுடன் இயங்கிய உள்ளூர் புனர்வாழ்வு அமைப்புகள் இடம்பெயர்ந்த இந்த மக்களின் குறைகளை நீக்குவதற்குப் படாதபாடுபட்டன.



குமாரதுங்க அரசு கருணையே இல்லாதிருந்தது. பொருளாதாரத் தடைகள் மூலம் உணவு, மருந்துகளுககுத் தட்டுப்பாடு ஏற்படுத்தியதுடன், நிவாரண உதவிகளையும் வெட்டித்தள்ளியது.

இதனால் இடம்பெயர்ந்த மக்கள் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களையும், பேரணிகளையும் நடத்தவேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளானார்கள். ஆனாலும் எந்தவிதபயனும் ஏற்படவில்லை.

அரசாங்கத்தின் கட்டுப்பாடுகள், வன்னியில் செயற்பட்டு வந்த அரசுசாரா நிறுவனங்களை முடக்கிவிட்டன. மக்களுக்குத் தேவையான உதவிகளை அவற்றால் செய்யமுடியாமல் இருந்தது.

இது சம்பந்தமாக அரசுசாரா உதவி நிறுவனங்கள் மீது மக்கள் குற்றஞ்சுமத்தினர்.

அல்லலபடும் மக்களுக்கு மனிதாபிமான உதவிகூடச் செய்யமுடியாமல் அரசாங்கம் தடுத்தது. அரசாங்கம் விதித்துள்ள தடைகளை உலகத்தின கவனத்துக்குக் கொண்டுவராமல் விட்டதற்காக இந்த நிறுவனங்கள் மீது மக்கள் குறைகூறினர்.

இடம்பெயர்ந்த மக்கள் அனைவரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் அல்லது அனுதாபிகள் என்று அரசு கருதியது. இதனால் அவர்களுக்குத் தண்டனையாகப் பல்வேறு கஷ்டங்களை அரசு திட்டமிட்டு ஏற்படுத்தியது.

இடம்பெயர்ந்த மக்கள் படும் சொல்லொணாத் துயரங்கள் அதிகரித்தன.

இரண்டாயிரமாம் ஆண்டின் ஆரம்பத்தில் நோர்வே அரசின் சமாதான முயற்சிக்கு வித்திடப்பட்டது.

பேச்சுகளுக்கு முன்னோடியாக மக்களுக்கு மிகமுக்கிய தேவையான மருந்து மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் மீது விதிக்கப்பட்டுள்ள தடைகளை நீக்கவேண்டியது அவசியமென்று விடுதலைப் புலிகள் கோரிக்கையை முன்வைத்தனர்.

ஆனால் வன்னியில் வழமையான சாதாரண வாழ்க்கையை ஏற்படுத்தும் விடயத்தில் குமாரதுங்க அரசு கஞ்சத்தனமாகவே நடந்துகொண்டது.

உள்ளூர் விவசாயிகள், இடம்பெயர்ந்த மக்கள் தவிர முல்லைத்தீவு, மன்னார் கரையோரப் பகுதிகளில் பெருந்தொகையான மீனவ சமூகத்தினர் வாழ்கின்றனர். இந்த மீனவ சமூகத்தினருடன் வாழ்பவர்களில் ஒரு பகுதியினர் முன்னர் திருகோணமலையிலிருந்து இங்கு அகதிகளாக வந்து உள்ளூர் சமூகத்தினரோடு இணைந்துகொண்டவர்கள்.

எரிபொருளுக்கு விதிக்கப்பட்ட தடையினால் வன்னியில் மீனவ சமூகத்தினர் வெகுவாகப் பாதிக்கப்பட்டனர். இவர்கள் பஞ்சத்தில் அடிபட்டவர்கள். எரிபொருள் இல்லாததால் ஆழ்கடலில் ரோலர்களில் சென்று மீன்பிடிக்க முடியாமற்போனது.

மொத்தத்தில் மீன்பிடித் தொழிலே இல்லாமல் ஒழித்துக்கட்டப்பட்டுவிட்டது. வேலையின்மையும், சந்தையில் கொண்டுபோய் விற்பதற்கு எதுவுமில்லாததாலும், வாழ்க்கைச் செலவுக்கு வருமானம் எதுவும் இல்லாததாலும் மீனவர்கள் பெரும் அவதி அடைந்தனர்.

கரைவலை மீன்பிடியில் ஈடுபட்டு வாழ்க்கையைக் கொண்டுசெல்லப் போராடிக் கொண்டிருந்தார்கள் அவர்கள்.

**தமிழில் : எம்.ஜீ.**

கடலில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களில் நூற்றுக்கணக்கானோரை இலங்கைக் கடற்படை கொன்றொழித்திருக்கின்றது.

வெந்தபுண்ணில் வேல் பாய்ச்சுவது போல மீன்பிடித் தொழிலுமில்லாமல், குடும்பத்தலைவர்களையும் எத்தனையோ குடும்பங்கள் பலிகொடுக்கும் நிலைக்கு உள்ளாகின.

அவர்கள் கடற்கரையில் விட்டிருந்த படகுகளையும், கொட்டில் வீடுகளையும் விமானப் படையினர் மறுபுறம் துவசம் செய்தனர். (வளரும்)

---

# நான்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பின் எதிர்காலச் செயற்பாடு எப்படி அமையும்?

## விளக்குகின்றார் சுரேஷ் பிரேமச்சந்திரன்

**தேர்தல் களம்**

நான்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பின் செயற்பாடுகள், இலககுகள், மேம்பாடுகள் எப்படி அமையும் என்பதை அக்கூட்டமைப்பில் இடம்பெற்றுள்ள ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஷ்) அணியில் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் விளக்குகின்றார். அவர் கூறியதாவது:-

நான்கு கட்சிகள் இணைந்த தமிழர் கூட்டமைப்பின் அங்கத்தவன் என்றவகையில், இத்தமிழர் கூட்டமைப்புத் தொடர்பாகவும், அதனுடைய எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பாகவும் சில விடயங்களைத் தமிழ் மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டியுள்ளது.

முதலாவதாக -

தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்கு, சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தீர்வொன்றினைக்கண்டு, சமாதானத்தை உருவாக்குவதே எமது முழுமையான நோக்கமாகும். இதனை எவ்வாறு எட்டுவது என்பது தொடர்பாகவும் நாம் தெளிவான சில முடிவுகளை எடுத்துள்ளோம்.

### பொருளாதாரத் தடைகளை அகற்றுதல்

பேச்சுக்கான நல்லெண்ணம் ஒன்றை உருவாக்கும் பொருட்டும், தமிழ் மக்கள் மத்தியில் ஒரு குறைந்தபட்ச நம்பிக்கையை உருவாக்கும் பொருட்டும் -

கடந்த ஏழு வருடங்களாக சந்திரிகா அரசாங்கம் வன்னி மீதும், கிழக்கு மாகாணத்தின் சில பகுதிகள் மீதும் விதித்துள்ள, பொருளாதாரத் தடைகள் அகற்றப்படவேண்டும்.

### புலிகள் மீதான தடை நீக்கப்படவேண்டும்

தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சுகளில் கலந்துகொள்வதற்கு ஏதுவாக புலிகள் மீதான தடை நீக்கப்படவேண்டும்.

அரசு ஒரு பக்கத்தில் பேச்சுகளில் கலந்துகொள்ளும் பொழுது, மறுபக்கத்தில் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகப் பேச்சுகளில் கலந்துகொள்வோர் அரசுக்கு ஈடான - இணையான - பங்காளிகளாகப் பேச்சுகளில் கலந்துகொள்ளவேண்டும். ஒரு தடைசெய்யப்பட்ட அமைப்புடன் பேசுவதென்பது, ஏதோ குற்றவாளிகளுடன் பேசுவது போன்ற உணர்வையே ஏற்படுத்தும். எனவே பேச்சு ஆரோக்கியமாக நடக்கவும், தமிழ்ப் பிரதிநிதித்துவத்திற்கான உரிய அங்கீகாரத்தை கொடுக்கும் பொருட்டும், தமிழீழ விடுதலைப் புலிகள் மீது விதிக்கப்பட்டுள்ள தடை நீக்கப்படவேண்டும்.

### புலிகளுடன் மட்டுமே பேசவேண்டும்

கடந்த காலத்தில் அரசு தமிழ்க் கட்சிகளை தனது சுயலாபத்திற்காகப் பிரித்தாண்டு வந்தது. தீர்வுத்திட்டம், தீர்வுப் பொதி என்ற வகையில், ஒரு பக்கத்தில் தமிழ்க் கட்சிகளுடன் பேச்சு நடத்திக்கொண்டு, மறுபக்கத்தில் புலிகளை அழிக்கின்றோம் என்ற பெயரில், தமிழ் மக்கள் மீது பாரிய யுத்தத்தைக் கட்டவிழ்த்துவிட்டது. இதன்மூலம், தமிழ்க் கட்சிகள் யாவும் அரசுடன் ஒத்துப்போவது போலவும், தமிழீழ விடுதலைப் புலிகள் மாத்திரம் அரசிற்கு எதிராக நிற்பதுபோலவும், ஒரு தோற்றத்தை உருவாக்கி, சர்வதேச ரீதியிலான பிரசாரத்தை மேற்கொண்டுவந்தது. ஆனால் இக்கூட்டமைப்பு ஒரு செய்தியை இந்த அரசுக்குச் சொல்ல விரும்புகின்றது. இனிமேல் இப்பிரித்தாழும் தந்திரம் தமிழர் கூட்டமைப்பிடம் வேகாது. அதுமாத்திரமல்ல இனிமேல் நீங்கள் தமிழர் கூட்டமைப்புடன் பேசிப் பிரயோசனமில்லை. மாறாக தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மட்டும் பேசுவதன்மூலமே பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியுமென தமிழர் கூட்டமைப்பு நம்புகின்றது. அத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசும்போது சமாந்தரமாக வேறு தமிழ்க் கட்சிகளுடன் பேசக்கூடாது எனவும் இக்கூட்டமைப்பு வலியுறுத்துகின்றது. அப்படியான பேச்சுகள் விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்களை குழப்பும் ஒரு முயற்சியாகவே அமையும் என நாம் நம்புகின்றோம்.

விடுதலைப் புலிகளுடன்தான் பேசவேண்டும் என்பதற்கு இன்னொரு காரணமும் உண்டு.

தந்தை செல்வாவின் காலத்திலிருந்து இன்றுவரை, மாறி மாறி வந்த அரசாங்கங்களுடன் பல சுற்றுப் பேச்சுக்கள் நடத்திவிட்டோம். நாடாளுமன்றத் தெரிவுக் குழுக்கள், வட்டமேசை மகாநாடுகள், சர்வகட்சி மகாநாடுகள் எனப் பல பேச்சுகள் நடந்துமுடிந்துவிட்டன. நீண்ட நெடிய இப் பேச்சுகள் இறுதியில் எந்தவித முன்னேற்றமுமில்லாமல், ஆரம்பித்த இடத்திற்குத் திரும்பிவந்ததுதான் வரலாறாக உள்ளது. இந்நிலையில் தமிழ் மக்களின் சார்பில் பேசக்கூடிய வல்லமையுள்ளவர்களாகவும், தமிழ் மக்களுக்கு அதிக பட்ச உரிமைகளை எடுத்துக் கொடுக்கக்கூடிய வல்லமை உள்ளவர்களாகவும் விடுதலைப் புலிகளே உள்ளனர். என்வே அவர்களுடன் பேசுவதுதான் அர்த்த புஷ்டியுள்ளதும், யதார்த்தமானதுமாகும்.

### யுத்த நிறுத்தம்

இருபக்கமும் யுத்தம் நிறுத்தப்பட்டு, அமைதியான சூழல் ஒன்றிலேயே பேச்சு ஒன்று சாத்தியமானதாகும்.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு தமிழீழ விடுதலைப் புலிகள் நான்கு மாதம் ஒரு தலைப்பட்சமாக யுத்த நிறுத்தம் செய்தும்கூட, அரசு எந்த விதமான யுத்த நிறுத்தத்திற்கும் வரவில்லை. எனவே இத்தமிழர் கூட்டமைப்பானது யுத்தநிறுத்தம் ஒன்றை உருவாக்குவதன் மூலமே பேச்சுக்கான சூழலொன்றை உருவாக்கலாம் எனவும் கருதுகின்றது.

### 3ஆம் தரப்பு மத்தியஸ்தம்

மேற்கண்ட சூழல்கள் உருவாக்கப்பட்டுப் பேச்சுக்காக மூன்றாம் தரப்பு சர்வதேச மத்தியஸ்தம் ஒன்று அழைக்கப்படவேண்டும். கடந்த காலத்தில் நோர்வே அரசு மூன்றாம் தரப்பு சர்வதேச அனுசரணையாளராகச் செயற்பட்டது. அரசுதான் நோர்வேயின் பேச்சு முயற்சியை முடக்கியது. எனவே, சிங்கள அரசுகள் மீது தமிழ மக்கள் முழுமையாக நம்பிக்கை இழந்துள்ள சூழ்நிலையில் மூன்றாம் தரப்பு சர்வதேச மத்தியஸ்தம் இல்லாமல் பேச்சு ஒன்றை ஆரம்பிக்க முடியாது. ஆகவே, நோர்வே நாட்டின மத்தியஸ்தத்துடன் பேச்சு ஆரம்பிக்கப்படவேண்டும் என்பதும் தமிழர் கூட்டமைப்பின் கோரிக்கையாகும்.

இவற்றை நிறைவேற்றுவதற்கு எமக்கு மூன்று வழிகள் உள்ளன. முதலாவது - சிறிலங்கா அரசின் மீது அழுத்தங்களை உருவாக்குதல். இரண்டாவது - சர்வதேச அழுத்தங்களை சிறிலங்கா அரசு மீது உருவாக்குதல், மேற்கண்ட முயற்சிகள் பலனளிக்காத பட்சத்தில், தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டத்திற்கு உறுதுணையாகத் தொடர்ச்சியான மக்கள் எழுச்சிகளை வட - கிழக்கு எங்கும் ஏற்படுத்துவதன் மூலம் அரசுக்கு நெருக்கடிகளை உருவாக்குதல்.

இப்படியான அழுத்தங்கள், நிர்ப்பந்தங்களை உருவாக்கத் தமிழர் கூட்டமைப்புக்கு வலுவான தமிழ்ப் பிரதிநிதித்துவம் தேவை. பொத்துவிலில் இருந்து யாழ்ப்பாணம் வரை தமிழ் மக்கள் ஒருமுகமாகச் செயற்பட்டால 18 தொடக்கம் 20 பேரைக் கொண்ட தமிழ்ப் பிரதிநிதித்துவம் ஒன்றை உருவாக்கமுடியும்.



இப்படியான வலுவான பிரதிநிதித்துவம் ஒன்றை உருவாக்குவதன் மூலமே, அரசுக்கு சில முன்நிபந்தனைகளை விதித்து தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கான ஒரு களத்தை உருவாக்கமுடியும். அதுமாத்திரமல்லாமல், மக்களால் தெரிவு செய்யப்பட்ட வலுவான அமைப்புக்கு சர்வதேச அங்கீகாரமும் கிட்டும். அதன்மூலம் எமது மக்களின் கோரிக்கைகளை, சிந்தனைகளை உலகறியச செய்யமுடியும்.

"இந்தக் கூட்டமைப்பு தேர்தல் மட்டுந்தான்", "அதற்குப் பின்னர் இது சிதறிவிடும்" என எதிர்த்தரப்பில் இருககும் சிலர் பிரசாரம் செய்கின்றார்கள். ஆனால் அப்பிரசாரத்தில் எந்தவிதமான உண்மையுமில்லை என்பதைக் கூட்டமைப்பு சார்பாக நான் தெளிவுபடக் கூறிக்கொள்கின்றேன்.

தேர்தலின் பின்னர்தான் இக்கூட்டமைப்பின் வேலைகள் ஆரம்பமாகப் போகின்றன. தேர்தலில் உருவாகப் போகும் வலுவான தமிழ்ப் பிரதிநிதிதுவம், நிச்சயமாக ஒரு மாற்றத்தை உருவாக்கும்; பேச்சுக்கான களத்தை அமைப்பதற்கு உறுதியாகச் செயற்படும். எனவே தவறான பிரசாரங்களுக்குக் காதுகொடாமல், மக்கள் முழுமையாகத் தமிழர் கூட்டமைப்பை வெல்ல வைக்க செயற்படவேண்டுமெனத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன். ★

# கலாசாரச் சீரழிவுகளில் இருந்து ஆப்கானைக் காத்த தலிபான்கள்

6

ஓமரின் கலங்கலான புகைப்படம் ஒன்றை பி.பி.ஸி. அண்மையில் வெளியிட்டிருந்தது. கந்தகாரில் நடைபெற்ற ஊர்வலம் ஒன்றில் படம் எடுக்கப்பட்டிருந்தது. அதை வைத்து ஆளை அடையாளம் காண இயலாது. சில வருடங்களுக்கு முன்னர் பி.பி.ஸி. செய்தியாளருக்கு பேட்டியளிக்க முன்வந்த ஓமர் ஒரு திரைக்குப் பின்னால் இருந்து பேசியதாகக் கூறப்படுகின்றது. தனது இயக்கத்துக்கு ஆதரவு தராத எவ



ரையும் தான் கண்ணால் காண்பதில்லை என அவர் அங்கு விளக்கம் சொல்லியிருநதார். இவரது இயக்கம் சோவியத்தினால் சின்னாபின்னமாக்கப்பட்டிருந்த ஆப்கானில் 1994இல் துளிர்விட்டிருந்தது.

இவரது முதலாவது தாக்குதல் அணி 30 மாணவர்களுடனும் 16 துப்பாக்கிகளுடனும் ஓர் உள்ளூர் இராணுவ முகாமைத் தாக்கி அழிப்பதாக இருந்தது. இரு இளம் பெண்கள் முகாமுக்குள் கடத்தப்பட்டு, மொட்டையடிக்கப்பட்டு, கற்பழிக்கப்படுவதாகத் தகவல் கிடைத்ததும் பொறுக்காத ஓமர், அவர்களை மீட்கும் பணியில் இறங்கி வெற்றியும் கண்டிருந்தார். அந்த இராணுவக் கட்டளை அதிகாரியை ஒரு பீரங்கிக் குழாயில் கட்டி இழுத்து தமது இயக்கத்திற்கு ஆதரவு கண்டுகொண்டார்.

இப்போது வடக்குக் கூட்டணிப் படைகளிடம் இழக்கப்பட்டிருக்கும். ஆப்கான் தலைநகரான காபூல் 1996 இல் இவர்களினால் கைப்பற்றப்பட்டது. உத்தியோகபூர்வமான தலைநகரம் காபூல் என்றாலும் மத தீவிரவாத மையமாக கந்தகார் விளங்கியது. பின்லேடனின் ஆதரவு இவர்களின் ஆட்சிக்குத் தாராளமாக உண்டு. சின்னாபின்னமாக்கி, களவும், கலாசார சீரழிவும் நிறைந்திருந்த ஆப்கானில் ஓர் ஒழுங்குக் கட்டுப்பாட்டை கண்டிப்பாக அறிமுகம் செய்து தலிபான்கள் மக்கள் ஆதரவைப் பெற்றுக்கொண்டனர். தாடி வளர்த்து தலைப்பாகை கட்டிய இளைஞர்கள் இயக்கத்தில் இணையலாயினர்.

இவர்களை அமெரிக்கா எதிர்த்து தனது படைபலத்தைப் பிரயோகிக்கும் போது உள்வீட்டில் இருந்து அமெரிக்காவுக்கு உதவ எட்டப்பர் கூட்டமாக வடக்குக் கூட்டணி கங்கணம் கட்டிநிற்கிறது. எனவே தலிபான்கள் இக்கட்டான எதிரிகளைச் சமாளித்தே அமெரிக்காவுடன் மோதவேண்டிய நிலைக்குள்ளானார்கள்.

ஆப்கானிஸ்தானின் இயற்கை கெரில்லாப் போருக்கென்றே உருவாக்கப்பட்டது போலத் தெரிகிறது. அது ஒரு பலம் குன்றிய வசதிக் குறைவுடைய நாடாக இருந்தாலும் பல வல்லரசுகள் மூக்கை நுழைத்து அடிவாங்கியதுதான் வரலாறு. அங்குள்ள நிலைக்குத்தான குன்றுகள், பாறைத் தொடர்கள், மரங்களில்லா மலைகள், அவற்றின் நிலைக்குத்தான சாய்வுகள், கரடுமுரடான மலைப்பாதைகள், புழுதிப்படலம் என்பன அந்நியருக்கு சரிப்பட்டு வராத சமாச்சாரங்கள்.

ஆப்கான் விவசாயிகள் தேனீ வளர்ப்பில் ஆர்வம் காட்டுபவர்கள். அங்கிருந்து கிடைக்கும் தேனுக்கு அயல் நாடுகளில் மவுசு அதிகம். தேன் வியாபாரிகளின் போர்வையில் பினலேடனின் நண்பர்கள் உலா வருவதாகக் கருதப்படுகின்றது. அபின் உற்பத்தி ஆப்கான் விவசாயிகளுக்கு கைகொடுக்கும் மற்றொரு தொழிலாகின்றது.

## அகிலத்தை உலுக்கிவிட்ட அமெரிக்கா மீதான தாக்குதலும் அதன் தொடர் நிகழ்வுகளும்

1842இல் சுமார் 16,500 துருப்புக்களை பிரிட்டன் அங்கே இழந்திருக்கிறது. சோவியத் யூனியன் 1980 களில் பிச்சை வேண்டாம் நாயைப் பிடி என்று ஆப்கானிலிருந்து வெளியேறி இருக்கிறது. அப்போது கெரில்லாக்களுக்கு அமெரிக்க ஆயுதங்கள் (Stinger missiles) தாராளமாகக் கிடைத்திருக்கின்றன. ஆப்கான் தீவிரவாதம் அக்காலப் பகுதியில் அமெரிகாவால் உரமூட்டி வளர்க்கப்பட்டது. இன்று வளர்த்த கடா மார்பில பாய்கிறது! பின்லேடன் கூட அக்காலப் பகுதியில் அமெரிக்க உதவிகளைப் பயன்படுத்தியே தன்னை வளர்த்துக்கொண்டுள்ளார். அவரது இயக்கத்திற்கு CIA கைகொடுத்தும் இருக்கிறது.

கடந்த 500 ஆண்டுகால வரலாற்றில் எவரும் ஆப்கானுக்குள் நுழைந்து வெற்றிகண்டிருக்கவில்லை. அமெரிக்க வல்லரசு அண்மைய தாக்குதலைத் தொடர்ந்து ஆப்கானில் நுழையப் பார்க்கிறது. அமெரிக்கா என்றால் என்ன, உலகம் நடுங்கியா விடும்? வியட்நாமில் அமெரிக்கா கால்வைத்து வாங்கிய செமத்தி அடியை இன்னும் உலகம் மறந்திருக்காது. அப்படியானால் கடலில் இருந்தோ வானில் இருந்தோ குண்டுகளை மழையாகப் பொழிவதைத்தவிர வேறு வழி எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.


அண்மையில் பல உலக நாடுகளின் கண்டனத்துக்கு மத்தியில் ஆப்கானின் பாரிய புத்தர் சிலைகள் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டமை உலகம் அறிந்ததே. பாரிய மலைச் சுவர்களில் அச்சிலைகள் வடிக்கப்பட்டு இருந்தன. இத்தகைய பெரும் எண்ணிக்கையிலான மலைப் பாறைகளும் கற்குகைகளும் ஆங்காங்கே பரவிக் கிடக்கின்றன. வலிமையான கற்பாறைகளால் சூழப்பட்ட ஏராளமான கற்குகைகளில் எங்கே ஒஸாமா பின் லேடன் மறைந்திருக்கிறார் என்பது தெளிவாகக் கண்டுபிடிக்கப்பட முடியாது. இந்தநிலையில் எப்படி எங்கே தாக்க முடியும் என்கின்ற கேள்வி எழுகின்றது.

கற்குகைகளைத் தாக்க பெருந்தொகையான வெடிப்பொருள்களைப் பயன்படுத்தினாலும் அவை இலக்குகளை சிதைப்பதற்கு எந்தவிதமான உத்தரவாதமும் இல்லை. அமெரிக்காவில் இருந்துகொண்டு ஆப்கானிஸ்தானைத் தாக்க இயலாது. அதற்கு அருகில் உள்ள நாடுகளிடம் உதவி கோரி கையேந்தும் நிலையில் அமெரிக்கா நிற்கிறது. சந்தர்ப்பம் பார்த்து உதவி அளிக்கவும் உள்நோக்கங்கள நிறையக்கொண்ட நாடுகள் தவிக்கின்றன. அவர்களின் உள்நோக்கங்கள் பற்றியும் அமெரிக்கா அஞ்சுவதாகத் தெரிகிறது.

பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் முஷாரப் உதவிட முன்வந்தது அமெரிக்காவிற்குப் பெரிய வரப்பிரசாதம் என்றே கருதலாம். ஏனெனில் அது ஆப்கான் எல்லையில் அமைந்துள்ளது. ஆனால் உதவிக்கான கைம்மாறாகப் பாகிஸ்தான் பாரிய எதிர்பார்ப்புக்களுடன் இருப்பதாகப்படுகிறது.

தற்போது அணுஆயுத பரிசோதனைகளை நடத்துவதற்கு பாகிஸ்தானுக்கு ஐநா. தடை விதித்துள்ளது. அந்தத் தடையை விலக்கிக் கொடுப்பதில் அமெரிக்கா உதவியாக வேண்டும் என்பதே பாகிஸ்தானின் எதிர்பார்ப்பு என ஊகிக்கப்படுகிறது. இதனைச் செய்ய நினைத்தாலும் அமெரிக்கா தனித்துச் செயற்பட முடியாது. ஐ.நா.வில் அங்கம் வகிக்கும் ஏனைய நாடுகளின் ஒத்துழைப்பை அது கோரவேண்டும். தடையை விலக்குவதாயின் ஐ.நாவின் நிபந்தனைகளுக்கு பாகிஸ்தான் உடன்பட்டாக வேண்டும்.

பின்லேடனைத் தோற்கடிப்பதில் குறியாக இருக்கும் பாகிஸ்தான், அதற்காக தலிபான்களை எதிர்க்கும்





ஆப்கான் வடக்குக் கூட்டணிக்கு சாதகமாக - அதன் கையில் ஆட்சி போவதை விரும்பவில்லைப்போலத தெரிகிறது.

இத்தனை சிக்கல்களைத் தவிர்த்து பாகிஸ்தானை ஒதுக்கிவைத்து ஆப்கானுக்குள் அமெரிக்கா காலூன்ற முடியாது. இவ்வாறே ஆசியப் பிராந்தியத்தில் பல்வேறு நாடுகளிடம பல்லுக்காட்டி அமெரிக்கா தாக்குதலைத் தொடங்கியது. அந்தந்த நாடுகளும் முந்திரிக்கொட்டைமாதிரி முந்திக்கொண்டு அமெரிக்காவுக்கு உதவிசெய்யத் துடிக்கின்றன. அமெரிக்கா தம்மிடம் உதவி கேட்காதா என ஏங்கித் தவிக்கின்றன. அரபுநாடுகளின் பகையை இவை ஏன் வலிந்து தேடுகின்றன என்ற ஆதங்கம் அந்நாட்டு மக்களிடம் எழுவது இயற்கையே.

பாகிஸ்தானில் மக்களின் உணர்வுகள் தலிபான்களுக்கு எதிரானவை என்றும் கருதமுடியாது. எனவே அதிபா முஷாரப் அமெரிக்காவுக்கு உதவி நின்றாலும் அவருக்கு எதிரான போக்கு தலைதூக்குவது தவிர்க்க இயலாதது. இது முஷாரப்பின் தலைவிதியையே மாற்றிவிடவும் கூடும். இந்தியாவும் பாகிஸ்தானும் அணுவாயுதப் பரிசோதனைகளின் மூலம் அமெரிக்காவுடன் முறுகல் நிலையில் இருந்த வேளையில் அவர்களிடம் கையேந்தும் நிலைமைக்கு அமெரிக்கா வந்துவிட்ட வாய்ப்பைப் பயன்படுத்தவே முனைகின்றன.

பாகிஸ்தான் மீதான தனது பொருளாதாரப் ( )க்கை அமெரிக்கா மாற்றும்போது அது பாகிஸ்தானிய மக்களின் மனங்களை விலைக்கு வாங்கிவிடமுடியும். கல்வி வசதிகள் பாகிஸ்தானிய முஸ்லிம் பெண்களை பர்தாவை வீசிவிட்டு வீதிக்கு இழுத்து வந்துவிடும் அடைபட்டுக் கிடக்க எவர்தான் விரும்புவார்கள்? வேலை வாய்ப்புக்களை அமெரிக்க நிதிவசதிகள் பாகிஸ்தானில் அள்ளி வழங்கினால் மதவாதப் போக்கைக் கைவிட்டு இளைஞர்கள் அமெரிக்கப் போக்கிற்கு மாறிவிடுவார்கள். ஆசை காட்டி மோசம் செய்வது மிகச் சுலபம்.

ஆனால் செப்ரெம்பர் 11இன் விமானத் தாக்குதல்களைத் தொடர்ந்து நிலைகுலைந்துவரும் அமெரிக்கப் பொருளாதாரம் இதற்கெல்லாம் இடங்கொடுக்குமா?

தாக்குதல்களைத் தொடங்குமுன்னர் அமெரிக்கா மிகவும் நிதானமாக பல்வேறு சாத்தியங்களையும் இட்டு ஆலோசித்து இருந்தது. அமெரிக்கப் பத்திரிகைகள் பல ஊகங்களை வெளியிட்டும் இருந்தன. எந்தவகையில் பின்லேடனை வெல்வது என்கின்ற கேள்விக்கு சுலபமாக விடைகாண இயலவில்லை. ஆனால் தலிபான்களை பலவீனப்படுத்தி அவர்களை நிலைகுலையச் செய்தாக வேண்டும் என்பதில் அமெரிக்கா குறியாக இருந்தது; அதில் ஓரளவு வெற்றியும் கண்டது.

அமெரிக்கா தாக்குதலின் ஆரம்பத்தில் பெருமளவிலான குரூஸ் ஏவுகணைகளை ஆப்கான் நகரங்களின்மீது ஏவியது. இவை 1500 முதல் 2500 கி.மீ வரை சென்று இலக்குகளைத் தாக்க வல்லன. ஓர் ஏவுகணையின் நீளம் ஆறு மீற்றர் வரை இருக்கும். அதாவது அது இருபது அடி நீளமானது. அதன் எடை 1750 கிலோ ஆகும்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் முதலில் உலக நாடுகளை இரண்டு தெளிவான கூறுகளாகப் பிரிக்க முயற்சிகளை மேற்கொண்டார். தமக்கு ஆதரவு தருபவர்கள் அல்லது தமது எதிரிகள் எனத் தெளிவாக இருகூறிட அவர் முயன்றாலும் ஆதரவு தெரிவிக்கும் நாடுகள் பல்வேறு நிபந்தனைகளை முன்வைக்கத் தவறவில்லை.

கண்மூடித்தனமான வான் மற்றும் ஏவுகணைத் தாக்குதல்கள் காரணமாக அப்பாவிப் பொதுமக்களின் உயிரிழப்புக்கள் அதிகரிக்குமானால் அமெரிக்கா மேலும் பகையைத்தான் சம்பாதிக்க வேண்டியிருக்கும். எனவே தரைவழியாக ஆப்கானுக்குள் ஊடுருவி இடங்களையும் இலக்குகளையும் தெளிவாக அடையாளம் கண்டு நேரடியாகத் தாக்கினால் என்ன என்கின்ற வாதங்களையும் பலர் முன்வைத்தனர். அது அமெரிக்கத் துருப்புக்களுக்கு இழப்புக்களை ஏற்படுத்தும் ஒரு முயற்சி ஆகிவிடும். எல்லோரும் ஏறிச் சறுக்கிய குதிரையில் அமெரிக்காவும் ஏறிச் சறுக்கிவிழத் தயாரில்லைப் போலும். என்றாலும் வான்வழித் தாக்குதலகளைத் தொடர்ந்து அமெரிக்கத் துருப்புக்கள் சில இடங்களில் தரையிறங்கி இருக்கின்றன.

இரகசிய உளவாளிகளை ஆப்கானுக்குள் ஊடுருவ வைத்து பின்லேடனின் இருப்பிடம் பற்றிய விவரங்களை சேகரிப்பது என்பது மிகவும் கடினமான பணி. அங்கேயே ஊறி வாழ்பவர்களுக்கும் தலிபான் தீவிர வாதிகளுக்கும்கூட பின்லேடனின் இருப்பிடம் பற்றிய தகவல்கள் கிடைப்பதில்லை.

**மு. சிவநேசன்**

ஆலோசனைகளை மாதக் கணக்கில் நடத்திக் கொண்டிருந்தாலோ நிலைமைகளை ஆழமாக ஆராய்ந்து கொண்டிருந்தாலோ விடிவு கிட்டப் போவதில்லை. அமெரிக்க மக்களைத் திருப்திப்படுத்த அடித்தே ஆகவேண்டிய அவசரம் புஷ்ஷிற்கும் இருந்தது. அமெரிக்க ஆதரவு நாடுகளுக்கும் உண்டு. அடித்து அடக்கி வைக்காதபோது அடுத்த தாக்குதல் தமது நகரங்களில் இயல்புநிலையைக் குலைத்துவிடும் என்கின்ற அச்சம் மேற்குலக நாடுகளை ஆட்டிப்படைத்தது.

இந்த நிலையில்தான் ஆப்கான் மீது கடுமையான தாக்குதலை அமெரிக்கா ஆரம்பித்தது.

தனியே வான்வழித் தாக்குதல் மூலம் தலிபான்களின் கொட்டத்தை அடக்கிவிட முடியாது என்பதை உணர்ந்த அமெரிக்கா, வான்வழியாக பல்லாயிரம் தொன் குண்டுகளை வீசி தலிபான்களை நிலைகுலைய வைத்துக்கொண்டு -

ஆப்கானின் தரையமைப்புக்கு இயைவான வழியில் செயற்படும் அனுபவமும், வல்லமையும், பிறப்பிலேயே அதற்கான வலிமையும் கொண்ட வடக்குக் கூட்டணிப் படையினரை தலிபான்களின் பிரதேசத்துக்குள் முன்னேற வைத்தது.

வடக்குக் கூட்டணியினரை வழி நடத்தும் பொறுப்பு, பிரிட்டனின் விசேட கொமாண்டோப் படை அதிகாரிகளிடம் வழங்கப்பட்டது.

விளைவு....?

தலைநகர் காபூல் இப்போ வடக்குக் கூட்டணி வசம்.

கந்தகார் உட்பட தென்பகுதிகளுக்கு தமது ஜாகையை மாற்றிக் கொண்டு உலக வல்லரசான அமெரிக்காவையும், அதன் நேசநாட்டுப் படைகளையும், வடக்குக் கூட்டணியையும் ஒரே சமயத்தில் எதிர்த்துக் கொண்டு கிளர்ந்து நின்கின்றது தலிபான். (வளரும்)

# எம் மக்களோடு சில வார்த்தைகள்!

***எம் இனிய தமிழ் பேசும் மக்களுக்கு வணக்கம்!***



தேர்தல் வரும்போது மட்டும் தேடி வருபவர்கள் நாமல்லர். தேசம் எரியும்போது. தேசத்தில் மக்கள் நலியும்போது ஓடி ஒளிந்து கொள்பவர்களும் நாமல்லர். மக்களிடையே நின்று மக்களின் மகிழ்ச்சிக்காக என்றும் உழைப்பவர்கள் நாம்!

கூட்டு என்ற புதிய போர்வைக்குள் அதே பழைய முகங்கள் புன்னகையோடு உங்கள் வாசலுக்கு வாக்குக்கேட்டு வருகின்றன. ஆனால் உங்கள் புன்னகையோ எரிகின்ற யுத்தத்தினால் திருடப்பட்டு விட்டது.

எரிகின்ற யுத்தத்திற்கு அர்த்தமுள்ள அரசியற் தீர்வு வேண்டும்! தீர்வொன்று கிட்டும்வரை எம்மக்களுக்கான இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்! மக்களின் முகங்களில் புன்னகைப் பு, பு,க்கவேண்டும்! இதுவே ஈ.பி.டி.பியின் அரசியல். நடைமுறைக் கோட்பாடு.

இன்றைய எமது நிலைப்பாடு - அனுபவங்களின் வெளிப்பாடு! ஆனாலும் இதை நியாயப்படுத்துவதற்காக எமது கடந்தகால நடவடிக்கையினை கொச்சைப்படுத்த நாம் தயாரில்லை. ஆயுதம் ஏந்தி நாம் போராடியதை ஒருபோதும் நான் பிழையென்று கூறப்போவதில்லை.

போராட்டம் என்பது நிற்கவேண்டிய இடத்தில் நிற்கவும் நிதானித்துச் செல்லவேண்டிய இடத்தில் நிதானித்தும் தொடரப்பட வேண்டும்! ஆகவேதான் எமது விடுதலையை நோக்கிய பயணத்தை இன்னொரு புதிய வடிவத்தில் நாம் முன்னெடுத்துச் செல்கின்றோம்.

எமது அரசியற் பலத்தைப் பயன்படுத்தி "மத்தியில் கூட்டாட்சி. மாநிலத்தில் சுயாட்சி"; "எக்காலமும் பிரிக்கப்பட முடியாத வடக்கு - கிழக்கு ஓர் அலகு; அதற்கு விசேட அதிகாரங்கள்" என்னும் கோரிக்கையை முன்வைத்து. அரசுடன் பேரம் பேசி. அழுத்தம் கொடுத்து. முழுமையாகவோ அல்லது கட்டம் கட்டமாகவோ எமது உரிமைகளைப் பெறமுடியும் என்று நாம் திடமாக நம்புகின்றோம்! இந்த வேலைத்திட்டத்தின் அடிப்படையிலேயே நாம் நகர்கின்றோம்!

எமது மக்கள் துன்பத்தில் சாதல் கண்டு நாம் பொறுத்திருக்க முடியாது. மக்களின் துன்பத்தை வைத்து நாம் அரசியல் நடத்தவும் விரும்பவில்லை. ஆகவேதான் நடைமுறைக்குச் சாத்தியமான. மாற்று வழியாக புதிய வழிமுறையை நாம் தேர்ந்தெடுத்தோம்.

இனத்தின் பெயரால் முளைத்த தேர்தற் கூட்டமைப்பொன்று உங்களைத் தேடி வருகின்றது.

இவர்களிடம் கொள்கை. கோட்பாடு. குறித்த இலக்கை எட்டுவதற்கான ஒரு வேலைத்திட்டம் எதுவுமேயில்லை.

1995ஆம் ஆண்டு அரசு. அரசமைப்புச் சீர்திருத்தம் ஒன்றை வெளியிட்டிருந்தது. அதற்கான மாற்று யோசனைகளைச் சமர்ப்பிக்குமாறு அரசு சகல அரசியற்கட்சிகளிடமும் கோரியிருந்தது.

எமது தாயகக் கோட்பாட்டை வலியுறுத்தி 19 பக்கங்களில் மாற்று யோசனை ஒன்றை நாம் அரசுக்கு வழங்கியிருந்தோம். எந்தவொரு கொள்கைத் திட்டமுமே கொண்டிராத கூட்டணியினர் எந்த யோசனைகளையும் அரசிடம் சமர்ப்பித்திருக்கவில்லை.

தேர்தற் கூட்டமைப்புக் கட்சிகளிடம் நான் மக்களின் சார்பாக வேண்டுகோள் விடுக்கின்றேன். உங்களால் முடிந்தால் உங்களது வேலைத்திட்டத்தையும் கொள்கைத்திட்டத்தையும் மக்கள் முன் சமர்ப்பிக்க முடியுமா? இதுவிடயமாக பகிரங்க விவாதத்திற்கும் ஈ.பி.டி.பி. தயார்!

தாயானவள் ஒருத்தி கருவுற்றிருக்கும் போது தானாகவே பிரசவம் நடக்கும் என்று காத்திருக்கமாட்டாள். பத்தியம் காத்து. சத்துணவு சாப்பிட்டு. தன் குழந்தை குறைப் பிரசவமாகிவிடக்கூடாது என்பதில் கவனமாக இருப்பாள்.

ஆம். இன்று எம் தேசத்தின் கருவறையில் சமாதானத்திற்கான வேட்கையொன்று கருவுற்றிருக்கிறது.

பிரசவம் சத்திரசிகிச்சையால் நடக்குமா? சாதாரணமாக நடக்குமா? இது அடுத்த விடயம்.

இப்போது கருவுற்றிருக்கும் எம் தேசத்திற்கு நல்ல பத்தியமும் சத்துணவும் தேவைப்படுகின்றது.

நாளாந்தப் பிரச்சினைகளுக்கான தீர்வு! அபிவிருத்திப் பணி! இவைகளைச் சத்துணவாகவும் பத்தியமாகவும் எம் தேசத்திற்கு ஈ.பி.டி.பி. இயன்றளவு கொடுத்து வருகின்றது. இதுவே உண்மை!

இவைகள் சலுகைகள்தானா?... மக்களே! நீங்கள்தான் தீர்மானமெடுக்கவேண்டும்!

பாலஸ்தீன மண்ணிலே நான் ஆயுதப்பயிற்சி எடுத்தபோது எனக்கிருந்த விடுதலை உணர்வு! அதற்கான போர்க்குணாம்சம் என்பன இப்பொழுதும் எள்ளளவும் குறையாமலே இருக்கின்றன.

ஆயினும். நாம் மிகத் தெளிவாகவும். நிதானமாகவும் எமது அரசியலுரிமைக்கான போராட்டப் பாதையில் முன்னேறி வருகின்றோம். நாம் சலசலப்பை விரும்பவில்லை. சாதனைகளையே விரும்புகின்றோம். சாதனைகள் ஒவ்வொன்றும் மக்களின் விடுதலையை நோக்கியதாகவே இருக்கும். அநாதைக் குழந்தைகள்போல் நடுத்தெருவில் நின்றிருந்த இயக்கங்களைத் தத்தெடுத்த தலைவர்கள் இன்று உரிமை பற்றி முழங்கிக் கொண்டிருக்கின்றார்கள்.

அரைகுறைத் தீர்வுக்களுக்காகவோ. அரசு தரும் சலுகைகளுக்காகவோ எமது மக்களையும் தேசத்தையும் யாரிடமும் விலைபேசி விற்பதற்கு நாம் விடுதலை உணர்வு அற்றவர்களல்லர். ஈ.பி.டி.பிக்கு எதிராக நான்கு குழுக்கள் இணைந்து தேர்தற்கூட்டு அமைத்திருக்கின்றார்கள். இந்த நிகழ்வு நாம் மாபெரும் சக்தியாக வளர்ந்திருப்பதையே குறித்து நிற்கின்றது.

அன்பார்ந்த மக்களே! மக்களை வதைப்பதற்காகவோ. மக்களிடம் வரியும். கப்பமும் வசூலிப்பதற்காகவோ. புலிகளைப் பிடிப்பதற்காகவோ நாம் எமது தோழர்களை மக்களாகிய உங்களிடம் அனுப்பவில்லை.

- மக்களின் நாளாந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுங்கள்!
- எமது அரசியலுரிமையை வென்றெடுக்க உழையுங்கள்!
- அறிவுசார்ந்த தேசத்தை உருவாக்குங்கள்!
- மக்களை மரியாதையுடன் நடத்துங்கள்!
- மக்களிடமிருந்து ஓர் ஊசியையோ நூலையோ கூட எடுக்காதீர்கள்!
- அபிவிருத்திப்பணியில் ஈடுபடுங்கள்!
- அவர்களது கண்ணீரைத் துடையுங்கள்!
- மக்களை ஓரணியாக அணி திரட்டுங்கள்.

இது போன்ற கட்டாய கட்டளைகளையே நாம் எமது தோழர்களுக்குப் பிறப்பித்திருக்கின்றோம்!

சுவர் இருந்தால் மட்டுந்தான் சித்திரம் வரையமுடியும்!

ஈ.பி.டி.பியிடம் பலம் இருந்தால் மட்டுமே எமது அரசியலுரிமையைப் பெறமுடியும்! அந்தப்பலத்தைக் கட்டியெழுப்பும் பணியில் இப்போது நாங்கள்....


மக்களே! அந்தப்பணியில் உங்கள் கரங்களையும் இணைத்துக்கொள்ளுங்கள்! ஈ.பி.டி.பியைப் பலப்படுத்துங்கள்! தர்மம் வெல்லும்! தேசம் விடியும்! எங்கள் விடுதலைப் பயணத்தில் மக்களின் கண்ணீரையும் துடைத்தே பயணிப்போம்!

**என்றும் நாம் மக்களின் நண்பர்கள்!**
**தேசத்திற்காக தியாகங்களை ஏற்போம்!**

**உங்களில் ஒருவன்,**
**மக்கள் சேவையிலுள்ள,**

**கே.என்.டக்ளஸ் தேவானந்தா,**
செயலாளர் நாயகம்,
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி).

(93921)



## அதிகாரி கைது!

ஊவா மாகாணத்தின் பரணகம பஸ டிப்போவின் தொழில்நுட்ப அதிகாரி ஒருவர் லஞ்சஊழல் விசாரணை ஆணைக் குழுவினால் கைதுசெய்யப்பட்டிருக்கிறார். ஒப்பந்தகாரரிடம் 60ஆயிரம் ரூபாவை லஞ்சமாகப் பெற்றார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர் கைதானார்.(க-4)

## கோப்பாயில் விழிப்புக் குழு மீது கல்வீச்சு!

ரோந்தில் ஈடுபட்டிருந்த விழிப்புக் குழுவை நோக்கி விஷமிகள் கல்லால் எறிந்து தாக்கிவிட்டு தலைமறைவாகினர்.

கோப்பாயில் கடந்த புதன்கிழமை இரவு ஒரு மணிக்கு இச்சம்பவம் இடம் பெற்றது.

கோப்பாய் மத்தி வெள்ளெருவை பிள்ளையார் சனசமூக நிலையத்தைச் சேர்ந்த விழிப்புக் குழுவினர்மீதே இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இந்தத் தாக்குதலின்போது தெய்வாதீனமாக எவரும் காயமடையவில்லை எனவும், ஆத்திரம் கொண்ட திருடர் கோஷ்டியைச் சேர்ந்தவர்களே இத் தாக்குதலை மேற்கொண்டிருக்கலாம் எனவும் விழிப்புக் குழுவினரால் தெரிவிக்கப்பட்டது. (க-15)


## என்றும் உங்கள் சேவையில்



| | | | X |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 |

உங்கள் வாக்கு,
யாழ்.மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர்
**திரு.கா.சந்திரராசா SLAS**
அவர்களுக்கே
(ஓய்வுபெற்ற பிரதேசச் செயலர், சங்கானை, சண்டிலிப்பாய், தெல்லிப்பழை; ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர் (A.O.), கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்) (93912)

## திருமண மண்டபமும் தங்குமிட வசதியும்

வட பகுதியிலிருந்தும் மற்றும் எந்த நாட்டிலிருந்தும் கொழும்பு செல்லும் பயணிகளுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி!

**VANIY INN லொட்ஜ்**

சகல வசதிகளுடன் குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவை புரியும் சுத்தமான, பாதுகாப்பான, அமைதியான சூழலில்...
ஒரு முறை விஜயம் செய்து பார்த்தால் உண்மை புரியும்.

No.89, Hinny Appuhamy Mawatha,
Vanrooyan Street, Colombo 13
T.P.No.01 433182, 472582
(94062)

## சீரான சிகரெட் விநியோகம்

அன்பார்ந்த வர்த்தகப் பங்காளிகளே!

நீங்கள் அறிந்ததுபோல், குடாநாட்டுக்குக் கப்பல் மூலமாகப் பொருள்களைக் கொண்டுவரும் பணி பல நாளகளாக ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளது. இதன் காரணமாக எம் பங்காளிகளாகிய உங்களுக்கும் பாவனையாளர்களுக்கும் சீரான சிகரெட் விநியோகத்தை உறுதிசெய்வதற்கு நாங்கள் விமான சேவையை நாடவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இதனால் செலவினங்கள் பல மடங்குகள் அதிகரித்துள்ளன. இருந்தபோதிலும், நாங்கள் ஒரு சிறு தொகையையே உங்களிடமிருந்து மேலதிகமாக அறிவிடத் தீர்மானித்துள்ளோம். திரும்பவும் கப்பல் சேவை சீரானவுடன் இம்மேலதிகக் கட்டணம் நீக்கப்படும் என்பதை உறுதியாகக் கூறுகின்றோம். இதற்கு உங்கள் ஆதரவை எதிர்பார்த்து நிற்கின்றோம்.

| சிகரெட் வகை | முன்னைய விலை(பண்டல் ஒன்றுக்கு) | புதியவிலை | சில்லறை விலை |
|---|---|---|---|
| JPGL 20 | 1370.00 | 1400.00 | 7.50 |
| JPGL 12 | 1644.00 | 1674.00 | 7.50 |
| Bristol 20 | 1298.00 | 1328.00 | 7.00 |

வடபகுதி விற்பனை அதிகாரி.
(94587)

# எதிர் காலம் நாமே......




உங்கள் பிள்ளைகளின்
எதிர்காலத்திற்காக சேமித்து
பரிசுகளை வெல்லுங்கள்.
'ரண் கெகுளு இத்துரும் வாசனா' மூலம்
அதிர்ஷ்டத்தை பெறுவது மிக இலவாகும்.

நவம்பர் 30ஆம் திகதிக்கு முன்னர்......
- உங்கள் மகன்/ மகளின் "ரண் கெகுளு" சேமிப்புக் கணக்கில் ரூபா 3000/= அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை வைப்பிலிடுங்கள்.
- தற்போது "ரண் கெகுளு" சேமிப்புக் கணக்கொன்று இல்லையெனில் ரூபா 3000/= அல்லது அதற்கு மேற்பட்டதொகையை செலுத்தி உடனடியாக கணக்கொன்றை ஆரம்பியுங்கள்.

"ரண் கெகுளு வாசனா" மூலம் உங்கள் பிள்ளைகளுக்கும் வெற்றி, உங்களுக்கும் வெற்றி.



**இலங்கை வங்கி**
உங்கள் தேவைகளைச் சந்திக்கும்
(C/19315)
(C-19315)



- ❖ இரண்டு பேரினவாதக் கட்சிகளுடன் இணங்கிப் போவதை மறுத்து -
- ❖ தோல்வி கண்டு வந்த பேரப்பேச்சு அரசியலை நிராகரித்து -
- ❖ கடந்த கால அரசியல் தவறுகளால் கறைபடிந்த தலைமைகளை நிராகரித்து -
- ❖ வெகுஜனப் போராட்ட அரசியலை வலிமையுடன் முன்னெடுக்க -

புதிய மாற்று அரசியல் சக்திக்கு அங்கீகாரம் தாருங்கள்.

சி.க.செந்தில்வேல்
முதன்மை வேட்பாளர்
6

X

ஜனநாயக இடதுசாரி முன்னணி
(புதிய ஜனநாயகக் கட்சி)



சோ.தேவராஜா
சட்டத்தரணி
12

(93922)

# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2001

## ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின்



## யாழ்.மாவட்ட தமிழ் வேட்பாளரான

# ஞானசுந்தரம் ஆனந்தகுமார் அவர்கள்

# உங்களுக்கு விடுக்கும் செய்தி

அன்பார்ந்த வடபுலம் வாழ் தமிழ் பேசும் மக்களே!


இன்று எமது நாடு வரலாற்றில் ஒருபோதும் இல்லாதவாறு பெரும் அரசியல், பொருளாதார நெருக்கடிகளுக்கு உள்ளாகியிருக்கின்றது. நடைபெறுகின்ற கொடூரயுத்தம் இதற்கொரு மூல காரணியாக இருந்தாலும் அரசியல் தலைவர்களும் அரசும் அரச உயர் அதிகாரிகளும் இதற்கு ஒரு வகையில் பொறுப்பேற்க வேண்டும். நாட்டின் நலன் பேணாத அரசியல் வாதிகளின் சுயநல அரசியல் வாழ்வும் தூரநோக்கற்ற அரசும் அரச உயர் அதிகாரிகளின் அசமந்தப் போக்கும் இதற்குக் காரணம் என்று குற்றம் சுமத்தியே ஆகவேண்டும்.

அரசியல் சீர்கேடுகள், அரச அராஜகம், எங்கும் லஞ்சம், மோசடி அடாவடித்தனங்கள், நேர்மையின்மை, சமூகச் சீர்கேடுகள் இவை இன்று எமது நாட்டின் ஒட்டுமொத்தமான வடிவங்களாகவும் எமது நாட்டிற்கு உரிமையாக்கப்பட்டவையாகவும் இருக்கின்றன. இவை எல்லாவற்றிற்கும் அப்பால் வடக்கு - கிழக்கு வாழ் மக்களின் பிரச்சினைகள் மாறுபட்டவையாகவும் விசேட தன்மை பொருந்தியவையாகவும் இருக்கின்றன. சுதந்திரத்தின் பின் வந்த அரசியல் தலைவர்கள் இலங்கையர் என்கின்ற தேசிய தன்மையை வளர்க்கத் தவறிவிட்டனர். இதற்குப் பதிலாக பௌத்தமதம் அரச மதமாகவும் சிங்களமொழி அரசகரும மொழியாகவும் மாற்றப்பட்ட காரணத்தினால் ஏனைய மதங்களும் தமிழ் மொழியும் புறந்தள்ளி வைக்கப்பட்டு, சிங்கள இனக்குழுவைத் தவிர, ஏனைய இனங்களான தமிழ், முஸ்லிம், பறங்கியர், மலாயர் போன்றோர் இரண்டாம்தர - உரிமையற்ற - இனங்களாக ஒதுக்கி வைக்கப்பட்டனர். தமிழ், முஸ்லிம் தேசிய இனங்கள் முழு இலங்கைத் தேசியத்தில் இருந்து புறந்தள்ளி வைக்கப்பட்டு, தமிழ், முஸ்லிம் மக்களின் மரபுவழித் தாயகமான வடக்கு - கிழக்கில் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டன. தமிழ், முஸ்லிம் மக்களை பொருளாதார ரீதியாக ஒடுக்கவும் இனத்துவ ரீதியாக ஒழிக்கவும் மாறிமாறிவந்த சிங்கள அரசுகள் திட்டமிட்டு இனக்கலவரங்களை தூண்டிவிட்டன. இதன் காரணமாக தமிழ், முஸ்லிம் மக்களின் பொருளாதார உடைமைகள், உயிர்கள் அழிக்கப்பட்டன; தரப்படுத்துதல் மற்றும் விகிதாசாரப் பல்கலைக்கழக அனுமதியின் ஊடாக தமிழ் மக்களின் வாழ்க்கைக்கு உறுதுணையான உயர்கல்விக்கு ஆப்பு வைக்கப்பட்டது. அரசாங்கத் தொழில் துறைகளில் தமிழ், முஸ்லிம் மக்கள் புறக்கணிக்கப்பட்டனர். அரச வளங்களும் பொருளாதார வளமும் அவர்களால் வடக்கு - கிழக்கிற்கு மறுக்கப்பட்டதுடன் தமிழ் முஸ்லிம் மக்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டது. இதன் விளைவாக என்று வாழ்க்கைக்கு உத்தரவாதம் இல்லையென்று தமிழ் மக்கள் கருதினார்களோ அன்று தமிழ் இளைஞர்கள் தமது தாய் மண்ணின் பாதுகாப்பிற்கும் தம் இனத்தின் பாதுகாப்பிற்கும் தம் கைகளில் ஆயுதம் எடுத்து தமது இழந்த அரசியல் உரிமைக்காக போராடத் தொடங்கினர்.

சுதந்திரத்தின் பின் தமிழ்மக்கள் தமது உரிமைகளை வென்றெடுக்க நடத்திய அத்தனை ஜனநாயகரீதியான போராட்டங்களும் அரச பயங்கரவாதத்தால் அடக்கி ஒடுக்கப்பட்டது. அதன் பின் எழுந்த தமிழ் மக்களின் எழுச்சியையும் அரசு ஆயுதமுனையில் அடக்க முற்பட்டதன் விளைவாகவே இன்று இலங்கைத் தீவு இரத்தம் தோய்ந்த தீவாக மாறியுள்ளது. யுத்தத்தின் ஊழித் தாண்டவம், தமது தாயகத்தில் நெடுங்காலமாக ஒன்றிணைந்து ஒற்றுமையாய் சகோதரத்துவத்துடன இணைந்து வாழ்ந்த தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் விரிசலை ஏற்படுத்தியது.

இந்த நிலைமை என்னைச் சிந்திக்க வைத்தது. இதன் பிரவாகமே எனது அரசியல் பிரவேசம்.

இன்று எமது தாய் மண்ணான வட புலத்தில் ஆரோக்கியமற்ற நிலைமை நிலவுகின்றது; சமூகச் சீர்கேடுகள் பெருகி விட்டன. ஒழுக்கத்துடனும் பண்புடனும் தமக்கே உரித்தான சமூகக் கோட்பாடுகளுடனும் வாழ்ந்த யாழ்.மண்ணின் மைந்தர்களான தமிழ், முஸ்லிம் மக்களின் சமூக வாழ்வும், சமூகப் பண்பும் சீர்குலைந்து போயுள்ளன.



இந்த நிலைமை மாற்றப்பட வேண்டும். இவ்வாறான நிலைமையை மாற்றியமைப்பதற்கு ஒழுங்கான, இதய சுத்தியுடன் கூடிய நேர்மையான, சுயநலப்போக்கற்ற அரசியல் தலைமைத்துவம் வேண்டும். இவ்வாறான நிலை மையை தோற்றுவிக்கவே முதற்கன் நான் அரசியலில் ஈடுபட்டேன்.

இதற்காக நான் ஏன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைத் தேர்ந்தெடுத்தேன்?

முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தோற்றத்துக்கு முன்பு தந்தை செல்வா வழியில் தமிழரசுக் கட்சியும், தமிழர் விடுதலைக் கூட்டணியும் இந்நாட்டின் அரசுகளால் முஸ்லிம் மக்களுக்கு எழுந்த பிரச்சினைகளுக்கு குரல் கொடுத்தன. தமிழரசுக் கட்சியிலும் தமிழர் விடுதலைக் கூட்டணியிலும் முஸ்லிம் அரசியல் தலைவர்கள் பங்கெடுத்து தந்தை செல்வாவுடன் கைகோத்து செயற்பட்டனர். அதேபோல் எமது தாய் மண்ணின் மீட்புக்காக நடைபெற்ற போராட்டத்திலும் முஸ்லிம் இளைஞர்கள் இணைந்து செயற்பட்டனர். ஆனால் சிங்களப் பேரினவாத அரசுகளின் சதித்திட்டத்தால் இந்த இரு சமூகங்களுக்கும் இடையில் விரிசல் ஏற்படுத்தப்பட்டு இந்த அன்னியோன்னியம் சீர்குலைக்கப்பட்டது. இவ்வாறானதொரு சூழ்நிலையிலேயே அமரர் அஷ்ரப் அவர்களினால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உருவாக்கப்பட்டது. அவரின் தூரநோக்குடனான அரசியல் தீர்க்கதரிசனத்தின் காரணமாக தேசிய ஐக்கிய முன்னணி ஆரம்பிக்கப்பட்டு துரதிர்ஷ்டவசமாக அவரின் அகால மரணத்தின்பின் அக்கட்சி சிதைந்துபோனது.

இதன்காரணமாகவே சீர்குலைந்துபோன தமிழ் - முஸ்லிம் மக்கள் உறவை சீர்ப்படுத்தவும், வடபுலத்தில் ஆரோக்கியமான சூழலை ஏற்படுத்தவும், சமூகச் சீர்கேடுகளை ஒழித்து சமூகத்தில் சீரான - மேன்மைமிகு - யாழ்ப்பாண சமூகத்தைக் கட்டியெழுப்பவும் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் நான் இத்தேர்தலில் போட்டியிடுகின்றேன். கல்விமான்கள், விவசாயிகள், இளைஞர்கள், யுவதிகள், தமிழ் - முஸ்லிம்கள் நல்லுறவை நாடும் இனிய நெஞ்சங்கள் எங்களை ஆதரிப்பீர்கள் என அன்புடன் வேண்டுகின்றேன். இது தேர்தலுடன் முடிந்துவிடும் தேர்தல் விஞ்ஞாபனம் அல்ல. எனது அரசியல் தத்துவ வேள்வியில் எழுந்த அத்தியாயமாகும் என்பதனை வடபுலம் வாழ் மக்களைத் தொட்டு உறுதிமொழி அளிக்கின்றேன்.

**ஞா. ஆனந்தகுமார்**

# ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்

4

# பரந்தன் ஊழியர் சம்பளம்

யாழ்ப்பாணம்,நவ.18

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை ஊழியர்களின் சம்பள விடயம் தொடர்பாக ஊழியர்கள் நாளை மறுதினம் திங்கட்கிழமை வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சரைச் சந்திக்கவுள்ளனர்.

ஊழியர்களின் சம்பளக் கொடுப்பனவு தொடர்பான அரசின் முடிவை அமைச்சர் இச்சந்திப்பின் போது வெளியிடுவார் என்று ஊழியர் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (ஐ)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 1944 - 03 - 17

மறைவு 2001 - 10 - 19

### திருமதி நவமணிதேவி அருணாசலம்

**அன்னையே அருந்துணையே அங்கிருந்து காருமம்மா**
**வந்த வினையகற்றி மகாபாக்கியம் காருமம்மா**
**தாயாரும் உன்றன் தாளடியில் சரணம் என்றோம்**
**மாதாவே உந்தன் மலரடியில் நாம் பணிந்தோம்.**

19-10-2001 அன்று இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவி திருமதி நவமணிதேவி அருணாசலம் அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு, எம் துக்கத்தில் பங்குகொண்டு, சகல வகையிலும் உதவிகள் புரிந்தவர்களுக்கும் அன்னார் நோய்வாய்ப்பட்டிருந்த காலம் தொடக்கம் அவரின் நலன் வேண்டி சகல வழிகளிலும் உதவிகள் புரிந்த எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இன்று (18-11-2001) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் அந்தியேட்டி நிகழ்விலும் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்தி வழிபாட்டிலும், மதியபோசனத்திலும் எமது உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*890(478), ஆஸ்பத்திரி வீதி,*
*கண்டுக்குளி,*
*யாழ்ப்பாணம்.* (94580)

*பிரிவால் துயருறும்:*
*கணவன்:-* அருணாசலம்,
*மக்கள்:-* கோபாலராஜன், இராஜ்குமார்.

# மட்டுநகரில் சைக்கிள் குண்டு கண்டுபிடிப்பு

மட்டக்களப்பு,நவ18

மட்டுநகரில் மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு அருகில் நேற்றுமுன்தினம் காலை 6 மணியளவில் மற்றுமொரு குண்டு பொலிஸாரினால் கண்டுபிடிக்கப்பட்டு செயலிழக்கப்பட்டது.

தற்கொலைத் தாக்குதல் இடம்பெற்ற இடத்துக்கு அருகில் மீட்கப்பட்டிருக்கும் இந்தக் குண்டு சைக்கிள் ஒன்றில் பொருத்தப்பட்டிருந்ததாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இப்பகுதியில் இன்னும்கூடக் குண்டுகள் வைக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் பொலிஸார் அங்கு தேடுதல் வேட்டையை தொடர்ந்து நடத்தி வருகின்றனர்.

கடந்த வியாழனன்று தாக்குதல் இடம் பெற்ற பின்னர் - இந்தப் பகுதியில் மூன்று குண்டுகள் கண்டு பிடிக கப்பட்டன என்பது தெரிந்ததே. (க-4)

# பிரதேச சபை தலைவர் தாக்கப்பட்டார்

பிபிலை பிரதேச சபையின் தலைவர் ஐதேக.ஆதரவாளர்களினால் தாக்கப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வியாழன் நள்ளிரவு பிரதேச சபைத் தலைவரான சந்திரசேகர பண்டாவும் (பொ.ஐ.மு) மற்றொருவரும் கடும் காயங்களுடன் பதுளை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பிரதேச சபைத் தலைவரின வாகனமும் தாக்கிச் சேதமாக்கப்பட்டுள்ளது. (க-4)

## காணாமற்போய்விட்டது

கடந்த 15.11.2001 வியாழக்கிழமை திருகோணமலையிலிருந்து காங்கேசன்துறை வந்த பயணிகள் கப்பலில் பிரயாணஞ்செய்த பருத்தித்துறை பீச் றோட்டைச் சேர்ந்த எஸ்.பவானியின் முக்கிய ஆவணங்கள், தங்க நகைகள், பணம், உடுபுடைவை முதலியன அடங்கிய பை ஒன்று காணாமற்போய்விட்டது. மாறி எடுத்துச் சென்றவர்கள் தயவு செய்து கீழ்க் காணும் முகவரியில் உடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

எஸ்.பவானி,
*குபேரன் கொமினிக்கேசன்,*
பிரதான வீதி, பருத்தித்துறை. (94613)

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம் 1931 - 06 - 10

மறைவு 2000 - 11 - 30

### திருமதி செல்லத்துரை தங்கரெத்தினம்

திதி:- 18-11-2001

*பண்பின் திருவுருவே! பாசத்தின் உறைவிடமே! எங்கள்*
*அன்பின் குலவிளக்கே! ஆண்டு ஒன்று சென்றாலும்*
*ஆறாது எம்துயரம்.*

*49,புகையிரத நிலைய வீதி,*
*கொக்குவில்.*

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரங்கள்.

(94602)

**இன்று (18-11.2001) ஞாயிற்றுக்கிழமை ஈசுர விநாயகர் தேவஸ்தானத்தில்**
**ஆன்மீகப் போராட்ட 10ஆம் ஆண்டுப் பூர்த்தி வழிபாடு**
(இறை விண்ணப்பம்)

*பிற்பகல் 4.00 மணியளவில் : விசேஷ அபிஷேகம், பூசைவழிபாடு*
*சுவாமி வீதி உலா நடைபெறும்.*

**தென்னாடுடைய சிவனே போற்றி! நம் நாட்டவர்க்கு ஈசுர விநாயகர் போற்றி!**

(94615)

சோழியூரான் - பிறைசூடிக்குரு

# தலைவர்கள் வழியில் குரல்கொடுக்க...



வீரத் தமிழன்
ஜி.ஜி.பொன்னம்பலம்

3



தந்தை
செல்வநாயகம்

"...நவீன யுத்தக் கருவியாகிய பல்குழல் பீரங்கி, ஒரு பிரதேசத்தையே அடியோடு தகர்த்ததை, தென்மராட்சி மக்கள்தான் இந்த நாட்டில் முதற்றடவையாகக் கண்டு அனுபவித்துள்ளனர். பல ஆண்டுகளாகக் கஷ்டப்பட்டு சேகரித்துக் கட்டிக்காத்த வீடுகள், சொத்துக்கள், உடைமைகள் அனைத்தையும இழந்து - எந்தவிதக் குற்றமும் செய்யாதபோதும் - அகதிகளாக்கப்பட்டு அகதிமுகாம்களில் உள்ள அவர்களைப் பராமரிக்கவேண்டிய பொறுப்பு அரசுக்கு உண்டு என்பதை யாரும் மறுக்கமுடியாது.

"தென்மராட்சி அனர்த்தத்தின் பின்னர், யாழ்ப்பாணத்திலிருந்து கண்டி வீதி வழியாக சாவகச்சேரி சென்றபோது, ஏறத்தாழ 13 மைல்கள் பயணத்தில் ஒரு கட்டடமாவது முழுமையாகப் பார்க்கக் கூடிய நிலையில் இல்லை.



முதன்மை வேட்பாளர்
வீ.ஆனந்தசங்கரி

"ஜேர்மனியில் இருந்துவந்த அரசசார் பற்ற அமைப்பின் உதவியுடன் கட்டப்பட்டிருந்த நெற்களஞ்சியக் கட்டடம் முற்றாக அழிக்கப்பட்டிருந்தது. வெளிநாடுகள் கட்டித்தர நீங்கள் அழித்துக்கொண்டிருந்தால் எந்த நாடு எமக்கு உதவும்?

"வெளிநாட்டு அமைப்பினர் இந்த அழிவுகளைக் கண்டால், ஒரு சதம் கூட உதவியாகத் தந்துதவமாட்டார்கள்..."

-தென்மராட்சியின் அழிவு நிலைபற்றி நாடாளுமன்றத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மூத்த துணைத் தலைவர் திரு.வீ.ஆனந்தசங்கரி அவர்கள் மனம் நொந்து பேசிய கருத்துக்கள் இவை.

இவ்வாறு அல்லற்பட்டு ஆற்றாது அழும் மக்களுக்கு ஓடிச் சென்று குரல்கொடுக்கும் தலைவன் இம்முறை தேர்தலில் முதன்மை வேட்பாளராகத் தமிழர் கூட்டணியின் கூட்டமைப்புக்குத் தலைமைதாங்குகின்றார். உங்கள் வாக்குகளை உதயசூரியன் சின்னத்துக்கு அளிப்பதுடன் விருப்பு வாக்கொன்றை அவரின் இலக்கம் 3 இற்கும் இட்டு வெற்றியீட்டச் செய்யுங்கள்.

## தமிழர் விடுதலைக் கூட்டணி

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

இராமலிங்கம் வீதி, சாவகச்சேரி.

தென்மராட்சி மக்கள் சார்பாக **சோ.சிறிதரன்**

# கல்வியியற் கல்லூரி நேர்முகப் பரீட்சை யாழ்.மாவட்டத்தில் 523 பேருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,நவ.18

யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு ஆகிய தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு புதிய ஆசிரிய மாணவர்களை அனுமதிப்பது தொடர்பான நேர்முகப் பரீட்சைக்கு யாழ்.மாவட்டத்தில் இருந்து 523 பேர் அழைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் 26ஆம் திகதி தொடக்கம் 30ஆம் திகதி வரை கோப்பாயில் இயங்கும் யாழ்.தேசிய கல்வியியற கல்லூரியில் நடைபெறவுள்ளன.

பரீட்சார்த்திகளுக்கான நேர்முகப் பரீட்சைக் கடிதங்கள் அனைத்தும் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் -

அழைப்புக் கடிதங்கள் கிடைக்கப்பெறாதவர்களும் குறிப்பிட்ட தினங்களில் சமுகமளிக்க முடியும் என்றும் -

நேர்முகப்பரீட்சைக் குழுத் தலைவரும், வவுனியா தேசியக் கல்வியியற் கல்லூரி பீடாதிபதியுமான செ. அழகரெத்தினம் அறிவித்துள்ளார்.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளோரின் பெயர் விவரம் பாட ரீதியாக வருமாறு:-

### சித்திரம்

பி.ரமணாகரன் (பண்டத்தரிப்பு), எல்.ரமணன் (சண்டிலிப்பாய்), வி.கணேந்திரன் (இணுவில்), ஆர்.செந்தில்குமரன் (நல்லூர் வடக்கு), ஐ.சசிகுமார் (மானிப்பாய்), வி.அரவிந்தன் (கோப்பாய்), ரி.தவச்செல்வன் (இமையாணன் கிழக்கு).

ஆர்.மகிந்தன் (மூளாய்), ஜி.ஜெயதீபா (நவாலி), ரி.மாலினி (அல்வாய் கிழக்கு), டி.சுதர்சன் (உரும்பிராய் வடக்கு), ரி.ரதிவதனி (மயிலங்காடு), ஜி.தேவரஜனி (அளவெட்டி), ஆர்.சோபனா (உரும்பிராய்).

ஆர்.சிசாந்திகா (நீர்வேலி), ஆர்.நிகிலா (முகவரி தெளிவில்லை), ரி.மேரி அந்தோனி (யாழ்ப்பாணம்), வி.கமலினி (கலட்டி).

### மனைப்பொருளியல்

எஸ்.விநோதினி (மிருசுவில்), எஸ்.சிவதர்சினி (சுன்னாகம்), எஸ்.சிவசாந்தி (சுன்னாகம்), ரி.தயாநந்தினி (சாவகச்சேரி), கே.சதீஸா (கொடிகாமம்), எம்.சரோசா (வரணி), வி.கமலினி (தெல்லிப்பழை).

எஸ்.நாகநந்தினி (சாவகச்சேரி), கே.ரஜிதாகாரி (நீர்வேலி), கே.சுகந்தினி (கொடிகாமம்), ஆர்.தர்சினி (யாழ்ப்பாணம்), வி.சந்திரகுமாரி (கொடிகாமம்), பி.வதனி (பருத்தித்துறை).

ஏ.தனுஜா (அச்சுவேலி), வை.ஜான்சி சுதர்மதி (சுன்னாகம்), எஸ்.சிவவதனி (சாவகச்சேரி), வி.சுதர்சினி (கொடிகாமம்), ஏ.மேரி ஜெனிஸ்ரா (பாசையூர்), எஸ்.சுகந்தினி (திருநெல்வேலி கிழக்கு).

### இந்துசமயம்

என்.பாரதி (காரைநகர்), பி.சந்திரமோகன் (மிருசுவில்), எஸ்.கஜமுகன் (புன்னாலைக்கட்டுவன்), எஸ்.சுபிதரன் (அளவெட்டி), எம்.ரி.சந்திரகுமார் (ஆனைக்கோட்டை), ஜே.பிரதீபன் (கொக்குவில்), வி.சற்குணராஜா (காரைநகர்).

எம்.ஈஸ்வரதாஸ் (சுன்னாகம்), எஸ்.என்.ஜெயகாந்தன் (சுழிபுரம்), ஜே.ஜெயஜீவன் (பேத்தாவளை), ரி.நிமலன் (பருத்தித்துறை), ஜே.சிறிகாந்த் (மானிப்பாய் வீதி), எம்.பிரதீபன் (கொடிகாமம்), எல்.நிசாந்தன் (இளவாலை).

ஜி.பிரபா (சுன்னாகம்), எஸ்.வனஜா (பண்டத்தரிப்பு), பி.உசா (அளவெட்டி), கே.மைதிலி (வரணி), என்.கவிதா (நல்லூர்), ஜி.தமிழனி (சுன்னாகம்), ஜி.சிவகாமி (வண்ணார்பண்ணை).

வி.ஞானரூபி (வண்ணார்பண்ணை), ஜி.கலைவாணி (வட்டுக்கோட்டை), சிற்குமாரி (உரும்பிராய் கிழக்கு), எஸ்.கஸ்தூரி (பருத்தித்துறை), கே.கமலலோஜினி (சுன்னாகம்), பி.கேதீஸ்வரி (வட்டுக்கோட்டை), ரி.ஜெயந்தினி (மீசாலை).

எஸ்.சகுந்தலா (வட்டுக்கோட்டை), கே.காஞ்சனா (தெல்லிப்பழை), கே.கலாஜினி (மானிப்பாய்), எம்.சசிகலா (சாவகச்சேரி), வி.தர்மினி (சாவகச்சேரி), எஸ்.வினோதினி (மீசாலை), எஸ்.சங்கீதா (நல்லூர் வடக்கு).

சிகந்தினி (சண்டிலிப்பாய்), ரி.தர்சிகா (கொடிகாமம்), என்.தமிழ்ச்செல்வி (கோப்பாய்), எம் மதனராஜி (சுன்னாகம்), வி.வான்மதி (கரவெட்டி), என்.யசோதினி (நல்லூர்), ஆர்.சந்திராவதி (இணுவில்).

ரி.விஜிகலா (மானிப்பாய்), எஸ்.தயாளினி (சுன்னாகம்), ஜி.உமா (கோண்டாவில்), எஸ்.யாளினி (அச்சுவேலி), எம்.வசந்தநாயகி (மிருசுவில்), வை.தர்சினி (மீசாலை), கே.சுதந்தா (கொடிகாமம்).

கே.ராதிகா (தெல்லிப்பழை), ரி.விஜிதா (அச்சுவேலி), கே.கலைச்செல்வி (நல்லூர்), எம்.ஜெயநந்தினி (புத்தூர்), என்.சிவதர்சினி (யாழ்ப்பாணம்), ரி.சுவர்ணா (யாழ்ப்பாணம்), ரி.மாலதி (சுழிபுரம்), எஸ்.தேவகி (அல்வாய்).

வி.ஜீவரேகா (சங்குவேலி தெற்கு), பி.துசி (தையிட்டி), பி.கல்யாணி (பருத்தித்துறை), எஸ் தேஷினி (பொலிகண்டி).

### கிறிஸ்தவம்

ஆர்.கெனித் கிளாடிஸ் (பருத்தித்துறை), பி.நிதர்சினி (சுன்னாகம்), ஏ.எஸ்.லூந்தநாயகி (பருத்தித்துறை), டானியல் மைபௌனி (சுன்னாகம்), ஜே.ரெஞ்சலா (செம்பியன்பற்று), எல்.ஈ.சுதர்சினி (நாவாந்துறை), ஏ.கிரிசாந்தினி (செட்டிக்குளி), வி.ஈ.பெனிற்றா (இளவாலை).

எம்.மரியலாணி (பருத்தித்துறை), எல்.ஈ.மேரி அஞ்சலா (பண்டத்தரிப்பு), ஏ.ஏ.அனற்விஜிதா (இளவாலை), ஏ.ஜே.நிரோசா சகிலா (இராசாவின் தோட்டம்), ஜே.எரின்சில்வியா (யாழ்ப்பாணம்), ஜே.கனிஸ்டா யூடிற்றா (பண்டத்தரிப்பு), எஸ்.எம்.கெலன் மேரி (யாழ்ப்பாணம்).

டி.டினோஜுவிற்றா (சுண்டுக்குளி), ஜே.பி.மரியசெல்வம் (மானிப்பாய்), பி.ஆர்.அகிலநாயகம் (நாவாந்துறை), ஜே.ஜே.மயூரன் (சண்டிலிப்பாய்), ரி.தங்கேஸ்வரன் (செம்பியன்பற்று), சி.பிலிப் (ஆனைக்கோட்டை), எம்.மரிந்த மேனா (பண்டத்தரிப்பு).

### கணிதம்

கே.சந்திரலிங்கம் (கைதடி), ஜிரஞ்சித்குமார் (கரவெட்டி), கே.கோடீஸ்வரன் (கொடிகாமம்), எஸ்.ராஜதீபன் (உரும்பிராய்), எஸ்.அகிலன் (கொடிகாமம்), யு.துஸ்யந்தன் (சங்கானை), பி.பிரசன்னா (யாழ்ப்பாணம்),

பி.சிவகரன் (சித்தங்கேணி), ஆர்.நீரஜா (தெல்லிப்பழை), எஸ்.சிவகாந்தன் (சாவகச்சேரி), என்.பிரசாந்த் (வட்டுக்கோட்டை), எஸ்.சஞ்சீவ் (அல்வாய்), என்.சுதாகர் (பருத்தித்துறை), எஸ்.வாகீஸ்வரன் (திருநெல்வேலி), கே.உமாகரன் (கொக்குவில்).

எம்.ஜதீசன் (நீர்வேலி), ஆர்.தங்கராஜா (ஏழாலை), எஸ்.நவநீதன் (புலோலி), ரி.கௌரிகாந்தன் (நல்லூர்), பி.உலோசனன் (மானிப்பாய்), எஸ்.ரஜீவன் (ஏழாலை), ஆர்.தினேஸ் (கந்தர்மடம்).

எஸ்.ஜெயதீபன் (கரவெட்டி), ஏ.ரமணிதரன் (பருத்தித்துறை), கே.சசிதரன் (மீசாலை), கே.பாலகுமார் (காரைநகர்), எஸ்.சங்கரன் (அல்வாய்), எஸ்.கிருஸ்ணதாசன் (மானிப்பாய்), கே.செந்தில்குமரன் (கரவெட்டி), கே.நிமலன் (வல்வெட்டித்துறை).

எம்.மங்களரூபன் (சுன்னாகம்), எஸ்.சிவசுதன் (மீசாலை), எஸ்.இளங்கீரன் (கரவெட்டி), வி.பி.மதனராஜ் (நல்லூர்), என்.பிரேம்குமார் (கொக்குவில்), பி.சுதாகினி (சித்தங்கேணி), ஆர்.செந்தில்குமரன் (நல்லூர்).

பி.விமல்ராஜ் (கோண்டாவில்), எஸ்.நிமலன் (கோண்டாவில்), எஸ்.தர்சினி (தெல்லிப்பழை), பி.அகல்யா (சாவகச்சேரி), எஸ்.கம்சாயினி (கொடிகாமம்), கே.ரேனுகா (வசாவிளான்), எஸ்.சுஜிதா (வட்டுக்கோட்டை).

எஸ்.செல்வரஞ்சனி (தில்லையடி), கே.சிவாஜினி (உடுப்பிட்டி), ரி.ஜெயதர்சினி (சாவகச்சேரி), ரி.தர்சினி (மல்லாகம்), கே.பானாலினி (கோண்டாவில்), எஸ்.அம்பலிகை (அளவெட்டி), எஸ்.சன்சுலா (சித்தன்கேணி).

ஆர்.அபிராமி (கொக்குவில்), எஸ்.யசோதினி (மல்லாகம்), கே.சத்யரஞ்சினி (அரியாலை), எம்.தஷ்மினி (மானிப்பாய்).

### நூலக விஞ்ஞானம்

எச்.என்.மேரி டயானா (பண்டத்தரிபபு), ரி.உஸாநந்தினி (மானிப்பாய்), கே.தவதர்சினி (அல்வாய்), ஆர்.இரட்னராஜா (ஆனைப்பந்தி), எல்.நிமலகாந்தன் (குருநகர்), எஸ்.அல்பேட் மேரி (சுன்னாகம்), எஸ்.வெண்ணிலா (பொலிகண்டி), கே.பவானி (புலோலி).

எஸ்.சிறிநந்தினி (மட்டுவில்), என்.சதாசிவம் (சித்தங்கேணி), பி.துளசி (உடுப்பிட்டி), கே.வதனி (புலோலி), பி.ஜீவரேகா (சங்குவேலி), என்.தனுஜா (நெல்லியடி), ஜி.தமிழினி (சுன்னாகம்), ரி.சுபத்திரா (அராலி).

எஸ்.அம்பிகா (உடுவில்), கே.யோகசக்தி (குப்பிளான்), ரி.சஞ்சிதா (பருத்தித்துறை), எம்.எஸ்.ரைட்டிங்கேள் (சுண்டிக்குளி), எல்.மீரா (மானிப்பாய்), என்.பகீரதி (சுன்னாகம்), எஸ்.சசீலா (உடுவில்).

ரி.சுதர்சினி (கைதடி), ஆர்.துவாரகா (அரியாலை), ஆர்.நிசாந்திகா (நீர்வேலி), எஸ்.அனுசியா (கோப்பாய்), பி.சாந்தனா (புலோலி). என்.விஜிதா (வட்டுக்கோட்டை), ரி.ஜெயந்தினி (மீசாலை), என்.தமிழ்ச்செல்வி (கோப்பாய்), வை.தர்சினி (மீசாலை)

ஜி.கலைவாணி (வட்டுக்கோட்டை), என்.சிவதர்சினி (யாழ்ப்பாணம்), ரி.சுவர்ணா (அரசடி), ரி.தயாளினி (சாவகச்சேரி), ரி.சிபாமா (மிருசுவில்), ஆர்.காந்தரூபி (நாவற்குழி), எஸ்.சுஜாத்தா (நயினாதீவு), எஸ்.சுவர்ணா (சாவகச்சேரி), ஜே.சிறிகாந்த் (யாழ்ப்பாணம்), ஆர்.சுரஞ்சன் (கரவெட்டி), வி.பிரகலாதன் (இளவாலை), எஸ்.கிருபாகரன் (கரவெட்டி),

ஆர்.றொனால்ட் அன்ரெனி (ஊர்காவற்றுறை), எஸ்.ஈஸ்வரதாஸ் (ஊரெழு), என்.யசீகரன் (மட்டுவில்), ஆர்.பார்த்தீபன் (ஆனைக்கோட்டை), பி.வாமதேவன் (மல்லாகம்), பி.கஜேந்திரன் (உரும்பிராய்),

### உடற்கல்வி

எஸ்.சுகீதன் (சுன்னாகம்), எஸ்.சுரேன் (சுழிபுரம்), ரி.தவச்செல்வி (இமையாணன் கிழக்கு), என்.செந்தூரன் (தெல்லிப்பழை), கே.கமல்ஜித (திருநெல்வேலி), எம்.கிசோகுமார் (கோண்டாவில் வடக்கு), ஐ.சசிகுமார் (சுதுமலை தெற்கு), கே.ரி.ஜெயகாந்தன் (சுதுமலை தெற்கு),

எஸ்.சிகுமார் (மீசாலை தெற்கு), எஸ்.சிவரஞ்சிதமலர் (வரணி எத்தாலை), பி.சிவாஜினி (பண்ணாகம் தெற்கு), எஸ்.விஜயகலா (மயிலங்கூடல்), எஸ்.விஜிதா (சுன்னாகம்), எஸ்.ரேனுகாதேவி (சிறுப்பிட்டி வடக்கு), கே.திலகேஸ்வரி (கோப்பாய்), எஸ்.அப்பையா (ஏழாலை மத்தி), எஸ்.மதனகௌரி (முகவரி தெளிவில்லை), ரி.பிரேமளா (மீசாலை கிழக்கு), ரி.ஜெயந்தினி (நீர்வேலி),

### சமூகக்கல்வி

என். நந்தீஸ்வரன் (சுழிபுரம்), கே.சஜந்தன் (அரியாலை), கே.சிவகரன் (கொடிகாமம்), வி.பிரபாகரன் (சாவகச்சேரி), வி.கௌசிகன் (மானிப்பாய்), வி.வலனரின் டினேஸ் (சுன்னாகம்), எஸ்.சாந்தரூபன் (நீர்வேலி), பி.தனுஜா (வல்வெட்டித்துறை), எஸ்.ஜெயகாந்தன் (சுழிபுரம்), எம்.ஈஸ்வரதாஸ் (சுன்னாகம்), ரி.நிமலன் (பருத்தித்துறை), என்.பாரதி (காரைநகர்), சுற்றதன் (அளவெட்டி), எஸ்.காயத்ரி (பருத்தித்துறை), கே.சுகன்யா (உடுப்பிட்டி).

கே.கஜவதனி (யாழ்ப்பாணம்), ரி.அனோஜா (சாவகச்சேரி), என்.தனுஜா (கரவெட்டி), கே.வித்தியா (மீசாலை), ரி.சுபத்ரா (வட்டுக்கோட்டை), எஸ்.அம்பிகா (சுன்னாகம்), ரி.உஷானந்தி (மானிப்பாய்).

ஈ.என்.வில்சன் (சுண்டுக்குளி), எச்.எம்.மேரி டயானா (பண்டத்தரிப்பு), ரி.தர்சிகா (கொடிகாமம்), கே.மைதிலி (வரணி), கே.சித்ரவாதி (இணுவில்), எம்.வசந்தநாயகி (மிருசுவில்), கே.கியோமர் (சேருவில் வீதி), பி.ஆர்.அகிலநாயகம் (நாவாந்துறை), கே.யோகசக்தி (ஏழாலை), எஸ்.சங்கீதா (நல்லூர் வடக்கு).

### தொழில்நுட்பம்

கே.சுமதி (சாவகச்சேரி), ஜி.தமிழினி (சுன்னாகம்), கே.யோகசக்தி (ஏழாலை), பி.நிதர்சினி (உடுவில்), எஸ்.ரோமலா (தெல்லிப்பழை கிழக்கு), ஆர்.செல்வகுமார் (ஏழாலை).

ரி.சுதர்சன் (கரணவாய் தெற்கு), ஆர்.ரமேஸ்குமாரன் (தம்பாலை), ரி.உமாசங்கர் (கோப்பாய்), எஸ்.பி.வாமதேவன் (மல்லாகம்), எஸ்.பி.சஞ்ஜீர் (நல்லூர்), எஸ்.பி.சியாமளா (புலோலி). ஏ.அனுஜா (யாழ்ப்பாணம்).

### ஆரம்பநெறி

ரி.ஜயந்தினி (மீசாலை), பி.கேதீஸ்வரி (வட்டுக்கோட்டை), சகுந்தலா (வட்டுக்கோட்டை), கே.காஞ்சனா (தெல்லிப்பழை), கே.கலாஜினி (மானிப்பாய்), எம்.சசிகலா (சாவகச்சேரி), பி.தர்மினி (சாவகச்சேரி), பி.வாசுகி (சுண்டிக்குளி).

எஸ்.சஞ்சிதா (நல்லூர்), பி.சிகந்தினி (சண்டிலிப்பாய்), ரி.தர்சிகா (கொடிகாமம்), பி.ஜீவரேகா (மானிப்பாய்), எஸ்.சத்தியபிரியா (உரும்பிராய்), என்.தமிழ்செல்வி (கோப்பாய்), எம்.மதனராஜி (சுன்னாகம்).

பி.வான்மதி (கரவெட்டி), வி.ஈ.ஜெனிற்றா (இளவாலை), என்.யசோதினி (நல்லூர்), ஆர்.சித்ரவதி (இணுவில்), ரி.விஜகலா (மானிப்பாய்), எஸ்.தயாளினி (சுன்னாகம்), ஜே.உமா (கோண்டாவில்), எஸ்.யாளினி (அச்சுவேலி).

ஆர்.சந்திரலேகா (தோப்பூர், அச்சுவேலி), எம்.வசந்தநாயகி (மிருசுவில்), ஈ.எஸ்.வாரதிகா (சாவகச்சேரி), வை.தசானி (மீசாலை), கே.ராதிகா (தெல்லிப்பழை), ரி.விஜிதா (அச்சுவேலி), எம்.மரியராணி (பருத்தித்துறை), கே.கலைச்செல்வி (நல்லூர்).

பி.துஸ்யா (காங்கேசன்துறை), எம்.விஜயநந்தினி (புத்தூர்), பி.கல்யாணி (பருத்தித்துறை), எஸ்சசிகலா (கைதடி), ஏ.ஆரணி (நாவலர் வீதி, யாழ்ப்பாணம்), என்.சிவதர்சினி (காங்கேசன் துறை), ரி.சுவர்னா (யாழ்ப்பாணம்), ரி.மாலதி (சுழிபுரம்).

என்.கமலலோஜனி (சுன்னாகம்), எஸ்.தர்சினி (வல்வெட்டித்துறை), எஸ்.தேவகி (பருத்தித்துறை), ரி.சங்கீதா (பருத்தித்துறை), ஜி.சியாமளா (கோப்பாய்), சி.அனுஸா (கொடிகாமம்), வி.புவிவதனி (மீசாலை), ஜே.ரி.கெலன் அமுதா (சுன்னாகம்), என்.சத்தியரஞ்சினி (பருத்தித்துறை), வி.ரேனுகா (உடுப்பிட்டி).

பி.கோகிலராணி (புத்தூர் மேற்கு), எல்.மேரி அஞ்சலா (பண்டத்தரிப்பு), கே.ஜெயமலர் (சுன்னாகம்), கே.சுமித்ரா (புத்தூர்), ஜி.ரேவதி (சாவகச்சேரி), கே.சிவாஜினி (நல்லூர்), எஸ்.ராஜசிலோசனா (கைதடி), பி.நேசமலர் (காரைநகர்), கே.வதனா (கொக்குவில்).

எம்.நளினரஞ்சனி (சுழிபுரம்), ரி.கலையரசி (சுழிபுரம்), ஜே.சுகிர்தா (நீர்வேலி), ரி.ராகிதா (வல்வெட்டித்துறை), எஸ்.வனஜா (பண்டத்தரிப்பு), கே.சுகன்யா (உடுப்பிட்டி வடக்கு), கே.தவதர்சினி (அல்வாய்), கே.வித்யா (மீசாலை), பி.துஸ்யா (காங்கேசன் துறை).

ஜி.சிவகாமி (வண்ணார்பண்ணை), வி.கன்னரூபி (வண்ணார்பண்ணை), ஜி.கலைவாணி (வட்டுக்கோட்டை), ரி.சிறிகுமாரி (உரும்பிராய் கிழக்கு), எஸ்வெண்ணிலா (வல்வெட்டித்துறை), எஸ்.நிசாந்தினி (காங்கேசன்துறை), என்.கே.கமலலோஜினி (சுன்னாகம்), ஆர்.சிவதர்சினி (சுன்னாகம்), ஏ.சுமதி (காரைநகர்).

ஏ.பிரிமாலினி (பருத்தித்துறை), எஸ்.சர்மிலா (உடுப்பிட்டி), ரி.சங்கீதா (கோப்பாய் வடக்கு), பி.வாசுகி (சுண்டிக்குளி), என்.கவிதா (நல்லூர்), வி.லாவ்வன்சி (குருநகர்), கே.சுதன்தா (கொடிகாமம்), ரி.சுபத்ரா (வட்டுக்கோட்டை), எஸ்.கஸ்தூரி (பருத்தித்துறை).கே.தாரினி (தெல்லிப்பழை), எல். மீரா (மானிப்பாய்), கே.கம்சன் (ஆனைக்கோட்டை), கே.ஜெயஜீபன் (அளவெட்டி வடக்கு, பித்தாவளை), ரி.நிமலன் (பருத்தித்துறை), என்.பிரதீபன் (கொடிகாமம்), என்.ஜசிகரன் (சாவகச்சேரி), பி.விமல்ராஜ் (கோண்டாவில்),

எஸ்.யோகச்செல்வம் (உடுப்பிட்டி), எஸ்.திருச்செல்வம் (கொடிகாமம்), எல்ஏ.இமில்ராசா (அச்சுவேலி), கே.சுந்தரமோகன் (வல்வெட்டித்துறை), என்.கபிலன் (அளவெட்டி), ரி.டி.யு.பிராவின் (ராசாவின்தோட்டம்), எஸ்.ரதுகுலன் (சுன்னாகம்), பி.மதிவாணன (புன்னாலைக்கட்டுவன்), கே.ஜே.பி.மரியசெல்வம் (நவாலி தெற்கு), எஸ்.நிசாந்தன் (இளவாலை), ஆர்.சுதர்சன் (கரவெட்டி), கே.ராஜீஸ்வரன் (கொடிகாமம்), ஆர்.பிரதீபன் (ஆனைக்கோட்டை), என்.பாரதி (காரைநகர்), பி.சந்திரமோகன் (மிருசுவில்), பி.சற்குணராஜா (காரைநகர்), எஸ்.எம்.ஜெயகாந்தன் (சுழிபுரம்), கே.கியோமார் (முகவரி தெளிவில்லை), பி.ஆர்.அகிலநாயகம் (நாவாந்துறை), சி.பிலிப் (ஆனைக்கோட்டை), ரி.முதர்சன் (சுழிபுரம்),

### விஞ்ஞானம்

பி.ஏ.வூல்சியாட் (பண்டத்தரிப்பு), ஏ.கஜதீபன் (நல்லூர்), ரி.ரஜதன் (எழுதுமட்டுவாழ்), எம்.அந்தோன் நிரோசன் (கொழும்புத்துறை), பிற்விஜேந்திரன் (சுன்னாகம்), எல்.அபிலன் (சாவகச்சேரி), எஸ்.சனாதனன் (அளவெட்டி), பி.ஏ.சிவசுதன் (கந்தர்மடம்), பி.ஏ.தியாகரூபன் (யாழ்ப்பாணம்).

என்.உதயசேகர் (யாழ்ப்பாணம்), ஜே.பகீரதன் (உரும்பிராய்), பி.தனஞ்சயன் (யாழ்ப்பாணம்), பி.செந்தில்குமார் (முகவரி தெளிவில்லை), எஸ்.கே.கிருஸ்ணதாஸ் (அச்சுவேலி), பி.விமல்ராஜ் (கொக்குவில் கிழக்கு), எஸ்.நிமலன் (கோண்டாவில), கே.சிவகரன் (கொக்குவில் மேற்கு),

எம்.பிரேம்குமார் (கொக்குவில் மேற்கு), ரி.நர்மினி (பருத்தித்துறை), என்.மதிவதனி (புத்தூர் கிழக்கு), ஆர்.யாளினி (யாழ்ப்பாணம்), எம்.ராதிகா (கொக்குவில் கிழக்கு), எஸ்.சிவஜா (கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்), கே.சிவநங்கை (எழுதுமட்டுவாழ்), எம். தஸ்மினி (மானிப்பாய்), எஸ்.கார்த்திகா (கொக்குவில் கிழக்கு), ஏ.தவச்செல்வி (கொக்குவில்), வி.தியாகசொரூபி (காரைநகர்),

கே.செல்வி (யாழ்ப்பாணம்), எஸ்.சுதர்சனா (சாவகச்சேரி), எஸ்.தர்மிலா (கரவெட்டி), எல்.துல்சி (பருத்தித்துறை), எஸ்.குயிலினி (கரவெட்டி), வி.மதிவதனா (நாச்சியார் கோயிலடி), ஆர்.வாசுகி (சுன்னாகம்), எஸ்.காஞ்சனா (சுளிபுரம்), பி.ஏ.கவிதா (யாழ்ப்பாணம்), எஸ்சிவரஞ்சினி (சுன்னாகம்), என்.மகாநந்தினி (வட்டுக்கோட்டை), ரி.மைதிலி (புலோலி தெற்கு), பி.இராஜலோசனா (நீர்வேலி), எஸ்.வளர்மதி (நீர்வேலி), ஆர்.ராதிகா (நீர்வேலி), எஸ்.யதுனா (நல்லூர்), பி.பததலோஜினி (மிருசுவில்), பி.இதயமலர் (கொடிகாமம்), வி.தஸ்வினி (பருத்தித்துறை), வை.மைதிலி (இணுவில் கிழக்கு), வி.லாவன்யா (நல்லூர்),

வி.சுகந்தி (பருத்தித்துறை), பி.சுதர்சனா (அச்சுவேலி), கே.எஸ்.தர்சிகா (கோப்பாய்), எஸ்.தயாளினி (உடுப்பிட்டி), ஏ.அருட்செல்வி (நாச்சியார் கோயிலடி), ரி.கௌரி (கொக்குவில்), எஸ்.வினோதா (வல்வெட்டித்துறை), ரி.தற்பரன் (அச்சுவேலி), எஸ்.எஸ்.சுதர்சினி (திருநெல்வேலி), கே.ராசிதா (காரைநகர்)

### தமிழ்ப்பாடநெறி

ஜே.பிரதாபன் (கொக்குவில்), பி.சற்குணராசா (காரைநகர்), பீ.சந்திரமோகன் (மிருசுவில்), கே.கம்சன் (ஆனைக்கோட்டை), எஸ்.கஜமுகன் (புன்னாலைக்கட்டுவன்), ரி.நிமலன் (பருத்தித்துறை), எஸ்.கஸ்தூரி (பருததித்துறை), ஜி.சிவகாமி (வண்ணார் பண்ணை), வி.ஞானரூபி (வண்ணார் பண்ணை), கே.கியோமலர் (சேருவில வீதி).

பி.கல்யாணி (பருத்தித்துறை), கே.கலைச்செல்வி (நல்லூர்), ஈ.எம்.வில்சன் (சுண்டிக்குளி), கே.மைதிலி (வரணி), எஸ்.சத்தியப்பிரியா (உரும்பிராய்), என்கவிதா (நல்லூர்), கே.காஞ்சனா (தெல்லிப்பழை), கே.கலாயினி (மானிப்பாய்), எம்சசிகலா (சாவகச்சேரி).

பி.தர்மினி (சாவகச்சேரி), பி.சிகந்தினி (சண்டிலிப்பாய்), எம்.மதனராஜி (சுன்னாகம்), எஸ்.வான்மதி (கரவெட்டி), ஜி.உமா (கோண்டாவில்), எஸ்.யாழினி (அச்சுவேலி), ரி.விஜிதா (அச்சுவேலி).

### சங்கீதம்

ஏ.பிரங்கன் செலன் (சுன்னாகம்), எஸ்.கனகரஞ்சன் (சமரபாகு), ஐ.அனரன் விமலதாஸ் (முல்லையடி வீதி), கே.சிவரூபினி (மருதங்கேணி தெற்கு தாளையடி), ரி.ரஜனி (மீசாலை வடக்கு, சாமவில்), எஸ்.அருள்மொழி (கரவெட்டி கிழக்கு), என்.கமலலோயினி (தாவளை இயற்றாலை, கொடிகாமம்), ஏ.தனுகா (இடைக்காடு), ஜே.சுதாகினி (நெல்லியடி), ஆர்.ரஜனி (நவிண்டில்), கே.தர்மினி (புன்னாலைக்கட்டுவன்), எஸ்.சிறிப்பிரிஜா (யாழ்ப்பாணம்), எஸ்.சர்மிளாதேவி (இயற்றாலை, வரணி), ரி.தேவரூபி (வல்வெட்டித்துறை), சி.தனுஷியா (செம்பியன்பற்று), என்.அம்பிகா (புலோலி வடக்கு), ரி.டீ.ஜெயந்தினி (மிருசுவில்), எஸ்.மாலதி (புலோலி கிழக்கு), கே.ராதிகா (வீமன்காமம்), கே.பிரேமமாலினி (புலோலி மேற்கு).

### நடனம்

கே.சுதந்தா (மத்துவில் கிழக்கு), வி.அனுசா (தாவடி வடக்கு), வி.விசாமினி (வல்வெட்டித்துறை), ஏ.ரஜனி (கம்பர்மலை), ஆர்.தபோதினி (நீர்வேலி தெற்கு), எஸ்.சுகனியா (பருத்தித்துறை), எஸ்.கிரிலோசினி (கரணவாய் கிழக்கு), பி.பிரேமா (முல்லையடி வீதி).

### விவசாயம்

கே.தயாகோபி (மானிப்பாய்), பி.வாசுகி (சாவகச்சேரி), பி.தேன்மொழி (கொட்டடி), எஸ்.நந்தகுமார் (மிருசுவில்), பி.மகிந்தகுமார் (கொட்டடி), ரி.றஜீதன் (எழுதுமட்டுவாழ்), எஸ்.சிவரஜனி (ஏழாலை). (ஐ-7)

## பளை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம

### முக்கிய அறிவித்தல்

வடக்கு - கிழக்கு புனரமைப்பு, புனர்வாழ்வு மாண்புமிகு அமைச்சர் **K.N.டக்ளஸ் தேவானந்தா** அவர்களால் எமது சங்க அங்கத்தவர்களுக்கு வழங்கப்படவுள்ள கொடுப்பனவு தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் (2001-11-26) திங்கடகிழமை முற்பகல் 9.00 மணிக்கு யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலுள்ள (ஸ்ரீதர் திரை அரங்கில்) அமைச்சரின் அலுவலகத்தில் நடைபெறவுள்ளதால் அதற்கு 2000ஆம் ஆண்டு தொழில் புரிந்த சகல அங்கத்தவர்களும் தவறாது சமுகந்தரும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

செயலாளர் தலைவர்

ப.தெ.வ.அ.கூ.சங்கம்.

(94612)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 30 - 10 - 1923

விண்ணில் 11 - 12 - 1999

### அமரர் நாகேசு தம்பிமுத்து (நண்பர்)

(ஸ்தாபகர், டவர் கோப்பி & கூல்பார்)

திதி: கார்த்திகை சதுர்த்தி

எங்கள் அன்பின் ஐயாவே!
இரண்டாண்டுகள் சென்றாலும்
எங்கள் நெஞ்சம் உங்களை - மறந்திடுமோ?
நித்தம் உங்கள் நினைவுடன் - வாழுகிறோம்
*உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்*

*15, யாழ். பாடி வீதி, யாழ்ப்பாணம்.* (94624)

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.

## கண்ணீர் அஞ்சலி

அமரர்

### வேதநாயகம் பீற்றர் தேவதாஸ்

ஐயா தேவா! 'ஐயோ' என அலற வைத்தீர்!
அரும்பாடுபட்டீர் ஐயா!
ஆறாகப் பாயுதையா எங்கள் கண்ணீர்!
நிலை தடுமாறுகின்றோம்!
நீண்ட நாள் கண்ட பாசம்!
தேவன் தான் அழைத்தாரோ?
தேம்பித் தேம்பி நாம் அழுகின்றோம்!
உத்தமரே உம்மிரக்கம்
உலகத்தில் கிடைக்காதே!
கச்சிதமாய் எம் கணக்கைக் காட்டி வைக்குமுன்னே
காலன்தான் முடித்தாரோ கடிதே உம் கணக்கை?
பண்டுதொட்டு ஆண்டுதோறும்
நத்தார் தினம் நாம் எடுக்க
சித்தமிகு திறமையொடு
சீர்புகழும் தூதுவராய்
நேரமது தவறாமல் தூரமது போயிடினும்
கொணர்ந்திடுவீர் வணபிதாவை
நித்தம் புகழ்ந்திடுவோம்
நீவிர் செய்த பேருதவிதனை
தப்பிதம் நாம் என் செய்தோம்?
ஏன் ஐயா எம்மைப் பிரிந்தீர்?
ஆண்டவரே எம் கவலையை ஆற்றுமையா
எம் தேவனுக்கு ஆத்ம சாந்தி அளியுமையா!

தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் அங்கத்தவர்கள்
செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனம் (யாழ்.),
விளையாட்டுக்கழகம், கிறிஸ்தவ கழகம்,
கைத்தொழிற்பேட்டை நிறுவனம்.

(94611)

## மரண அறிவித்தல்

### விஸ்வலிங்கம் கனகரத்தினம்

(ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர்)

வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் அமெரிக்காவில் வசித்தவருமாகிய விஸ்வலிங்கம் கனகரத்தினம் அவர்கள் 14.11.2001 புதன்கிழமை நியூஜேஸியில் (அமெரிக்கா) காலமானார்.

இவர் காலஞ்சென்ற விஸ்வலிங்கம் தம்பதியரின் மகனும் பரஞ்சோதியின் அன்புக் கணவரும் Dr.உமாகாந்தன் Phd (அமெரிக்கா), Dr. வசந்தி (அமெரிக்கா), ஆனந்தி (ஆசிரியை, கொழும்பு), ஜெயந்தி (ஆசிரியை, கனடா), சுகந்தி (அமெரிக்கா), சிறிகாந்தன் (பொறியியலாளர், சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான செல்வத்துரை (அதிபர்), பொன்னுத்துரை (அதிபர்), நாகரட்ணம் (தபாலதிபர்) மற்றும் திருகோணமலையில் வசிக்கும் ஐயாத்துரை (ஓய்வுபெற்ற கமநல உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.11.2001) திங்கட்கிழமை நியூஜேசியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ.சண்முகநாதன் (சிவம்)
(பெறாமகன்)

*25, கைலாசப்பிள்ளையார் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.* (94621)

## பாவியுங்கள்! அண்ணா பற்பொடி




ஆயுள் வேத மூலிகை சேர்த்துத் தயாரிக்கப்பட்டது. இது வாய் நாற்றம், பல் அரணை, பல் வியாதிகள் முதலியவற்றை நீக்கி பல்லுக்கு வெண்மையையும் முக வசீகரத்தையும் கொடுக்கிறது.

இதன் வெற்றுப் பக்கற்றுக்களைச் சேர்த்துக் கொடுத்து இனாம் பொருள்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**அண்ணா தொழிலகம், இணுவில் T.P -No: 3565** (C-19344)

## வலி.மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்

### சந்தைகள்/இறைச்சிக் கடைகளுக்கான மீள்கேள்வி அறிவித்தல் - 2002

**கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி: 2001-11-22 பிற்பகல் 15.00 மணிவரை.**
**கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி: 23-11-2001 பிற்பகல் 14.00 மணிவரை.**
**கேள்விகள் திறக்கப்படும் திகதி: 23-11-2001 பிற்பகல் 15.00 மணி.**
ஏனைய விவரங்கள் தலைமையலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

### கேள்வி அறிவித்தல் அட்டவணை

| குத்தகை விவரம் | மாத வாடகை சபைக்குச் செலுத்த வேண்டியது | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | கேள்விப் பிணைப்பணம் மீளளிக்கக் கூடியது | கேள்விப் பத்திரப் பணம் ஜீ.எஸ்.ரி நீங்கலாக |
|---|---|---|---|---|
| சுழிபுரம் உப அலுவலகம் | | | | |
| 01. சத்தியக்காட்டுச் சந்தை *(துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு உட்பட)* | | 240,000/= | 5,000/= | 250/= |
| 02. பல்சட்டி சந்தை, தற்காலிக சந்தை *(கேள்விக்காரர் ஒழுங்கு செய்தல்)* | | 6,000/= | 500/= | 250/= |
| வட்டுக்கோட்டை உப அலுவலகம் | | | | |
| 01. வட்டுக்கோட்டை பொதுச் சந்தை *(இறாத்தலடி)* | | 14,000/= | 500/= | 250/= |
| அராலி உப அலுவலகம் | | | | |
| 01. தற்காலிக சந்தை *(கேள்விக்காரர் ஒழுங்கு செய்தல்)* | | 1,200/= | 200/= | 250/= |
| 02. மீன் சந்தை *(அராலி கிழக்கு)* | | 2,400/= | 200/= | 250/= |
| சுழிபுரம் உப அலுவலகம் | | | | |
| 01. மாட்டிறைச்சிக்கடை | 50/= | 12,000/= | 500/= | 250/= |
| 02. கருவாட்டுக்கடை | 50/= | 2,500/= | 500/= | 250/= |
| வட்டுக்கோட்டை உப அலுவலகம் | | | | |
| 01. மாட்டிறைச்சிக்கடை | 75/= | 15,000/= | 500/= | 250/= |
| 02. ஆட்டிறைச்சிக்கடை | கேள்விக்காரர் கடை ஒழுங்கு செய்தல் வேண்டும். | 1,500/= | 500/= | 250/= |
| அராலி உப அலுவலகம் | | | | |
| 01. மாட்டிறைச்சிக்கடை | கேள்விக்காரர் கடை ஒழுங்கு செய்தல் வேண்டும். | 8,000/= | 500/= | 250/= |

*குறிப்பு:-* **கேள்வித் தொகை, கேள்விப் பத்திரப் பணம், மாத வாடகை ஆகியவற்றுக்கு ஜீ.எஸ்.ரி வரி 12.5% செலுத்தப்படல் வேண்டும்.**

வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
தலைமையலுவலகம், சுழிபுரம்,
2001.11.16.

**ந.திரிலோகநாதன்,**
தலைவர்,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம். (C-19343)

## நன்றி நவிலல்

எமது குடும்ப ஒளிவிளக்காய்த் திகழ்ந்து 12.11.2001இல் எம்மை விட்டுப் பிரிந்த **செல்லையா வேலாயுதபிள்ளை** அவர்களின் மரணச் செய்திகேட்டு நேரில் வந்தும், தொலைபேசி, பக்ஸ், தந்தி மூலமும் துக்கம் விசாரித்த அன்பு நெஞ்சங்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்களை வெளியிட்டும், மலர் வளையங்கள் வைத்தும் மரியாதை செலுத்திய நீர்பாசனத் திணைக்களம், கால்நடை அபிவிருத்தி தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு, வீதி அபிவிருத்தித் திணைக்களம் ஆகியவற்றின் உத்தியோகத்தர்களுக்கும் ஊழியர்களுக்கும், கிண்ணியா மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் யாவருக்கும் **"OMEGA", "ZIGMA"** கல்வி நிலையங்களின் நிர்வாகிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் யாவருக்கும் மற்றும் உயர்தர உயிரியல் பிரிவு மாணவர்களுக்கும், திருகோணமலை தள வைத்தியசாலை வைத்தியர்கள், தாதிமார்கள், ஊழியர்களுக்கும் 15.11.2001 இல் நடைபெற்ற இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு எல்லாவகையிலும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

திருமதி திலகவதி வேலாயுதபிள்ளை
பிள்ளைகள்: பிரேமகுமார், பிரேமச்சந்திரன்,
பிரேமரஞ்சன், பிரேமதயாளன்.

*58/5, கல்லூரி வீதி, திருகோணமலை.* (C/19347)

# எரிபொருள் ஏற்றிய கப்பல் இன்னும் சில நாள்களில் வரும்

## அதன் பின் தட்டுப்பாடு நீங்கலாம்

யாழ். குடாநாட்டுக்கென எரிபொருள்களை ஏற்றிய கப்பல் ஒன்று இன்னும சில நாள்களில் காங்கேசன்துறை துறைமுகத்தை வந்தடையுமென எதிர்பார்க்கப்படுவதாக யாழ். பெற்றோலியக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இக்கப்பல் துறைமுகத்தை வந்தடைந்ததும் குடாநாட்டில் தற்போது நிலவும் எரிபொருள் தட்டுப்பாட்டு நிலை நீங்கிவிடும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

காங்கேசன்துறை எரிபொருள் களஞ்சியத்திலிருந்து எரிபொருள்களை எடுத்துவருவதில் படையினர் விதித்துள்ள கட்டுப்பாடு இன்னமும் நீக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

காங்கேசன்துறை களஞ்சியத்தில் போதியளவு எரிபொருள் கையிருப்பில் உள்ளபோதிலும், மட்டுப்படுத்தப்பட்ட அளவு எரிபொருள்களையே களஞ்சியத்திலிருந்து பெறப் படையினர் அனுமதிப்பதாகவும் கூறப்படுகிறது. (ம-9)

# எரிபொருள் விநியோகம் ஓரிரு தினங்களில் சீராகுமாம்

## ஈ.பி.டி.பி. அமைப்பு கூறுகின்றது

யாழ்ப்பாணம்,நவ.18

எரிபொருளை எடுத்துவரும் கப்பல் வடபகுதியை வந்தடைந்ததும் - இன்னும் ஓரிரு நாள்களில் எரிபொருள் விநியோகம் சீராகும் என ஈ.பி.டி.பி. அமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்.குடாநாட்டில் விநியோகிப்பதற்கான எரிபொருள் எடுத்து வந்த கப்பல் தாக்குதலுக்கு உள்ளானதைத் தொடர்ந்து குடாநாட்டில் எரிபொருள் விநியோகம் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளமை கவலைக்குரியது. இதனால் அத்தியாவசிய சேவையான வைத்தியசாலைச் சேவை, மின் விநியோகம் என்பன பாதிக்கப்பட்டுள்ளன. ஜி.சீ.ஈ. (சா/த) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களும் பெரும் பாதிப்புகுள்ளாகியுள்ளனர்.

இந்த நிலைமை தொடர்பாக வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழகு தமிழ் விவகாரங்கள் அமைச்சர் கே. என்.டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. இதனையடுத்து பெற்றோலியக் கூட்டுத்தாபன உயர் அதிகாரிகள் மற்றும் பாதுகாப்புத் தரப்பினர் ஆகியோருடன் பேச்சு நடத்தப்பட்டது. இதனால் வடபகுதியில் விநியோகிப்பதற்கான எரிபொருளை விரைவில் எடுத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எரிபொருள் தாங்கிக் கப்பல் வடபகுதியை வந்தடைந்ததும் எரிபொருள் விநியோகம் இரண்டொரு தினங்களில் சராகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை -

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கான தரைவழிப் போக்குவரத்துத் தடுக்கப்பட்டுள்ள சூழலில் கடல்வழி விநியோகத்திற்கும் குந்தகம் ஏற்படுத்தும் செயல்களால் பாதிப்புக்களுக்கு உள்ளாகுவது சாதாரண பொதுமக்களே என்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

அத்துடன் மக்கள் எதிர்நோக்கும் இவ்வாறான துன்ப துயரங்களை சுட்டிக் காட்டுபவர்கள் எய்தவர்கள் இருக்க அம்புகளை நோவது போன்ற பாணியில் விமர்சனங்களை முன்வைப்பதும், அதன் பயன் பொருத்தமான விளைவுகளுக்கு உதவப் போவதில்லை என்பதையும் புரிந்து கொள்ளவேண்டும்.

# மட்டக்களப்பு நகரில் படைகள் குவிப்பு!

## சோதனைகள் தீவிரம்

மட்டக்களப்பு,நவ.18

மட்டக்களப்பு நகரப் பகுதியில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. நேற்று அங்கு பெருமளவில் படையினர் குவிக்கப்பட்டனர்.

நகரப்பகுதியில் கடந்த வியாழக்கிழமை தற்கொலைத் தாக்குதல் இடம்பெற்றது தெரிந்ததே. அதைத் தொடர்ந்து மேலும் தாக்குதல்களை மேற்கொள்ள விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் நகருக்குள் ஊடுருவியிருக்கின்றனர் என்று கிடைத்த தகவலை அடுத்தே பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருக்கிறது.

சோதனை நிலையங்களில் வழமையை விட கூடுதல் படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர். அத்துடன் பிரதான சந்திகளிலும் படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர். படையினரின் சோதனைகளும் தீவிரமாக்கப்பட்டிருக்கின்றன. (உ)

# 1 1/2 வருடங்களின் பின் இயங்கும் நூல்நிலையம்

இடம்பெயர்வின் பின்னர் கடந்த ஒன்றரை வருடங்களாக இயங்காமல் இருந்த பளைப் பிரதேச சபை பொது நூல்நிலையம் நேற்று முன்தினம் தொடக்கம் மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது.

நெல்லியடி விக்னேஸ்வரா கல்லூரி வீதியில் உள்ள பளைப்பிரதேச சபைத்தலைமை அலுவலகத்துக்கு அருகிலும், இணுவிலில் இயங்கும் உப அலுவலகத்துக்கு அருகிலும் இந்த நூல் நிலையக் கிளைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த நூல் நிலையங்களுக்கென அண்மையில் பெருமளவு புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் - விரைவில் அவை அங்கத்தவர்களுக்கு இரவல் கொடுக்கவுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது.(ம-117)


**லஷ்சுமி இணுவில்.**

விஜய், சிம்ரன், சிவாஜி நடித்த

**ஒன்ஸ்மோர்**

(ரீல்ஸ்)

தினசரி:- 10.30, 2.30 (ப.நே.)

**ராஜா யாழ்ப்பாணம்**

கமல், மனிஷா, ரவீனா ராண்டன் நடித்த

**ஆளவந்தான்**

தினசரி: 10.30, 2.30, (பு.நே.)

சனி, ஞாயிறு:- 10.30, 2, 5 (பு.நே.)

இந்தியாவிலும். இலங்கையிலும் ஒரே தினத்தில் மாபெரும் வெளியீடு.

ஆசனங்களை முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளவும்.

(C/19317)


## திருத்தம்

நேற்றைய உதயனில் (17-11-2001) கடைசிப் பக்கத்தில் 'அவசர பொதுக் கூட்டம்' என்ற தலைப்பில் பிரசுரமான விளம்பரத்தில் -

அந்த விளம்பரத்தைப் பிரசுரித்த 'தொலைத் தொடர்பு நிலைய (மோட்டறோலா) உரிமையாளர் சங்கத்தின்' பெயர் தவறுதலாக இடம்பெறவில்லை.

(94599) அதனைச் சேர்த்து வாசிக்கவும்.


**உடன் விற்பனைக்கு**

(பாவனையில் உள்ளவை)

மோட்டோறோலா தொலைபேசி (இரண்டு இணைப்புகள்), போட்டோ கொப்பி மெசின்கள் 1212 கொனிக்கா,ரொசிபா, லெமினேற்றிங்மெசின்,கொம்பியூட்டர் Pentium II, பிறின்ரர் 24பின் டொட்மெற்றிக்,பிறின்ரர் இன்ஜெட்கலர், ஜெனரேட்டர் 1.5KV, மோட்டார் சைக்கிள் (யமகா) மேற்50C, மொறிஸ் மரீனாகார் என்பன விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:

அனோஜாஸ்

பல்பொருள் வாணிபம்,

கந்தசாமி கோவில் வடக்கு வீதி, நீர்வேலி.

(94618)


# புலிகளைத்.....

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

மத்தியில் அவல வாழ்வு வாழ்கின்றனர். இன்று நாம் அனைவரும் அகதிகளாக, அநாதைகளாக வாழ்கின்றோம். இந்த நிலை நீங்க வேண்டும். இன்றைய அவல நிலைக்குப் பிரதான காரணமான யுத்தம் நிறுத்தப்படவேண்டுமானால் அரசு விடுதலைப் புலிகளுடன் பேச வேண்டும். தமிழ், முஸ்லிம் மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்குத் தீர்வு காண்பது தொடர்பில் பேரம்பேசும் நிலையில் விடுதலைப் புலிகள் மட்டுமே உள்ளனர். விடுதலைப் புலிகளைத் திருப்திப்படுத்தக்கூடிய அரசியல் தீர்வையே தமிழ மக்களும் ஏற்றுக்கொள்வர்.

அனைத்துப் பிரச்சினைகளுக்குமான தீர்வு சமாதான சூழ்நிலையிலேயே ஏற்படும். அத்தகைய சூழ்நிலை ஏற்படுவதற்கு சுயநலமில்லாத அர்ப்பணிப்புமிக்க அரசியல்வாதிகளே நாட்டுக்குத் தேவை. தமிழர்களின் தனிப்பெரும் தலைவர் தந்தை செல்வா வழியில் நின்று செயற்பட என்னை வெற்றிபெறச் செய்யுங்கள்.

- இவ்வாறு அவர் தெரிவித்தார். (ம-9)


**நாகம்ஸ் சுன்னாகம்**

ஷியாம், ஜோதிகா, சிம்ரன் நடித்த

**12-B**

(ரீல்ஸ்)

வாழ்க்கையில் எதிர்பாராத திருப்பங்கள்.

காட்சி நேரம் மாற்றம்

காட்சிகள்:- 11.00, 3.00, 6.30 (புதிய நேரம்)

(94636)

**நிறைஞ்சனாஸ் சங்கானை**

குணால், மோனல், கரண் நடித்த

**பார்வை ஒன்றே போதுமே**

(ரீல்ஸ்)

தினசரி: 11.00, 2.30, 5.30 (பு.நே.)

(C-19349)


# மரண அறிவித்தல்கள்

## சுப்பையா வேல்நாதன் (காரைநகர்)

காரைநகர் அல்வின் வீதி, இலந்தைச்சாலையைப் பிறப்பிடமாகவும் பதுளையை வதிவிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை சுப்பையா வேல்நாதன் நேற்று (17.11.2001) அதிகாலை காலமாகிவிட்டார்.

இவர் காசிப்பிள்ளை சுப்பையா - பூரணம் தம்பதியினரின் அன்பு மகனும் புவனேஸ்வரி (மலர்), யோகேஸ்வரன் (கிருஷ்ணா ஹோல் ஹவுஸ், செங்கலடி), காலஞ்சென்ற மோகனலிங்கம் (மோகனா ஜுவல் லறி செங்கலடி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பரமநாதன் (கலா ஹோல் ஹவுஸ், செங்கலடி), செல்வநாயகி, இராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (18.11.2001) ஞாயிற்றுக்கிழமை பதுளையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்

*202/2, நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்*

சபாரத்தினம் தருமகுலசிங்கம (சகோதரர்)

(C/19353)

## சுப்பிரமணியம் குமரேசபிள்ளை (குஞ்சி)

கருகம்பனையைப் பிறப்பிடமாகவும் இளவாலையை வசிப்பிடமாகவும் தற்போது சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்டவருமான சுப்பிரமணியம் குமரேசபிள்ளை நேற்றுமுன்தினம் (16.11.2001) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - தங்கப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கனகசபை (விதானையார்), பொன்னுத்துரை (இந்தியா), நவரத்தினம், புவனேஸ்வரி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், வள்ளியம்மை, காலஞ்சென்ற நகுலேஸ்வரி, அன்னலட்சுமி, பொன்மயிலைநாதன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துனரும், கேசவமூர்த்தி (கொழும்பு), மகேந்திரன் (இயக்குநனர், தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கம்), ஜெயேந்திரன் (கனடா), அருந்தவராணி (கொழும்பு), வசந்தினி (கனடா), அனுராதா (லண்டன்), விக்கினேஸ்வரன் (லண்டன்), பகீரதி (இந்தியா), பாலமுரளி (பேராதனை பல்கலைக்கழகம்), சிவகரன் (யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரனி சிறிய தந்தையாரும், மைதிலி (ஆஸ்திரேலியா), ஜனனி (ஆஸ்திரேலியா), கேதீஸ்வரன் (ஆஸ்திரேலியா), ஜனகன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் நேற்று (17.11.2001) சனிக்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தற்காலிக முகவரி:*
*முத்துக்கிருஷ்ணர் வீதி,*
*"கைலாச வாசம்"*
*சுன்னாகம் தெற்கு.*

தகவல்:
சு.நவரத்தினம் (சகோதரர்)
க.மகேந்திரன் (பெறாமகன்)

(94643)


# பொதுத் தேர்தல் - 2001

தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு

**அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்**

விடுதலைப் பாதையில் வீறுநடை போட்ட வின்னன்
அஞ்சாத நெஞ்சும், கெஞ்சாத வாழ்வும் கொண்ட வீரன்
தமிழ்க்குல மானம் காத்துநின்ற தலைவன்
அன்னை தமிழின் அடிமை விலங்கொடிக்க உழைத்த உத்தமன்
இலட்சியம் வெல்ல ஆதரவு தருவோம்



தியாக மாமனிதர்



சமாதானம் நிலவ உழைப்போம்

திரு. அப்பாத்துரை விநாயகமூர்த்தி 1



நிம்மதியான வாழ்வுபெற உழைப்போம்

திரு. சி.வி.கந்தையா சிவஞானம் 5



சுதந்திர வாழ்வுக்காக உழைப்போம்

திரு. கஜேந்திரகுமார் காங்கேசர் பொன்னம்பலம் 8

**என்று தணியும் எங்கள் சுதந்திர தாகம்**

**தமிழர் விடுதலைக் கூட்டணி**

எங்கள் விருப்பு வாக்குகள் மூன்றும் தமிழ்க் காங்கிரஸுக்கே!

| ~~1~~ | 2 | 3 | 4 | ~~5~~ | 6 | 7 | ~~8~~ | 9 | 10 | 11 | 12 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

- நல்லூர் வாழ் மக்கள்.

(93906)

## INVITATION OF BIDS FOR ADDITIONAL WORKS IN TEACHERS CENTRES
### CREDIT NO: 2881 CE
### TEACHER EDUCATION & TEACHER DEVELOPMENT PROJECT
### PROVINCIAL DEPARTMENT OF EDUCATION
### NOTHERN PROVINCE

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received a credit from the International Development Association towards the cost of the Teacher Education and Teacher Development Project and intends to apply part of the funds to the eligible payments under the contract for the following 02 contract packages. Bidding is open to all bidders from eligible source countries as defined in the Guidelines. (Procurement Tender IBRD Loans and IDA Credits) All domestic construction contractors registered with ICTAD as mentioned in the Bidding Data are eligible to bid.

| Bid Code No. | Name of the Contract Additional works to Tender centres | Minimum Grade of Registration with ICTAD | Required Bid Security Rs. |
|---|---|---|---|
| TETD/NP Package I | TC J/Manipay Hindu College<br>TC J/Varany MV | M 9 | 1200.00 |
| TETD/NP Package II | TC J/Nelliady MMV | M 9 | 1200.00 |

2. The Zonal Director of Education Vadamaradchy invites separate sealed bids from eligible bidders for the construction of package 1 & 2 as mentioned above.
3. Bidding documents may be purchased from the office of the Zonal Department of Education, Vadamarachy from 9.00 a.m. on 19.11.2001 to 29.11.2001 for a non-refundable fee of Rs.500/- with refundable deposit Rs.1200/- Interested bidder may obtain further information at the above address.
4. Bids shall be valid for a period of 60 days after bid opening and each bid must be accompanied by a bid security as mentioned in the bidding data and shall be delivered to the Chairman Tender Board, Zonal Department of Education, Vadamarachy on or before 10.00 a.m. on 20.12.2001 at which time the bids will be open in the presence of the bidders or their authorized respresentatives.

**Zonal Director of Education**
**Zonal Education office,**
**Vadamaradchy,**
**Puloly.**
**Date:- 17.11.2001** (C/19352)



# நல்லூர் பிரதேச சபை
## மீள் கேள்வி அறிவித்தல் – சந்தை, இறைச்சிக்கடை
## அறிவித்தல் - I

2002 ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் 2002 மார்கழி 31 வரையான காலப்பகுதிக்கு கீழே குறிப்பிடப்படும் கேள்விகள் 27.11.2001ஆம் திகதி காலை 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்று மாலை 2.00 மணிக்குத் திறக்கப்படும். 23.11.2001ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளலாம். இதுசம்பந்தமான நிபந்தனைகள் 02.11.2001ஆம் திகதிய உதயன், வலம்புரி பத்திரிகைகளில் பார்வையிடலாம் அல்லது நல்லூர் பிரதேச சபைக் காரியாலயத்தில் அறிந்துகொள்ளலாம்.

| துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம்/இறைச்சிக்கடைகள் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த தொகை (ஜீ.எஸ்.ரீ. தவிர்ந்தது) |
|---|---|---|---|
| **நல்லூர் உப அலுவலகம்** | | | |
| திருநெல்வேலிச் சந்தை துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் | 500/- | 5,000/- | 3,45,650/- |
| **கொக்குவில் உப அலுவலகம்** | | | |
| 01. கொக்குவில் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 350/- | 3,000/- | 1,89,000/- |
| 02. கொக்குவில் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 350/- | 3,000/- | 52,360/- |
| 03. கொக்குவில் உப அலுவலகம் ஆட்டிறைச்சிக்கடை | 350/- | 3,000/- | 40,000/- |
| 04. கோண்டாவில் வடக்கு, அரசடி வீதி, மீன்சந்தை | 100/- | 500/- | 1000/- |

## ஆடியபாதம் வீதி புதிய கடைகள்
## அறிவித்தல் - II

கடை இல: 34,35

12.09.2001ஆம் திகதிய வலம்புரி, உதயன் பத்திரிகைகளில் பிரசுரமாகிய கேள்வி நிபந்தனைகளுக்கு அமைய கேள்விகள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப்படிவம் வழங்கும் திகதி - 23.11.2001 நண்பகல் 12.00 மணி வரை.
விண்ணப்பப்படிவம் ஏற்கும் திகதி - 27.11.2001 காலை 10 மணி வரை.
விண்ணப்பப்படிவம் திறக்கும் திகதி - 27.11.2001 மாலை 2.30 மணி

| கடை இல. | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளப்படும் ஆகக் குறைந்த தொகை (ஜீ.எஸ்.ரீ. தவிர்ந்த) |
|---|---|---|---|
| 34 | 500/- | 10,000/- | 3,24,000/- |
| 35 | 500/- | 10,000/- | 3,24,000/- |

*நல்லூர் பிரதேச சபை,*
*திருநெல்வேலி.*
*16.11.2001* (C/19349)

துரை தவராசா *ஜே.பி.*
*உப தலைவர், நல்லூர் பிரதேச சபை.*


தென்னிலங்கையில் இருந்து

# 10 பிரதிநிதிகள் குழுவினர் செவ்வாயன்று யாழ். வருகை

யாழ்ப்பாணம்,நவ.18

இலங்கையில் நீதிக்கும் சமாதானத்துக்குமான உலக ஒத்துழைப்பு மன்றத்தின் இலங்கைக் குழுவைச் சேர்ந்த 10 பிரதிநிதிகள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகைதரவுள்ளனர்.

இவர்கள் ஒரு வார காலம் யாழ்ப்பாணத்தில் தங்கிநின்று பல்வேறு பொதுஅமைப்புகளின் பிரதிநிதிகள், மதகுருமார்கள், பல்கலைக்கழக சமூகத்தினர் மற்றும் பலரையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

இக்குழுவில் அங்கம் வகிக்கின்ற 10 பேரின் பெயர்களும் வருமாறு:-

வென்மகாகல் கடவல புஞ்ஜதார தேரர், மெடகந்த சுசிம விஜித பால தேரர் (பிக்குனி), ஜெகான் தேவானந்தா, மாலினி தேவானந்தா, அனுல சிறியலதா, தயா கஹச்ல்ல, கே.சொக்கநாதன், நிமல் முனசிங்க, சரத் முனசிங்க, ரயிஸ்ரன் வெயின்மென். (ஐ-10)

# தேர்தல் கண்காணிப்புக் குழு பிரதிநிதிகள் யாழ். வருகை!

யாழ்ப்பாணம்,நவ.18

தேர்தல் கண்காணிப்புக் குழுவைச் சேர்ந்த 3 பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

எதிர்வரும் 5ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலைக் கண்காணிப்பது தொடர்பாக இங்குள்ள பொதுஅமைப்புகள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களுடன் இந்தக் குழு கலந்துரையாடல்களை நடத்தும்.

இந்தக் குழுவினர் நேற்றுக் காலை அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியதுடன் ஆயர் இல்லத்திற்கும் சென்று அங்குள்ளவர்களுடன் கலந்துரையாடினார்கள்.

அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பணிமனையில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின்போது, நடைபெறவுள்ள தேர்தல் கண்காணிப்புத் தொடர்பான நடைமுறைகள், யாழ். மக்களின் தேர்தல் தொடர்பான நிலைப்பாடுகள் என்பன பற்றி இணையத்தின் பிரதிநிதிகளால் விரிவாக எடுத்துக் கூறப்பட்டது.

இந்தக் குழுவினர் இன்றும் நாளையும் பல தரப்பினரையும் சந்தித்தும் பேசவுள்ளனர். அவர்கள் நாளை கொழும்பு திரும்புவர். தேர்தலுக்கு முன்னர் மீண்டும் ஒரு தடவை இங்கு வருகை தரவுள்ளனர்.

'பவ்ரல்' அமைப்பைச் சேர்ந்த இக்குழுவில் தேசிய சமாதானப் பேரவையின் தலைவர் ஜெகான் பெரேரா, எவ்.ரவீந்திரன், நிமால் பெர்னாண்டோ ஆகியோர் இடம்பெறவுள்ளனர். இவர்களுடன் சுவீடன் தூதரகத்தின் இரண்டாவது செயலாளர் ஸ்ரினா காஸ்ரின் என்பவரும் வருகை தந்துள்ளார். (ம-10-180-ரி)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,நவ.18

யாழ்பல்கலைக்கழக உடற்கல்வி இரண்டாம் வருட (மூன்றாம் அணி) மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை 12.30 மணியளவில் விரிவுரை மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து மாணவர்களையும் கலந்துகொள்ளுமாறு மாணவர் பிரதிநிதிகள் கேட்டுள்ளனர். (ம)

## சமூக அபிவிருத்தி மன்ற செயற்பாடுகள் கணனி மயம்

பருத்தித்துறை,நவ.18

யாழ்.சமூக அபிவிருத்தி மன்றத்தின் செயற்பாடுகள் யாவும் கணனி மயப்படுத்தப்படவுள்ளன. இந்த மன்றத்தின் நீண்டகாலக் கோரிக்கைகளுக்கு இணங்க நேற்றுக் காலை புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் அலுவலகத்தில் வைத்து இதற்கான கணனிகளை யாழ்.சமூக அபிவிருத்தி மன்றத் தலைவர் ந.கந்தையாவிடம் யாழ்.மாவட்ட ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி அமைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான வி.கே.குகேந்திரன் கையளித்தார். இந் நிகழ்வில் யாழ். மாவட்டத்திலுள்ள சமூக அபிவிருதத்தி மன்றக் கிளைகளின் உறுப்பினர்களும் கலந்துகொண்டனர். (ம-118)


## 200 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவிகளின் பெற்றோருக்கு!

*விடயம்* : வேம்படி மகளிர் கல்லூரியில் தரம் 6 இல் அனுமதி கோர.
*காலம்* : நாளை (19.11.2001) திங்கட்கிழமை
காலை 8மணி (புதிய நேரம்)

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தும் மேற்படி கல்லூரியில் அனுமதி மறுக்கப்பட்ட பிள்ளைகளின் பெற்றோர்கள் ஸ்ரீதர் தியேட்டர் முன்பாக வருகைதரவும்.

ச.சிவானந்தன்,
*வெளிப்புலம், சுன்னாகம்.*
(94637)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 23 - 09 - 1934



விண்ணில் 30 - 11 - 2000

### அமரர் தம்பியையா இராசரத்தினம்

(சின்னராசா)

திதி: சதுர்த்தி

பெற்றெடுத்துப் பேணி வளர்த்து
அன்பு காட்டி அரவணைத்து
வர்த்தகராய் வாழ்ந்து நல்ல
வாழ்வினிலே உயர்ச்சி கண்ட
எங்கள் அன்புத் தெய்வமே!
சுற்றி வருகுதப்பா உங்கள் நினைவு
மறவோம் எந்நாளும் உங்கள் நினைவை.
என்றும் தொழுவோம் உங்கள் பாதம்!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

என்றும் உங்கள் நினைவால் வாடும்
குடும்பத்தினர்.

*இணுவில் தெற்கு.* (C/19350)

# மக்கள் வங்கி

## வாடிக்கையாளர்களுக்கு ஒரு நற்செய்தி!

**21-11-2001 புதன்கிழமை அன்று அச்சுவேலியில் கோலாகலமான திறப்புவிழா வைபவம்.**

## அச்சுவேலிக்கு ஒரு முழுமையான மக்கள் வங்கிக் கிளை

தற்போது யாழ்.ஸ்ரான்லி வீதியின் நீடித்த கருமபீடமாக இயங்கிவரும் அச்சுவேலி மக்கள் வங்கி எதிர்வரும் 21.11.2001 புதன்கிழமைமுதல் ஒரு தனித்துவமான கிளையாக இயங்கவுள்ளது என்பதனை எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் பெருமகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திரு.து.வைத்திலிங்கம் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்துகொள்ளும் இவ்வைபவத்தில் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வார். அரச உயரதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள், மக்கள் வங்கி உயரதிகாரிகள் மற்றும் பல பிரமுகர்கள் சிறப்பு அதிதிகளாகக் கலந்துகொண்டு சிறப்பிக்க இருக்கிறார்கள்.

**எமது அன்பான வாடிக்கையாளர்களே!**

தாங்கள் அனைவரும் அன்றையதினம் இவ்வைபவத்தில் கலந்துகொண்டு சிறப்பிக்கவேண்டும் என அன்புடன் அழைக்கின்றோம்.

## மக்கள் வங்கியின்

வர்த்தகர்களுக்கும், நிறுவனங்களுக்குமான - நடைமுறைக் கணக்குகள்
மகளிருக்கான விசேட சேமிப்புத் திட்டமான வனிதா வாசனா
குழந்தைகளுக்கான சேமிப்புத் திட்டமான இசுரு உதான
பாடசாலை மாணவர்களுக்கான சேமிப்புத் திட்டமான சிசு உதான
விசேட சேமிப்புத் திட்டமான ஜனஜய
மற்றும் மாதாந்த சேமிப்புக் கணக்கான முதலீட்டுச் சேமிப்புக் கணக்குகள்
போன்ற புதிய கணக்குகளை அன்றையதினம் ஆரம்பித்தும், தற்போது அச்சுவேலியில் தாங்கள் வைத்திருக்கும் கணக்குகளில் பண வைப்புக்களை மேற்கொண்டும், புதிய வாடிக்கையாளர்களை அறிமுகம் செய்தும் வைபவத்தைச் சிறப்பிக்குமாறு தயவுடன் வேண்டுகிறோம்.

நடைமுறைக் கணக்கு வாடிக்கையாளர்களுக்கு அன்றையதினம் தொடக்கம் அச்சுவேலி கிளைக்குரிய காசோலைப் புத்தகம் வழங்கப்படும் என்பதனையும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

அச்சுவேலி மக்கள் வங்கியின் நடவடிக்கைகள் மேலும் விரிவுபடுத்தப்பட வங்கியின் சொத்துக்களான வாடிக்கையாளர்களாகிய தங்களது பேராதரவினை மேன்மேலும் வேண்டி நிற்கிறோம்.

*அன்றைய தினம் காலை 8.50ற்கு அச்சுவேலி மக்கள் வங்கி முன்றிலில் தவறாத தங்களின் வரவை* ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

பிராந்திய முகாமையாளர்
**மக்கள் வங்கி**
யாழ்ப்பாணம்.

# வடக்கு - கிழக்கில் 70 புலிகள் தேர்தலில் போட்டியிடுகின்றனர்

## சிவாஜிலிங்கம் கூறுகின்றார்

அம்பாறை,நவ.18

"மட்டக்களப்பில் நான்கு புலிகளும் யாழ்ப்பாணத்தில் மூன்று புலிகளும் போட்டியிடுவதாக ஜனாதிபதி கூறியுள்ளார். ஆனால் வடக்கு - கிழக்கு முழுவதும் தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு சார்பில் 70 புலிகள் இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்றனர். அதாவது விடுதலை வேண்டி நிற்பதில் நாங்களும் புலிகள்தான்."

- இவ்வாறு தெரிவித்தார் ரெலோ அமைப்பின் பொதுச் செயலாளரும் தமிழ்க் கட்சிகள் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட வேட்பாளருமான எம்.கே.சிவாஜிலிங்கம்.

நேற்று அம்பாறை மாவட்டம் காரைதீவில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எதிர்வரும் தேர்தலின் பின்னர் எமது கூட்டமைப்பின் சார்பில் வடக்கு - கிழக்கில் இருந்து சுயமரியாதையுள்ள இருபது நாடாளுமன்ற உறுப்பினர்கள் இலங்கை நாடாளுமன்றத்துக்குச் செல்லவுள்ளனர். இன்றே அரசியலில் நாம் முக்கிய சக்தியாக உருவெடுப்பது உறுதி.

விடுதலைப் புலிகளின் போராட்டம் பயங்கரவாதப் போராட்டம் அல்ல. அது சுதந்திரப் போராட்டம்.

புலிகளின் கரங்களைப் பலப்படுத்த எமது கரங்களை நீங்கள் பலப்படுத்த வேண்டியது அவசியம். இந்த இரு கரங்களும் பலப்படுத்தப் பட்டாலேயே எமது நோக்கு நிறைவேறும்.

இன்று தமிழ்மண் பற்றி எரிகின்றபோது டக்ளஸ் தேவானந்தா வீணை வசித்துக்கொண்டிருக்கின்றார். அவசரகாலச் சட்டத்திற்கும், பயங்கரவாதச் சட்டத்திற்கும் ஆதரவளிக்கும் இவர் தமிழ் மக்களை ஓரம் கட்டப் படுகின்றார் - என்றார். (ம-14)

# தமிழின் வாழ்வுக்கும் வளத்துக்கும் உரமூட்டியவர் தனிநாயகம் அடிகள்

## நூல் வெளியீட்டு நிகழ்வில் ஈ.பி.டி.பி. சிவதாசன் உரை

யாழ்ப்பாணம்,நவ.18

தமிழ் மொழியின் வாழ்வுக்கும், செழுமைக்கும் உரமூட்டியவர் தவத்திரு தனிநாயகம் அடிகள்.

இவ்வாறு தெரிவித்தார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிவதாசன்.

தவத்திரு தனிநாயகம் அடிகள் எழுதிய 'தமிழ்த்தூது' என்ற நூலின் மறுபிரசுர வெளியீட்டுவிழா நேற்று வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சின் யாழ்.அலுவலகத்தில் நடைபெற்றது. இந்த வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எஸ்.சிவதாசன் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

நெடுந்தீவு மண்ணின் தவப்புதல்வனான 'தமிழ்த்தூது' தனிநாயகம் அடிகள் உலகம் எங்கும் சென்று தமிழ் மொழியைப் பரப்பியவர். அது மட்டுமன்றி தமிழ் மொழியின் பெருமையை பறைசாற்றும் வகையில ஆண்டுதோறும் தமிழாராய்ச்சி மாநாடு நடைபெறுவதற்கு முன்னோடியாக இருந்தவரும் இவரே.

சங்க இலக்கியங்களைத் துறைபோகக் கற்றுக்கொண்ட தனிநாயகம் அடிகள் அந்த இலக்கியங்களில் கூறப்பட்ட உலகளாவிய சகோதரத்துவத்தை உலகெங்கும் சென்று எடுத்துக் கூறியவர். இதனால் சர்வதேசரீதியில் தமிழுக்கும் தமிழர் சமூகத்துக்கும் நன்மதிப்பு ஏற்பட்டது.

மலேசியப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறையை ஆரம்பித்துவைத்த பெருமகனும் தவத்திரு தனிநாயகம் அடிகளே.

தனிநாயகம் அடிகள் சிறந்த நாட்டுப் பற்றாளரும் கூட. 1956ஆம் ஆண்டு தனிச் சிங்கள சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட சமயம் அதனை எதிர்த்து காலிமுகத்திடலில் சத்தியாக்கிரகம் நடத்தப்பட்டபோது அதில் இவர் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டமை குறிப்பிடவேண்டிய தொன்றாகும்.

இவ்வாறு தமிழ்மொழிக்காகவே தன்னை அர்ப்பணித்த தனிநாயகம் அடிகள் எழுதிய "தமிழ்த்தூது" நூல் மறுபதிப்பு செய்யப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கதொன்றே. இந்த நூலை மறுபதிப்புச் செய்ததன்மூலம் நெடுந்தீவு பெருமையைப் பெற்றுக்கொள்கின்றது - என்றார்.

இந்த நூலை மீள்பதிப்புச் செய்த நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவரும் தனிநாயகம் அடிகள் தமிழ் மன்றத்தின் செயலாளருமான புலவர் ஏ.டபிள்யூ.அரியநாயகம் தனது உரையில்:-

தவத்திரு தனிநாயகம் அடிகள் உருவாக்கிய தமிழ் நூல்கள் பல எம்மிடையே இல்லை. இதனால் அவர் தமிழுக்கும் தாய்நாட்டுக்கும் ஆற்றிய சேவையை, வளரும் இளைய சமூகம் அறிந்திருக்க சந்தர்ப்பங்கள் மிகவும் குறைவாகவே உள்ளன.

எனவே இத்தகைய குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வகையில் 'தமிழ்த்தூது' நூல் தற்போது மீள்பதிப்புச் செய்யப்பட்டுள்ளது. இந்த நூல் தமிழ்த்தாகம் உடையவர்கள் அனைவருக்கும் பெரும் விருந்தாக அமையும் என்பதில் ஐயமில்லை.

தனிநாயகம் அடிகள் தமிழ் மன்றத்தின் தலைவரும் சமூக சேவையாளருமான எஸ்.எட்வேட் தனது உரையில்:- தமிழ்மொழிக்காகவே வாழ்ந்து, தமிழுக்காகவே தன்னை அர்ப்பணித்த தனிநாயகம் அடிகளுக்கு இந்த நூலை வெளியிடுவதன் மூலம் நெடுந்தீவு மண் தனது நன்றிக்கடனைச் செலுத்தியுள்ளது - என்றார்.

நூலின் முதற் பிரதியைப் பெற்றுக்கொண்ட வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தனது உரையில்:-

தமிழ்மொழியையும், தமிழர் பண்பாட்டையும் மையமாகக் கொண்டு முன்னெடுக்கப்படும் சகல நடவடிக்கைகளுக்கும் எனது அமைச்சும் ஈ.பி.டி.பியும் என்றும் உறுதுணையாக நிற்கும் - என்றார். (ஐ-7)

### பஸ் சேவையை நீடிக்கக் கோரிக்கை

மானிப்பாயில் இருந்து ஆரம்பித்து சுன்னாகம், கோப்பாய், கைதடியூடாகச் சாவகச்சேரி வரை நடைபெறும் பஸ் சேவையை மிருசுவில் வரை நீடிக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மிருசுவில் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்தவர்களில் அநேகர் மானிப்பாய், சுன்னாகம் பகுதிகளில் தற்காலிகமாக வசித்து வருவதாகவும் -

அவர்கள் தமது சொந்த இடங்களுக்குச் சென்று வர வசதியாக மிருசுவில் வரை பஸ்சேவை நடத்தப்படவேண்டும் என்றும் -

பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-7-15)

### அமைச்சர் தொலைபேசி மூலம் பதிலளிப்பார்

யாழ்ப்பாணம்,நவ.18

வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு இந்து சமய விவகாரத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இன்று பொது மக்களின் கேள்விகளுக்கு தொலைபேசி மூலம் பதிலளிக்கவுள்ளார்.

இந்த நிகழ்வு பலாலி யாழ் சேவையிலும் நேரடி ஒலிபரப்புச் செய்யப்படும். இந்த நிகழ்வில் கலந்துகொண்டு அமைச்சரிடம் கேள்வி கேட்க விரும்புபவர்கள் இன்று காலை 10 - 12 மணிவரை அமைச்சருடன் தொலைபேசி மூலம் தொடர்புகொள்வதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. அமைச்சரிடம் கேள்வி கேட்பதற்காக எடுக்கப்படும் தொலைபேசி அழைப்புக்களுக்குரிய கட்டணங்கள் அனைத்தையும் ஈ.பி.டி.பி. அமைப்பே செலுத்தும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ம)

### பொலீஸ்அலுவலகம் விளக்கம்

கொழும்பு,நவ.18

"குடாநாட்டில் தேர்தல் பிரசாரத்தை ஆயுதமுனையில் செய்யமுடியாது; பொலீஸ் தலைமையகம் கடும் உத்தரவு" என்ற தலைப்பில் நேற்று உதயனில் வெளியான செய்தி தொடர்பாகத் தேர்தல் பிரசாரங்களைக் கையாளும் பொலீஸ் அலுவலகம விளக்கம் ஒன்றைத் தெரிவித்துள்ளது.

சம்பந்தப்பட்ட செய்தியில் குறிப்பிடப்பட்டிருக்கும் செய்தியாளர் மாநாட்டில் குடாநாட்டில் ஆயுதங்களுடன் இன்ன கட்சி அல்லது குழுதான் நடமாடுகின்றது என்ற கருத்துத் தெரிவிக்கப்படவில்லை என அந்த அலுவலகம் குறிப்பிட்டது.

இந்தச் செய்தியாளர் மாநாடு குறித்து 'தமிழ் நெற்' இணையத்தளம் வெளியிட்ட தகவலில் -

தேர்தல் காலத்தில் ஆயுதங்களுடன் நடமாடவேண்டாம் என்று ஈ.பி.டி.பி. கேட்கப்பட்டுள்ளது.

இந்தக் கோரிக்கைக்கு அவர்கள் ஒத்துழைப்பார்களேயானால் பெருமளவு பிரச்சினைகள் சுமுகமாகத் தீர்க்கப்படும் என்றும் -

பிரதிப் பொலீஸ் மா அதிபர் செய்தியாளர் மாநாட்டில் தகவல் வெளியிட்டார் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதனடிப்படையிலேயே நேற்றைய உதயனில் அவ்விடயம் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தது. (ஆ-ர்)

புதிய பிரிவுகள் ஆரம்பம்
Internet & Email
பிரிவு-IV ஆரம்பம்
21-11-2001
ஞாயிறு
காலை 10.00
பதிவுகளுக்கு

STP
TP: 2674
E.Mail stpedu@sltnet.lk

### நெற்பயிரில் மடிச்சுக்கட்டி நோய்

வலி.தென்மேற்குப் பகுதியில் நெற்பயிர்களில் மடிச்சுக்கட்டிநோய் தீவிரமாகப் பரவி வருகிறதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். மேற்படி நோயின் தாக்கத்திற்குக் கூடிய யூரியா உரப்பாவனையே காரணம் எனக் கூறப்படுகிறது. (ஐ-185)

### தம்பலகாமம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடத்துக்கு அருகிலிருந்த வீட்டின் சொந்தக்காரரான சுப்பிரமணியம் பாலச்சந்திரன் என்பவரைப் பொலீஸார் கைது செய்தனர்.

சம்பவம் இடம்பெற்ற இடத்திலிருந்து 150 மீற்றர் தூரத்திலேயே சிப்பித்திடல் பொலீஸ் நிலையம் இருப்பது குறிப்பிடத்தக்கது. (ம)

### ஐ.தே.க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழீழம் உருவாக்குவது என்றே புலிகள் இயக்கம் கருதுகின்றது.

- இப்படி 'தமிழ் கார்டியன்' தனது தலையங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறது.

மேற்கு நாடுகள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்திருப்பதையும் 'தமிழ் கார்டியன்' கண்டித்திருக்கிறது.

அந்த அரசுகள் புலிகள் இயக்கத்தை தடை செய்ததன் மூலம் இலங்கை அரசின் அடக்குமுறை, வன்செயல்களை ஆதரிக்கின்றன; மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்க மறுக்கின்றன என்றும் 'தமிழ் கார்டியன்' சுட்டிக்காட்டியிருக்கின்றது.

வெளிநாடுகள் சிலவற்றின் நோக்கும் போக்கும் அவை தமிழ் மக்களை அவர்களின் சொந்த நடவடிக் கைகளில் நம்பிக்கை வைக்க மென்மேலும் தூண்டுவனவாக உள்ளன என்றும் 'தமிழ் கார்டியன்' தெரிவித்திருக்கிறது. ஆனால் அந்நடவடிக்கைகள் எவை என்று 'தமிழ் கார்டியன்' விளக்கவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்த நாடுகள், இலங்கை அரசும் புலிகளும் இணங்கிப்போகும் வாய்ப்பைக் குறைத்து முரண்டு பிடிக்கும் நிலையை வலுப்படுத்துகின்றன என்றும் 'தமிழ் கார்டியன்' எச்சரிக்கை விடுக்கும் தொனியில் குறிப்பிட்டிருக்கிறது. (உ)

### மட்டக்களப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்றவர்கள் பின்னால் இரண்டு வான்களில் வந்துகொண்டிருந்தனர். அவர்களது வாகன அணி வீதியில் வந்துகொண்டிருந்த போது மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் திடீரென குறுக்கே பாய்ந்து ஜெயக்குமாரின் காரை மறித்து சரமாரியாகச் சுடத் தொடங்கினர்.

"ஐயோ! சுடாதீங்கோ...!" என்று கத்தியவாறு ஜெயக்குமார் காரை விட்டு இறங்கினார். எனினும் அவர் மீது சரமாரியாகச் சுடப்பட்டதில் அவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். காரை விட்டு இறங்க முயன்ற அவரது மெய்ப்பாதுகாவலர் படுகாயமடைந்தார்.

கட்டைக் காற்சட்டை, ரீசேர்ட் அணிந்து மோட்டார் சைக்கிளில் வந்து, 'ரி-56' ரக இயந்திரத் துப்பாக்கி மூலம் வேட்டுக்களைத் தீர்த்து, ஜெயக்குமாரைச் சுட்டுக் கொன்றவர்கள் தமது மோட்டார் சைக்கிளிலேயே தப்பிச் சென்றனர்.

ஜெயக்குமாரின் சடலம் களுவாஞ்சிக்குடி ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது. (உ)

தேவை
ஆங்கில தட்டெழுத்தாளர் தேவை.
(அரச மொழி மொழிபெயர்ப்பாளர் ஆயின் விரும்பத்தக்கது)
தொடர்பு:
ஐடியல் கிறீம் ஹவுஸ்,
458, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(பழைய O.P.D. முன்பாக)
(94639)

### வாக்குகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லங்கா அரசு நடத்தும் தேர்தல்களை தமிழ் மக்களாகிய நாம் புறக்கணித்தே வந்தோம். நாடாளுமன்றம் சென்று எமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ள முடியாது என்பது எமக்குத் தெளிவாக தெரிந்திருந்தபடியால் தான் நாம் அந்த தேர்தல்களை இதுவரை காலமும் புறக்கணித்து வந்தோம்.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி குறைந்த வாக்குகளோடு - அல்லது தேர்தல் மோசடிகள் மூலம் - பதவிக்கு வந்த சில ஆயுதம் ஏந்திய தமிழ்க் கட்சிகளை தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக ஸ்ரீலங்கா அரசு வெளிக்காட்டி வந்தது.

அவர்களின் ஆதரவுடன் தமிழினத்தின் மீதான ஆக்கிரமிப்பு யுத்தத்தையும் அது தொடர்ந்து வருகிறது. அதுமட்டுமன்றி அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு என்ற பெயர்களில் சில சலுகைகளை தமிழ் மக்களுக்கு அள்ளி வீசியதன்மூலம் தமிழ்பேசும் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கான வேட்கையை மழுங்கடிக்கச் செய்து, போராட்டத்திற்கான தமிழ் மக்களின் ஆதரவை திசைதிருப்பவும் முயற்சி செய்கிறது.

இதன்மூலம் தமிழ் மக்களுக்கான உரிமைகளுடன் கூடிய நிரந்தர சமாதானத் தீர்வு பின்தள்ளப்பட்டு வருகிறது.

தமிழ் மக்களாகிய நாம் விரும்பும் - எமது அபிலாசைகளான - தனி தேசிய இனம், மரபுவழித் தாயகம், சுயநிர்ணய உரிமை என்பன அங்கீகரிக்கப்பட்டு, பூர்த்தி செய்யப்பட்ட ஒரு நிரந்தர சமாதானமே எமக்கு வேண்டும்.

ஸ்ரீலங்கா அரசாங்கம், புலிகள் மீதான தடையை நீக்கி, யுத்தத்தை நிறுத்தி, தமிழ் மக்கள் மீது விதித்துள்ள பொருளாதாரத்தடையை அகற்றி, இயல்பான சூழ்நிலையில் புலிகளுடன் பேசுவதன் மூலமே நிரந்தர சமாதானத்தைப் பெறமுடியும்.

இந்த நிலைமையைக் குழப்பக் கூடியவர்கள் மீண்டும் நாடாளுமன்றம் செல்லக்கூடாது. அவ்வாறு அவர்கள் சென்றால் எமக்குக் கிடைக்கக் கூடிய நிரந்தர சமாதானம் கிடைக்கப்போவதில்லை. நாம் அனுபவித்து வரும் இன்னல்கள் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

எனவே அபிவிருத்தி என்று கூறிக்கொண்டு ஸ்ரீலங்கா அரசின் அடக்குமுறைச் சட்டங்களான அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்றவற்றிற்கு ஆதரவளிப்பவர்கள் மீண்டும் நாடாளுமன்றம் செல்லக்கூடாது.

இதற்காக, நாம் அனைவரும் விழிப்போடு எமக்குள்ள வாக்குகளை பயன்படுத்த வேண்டும். தேர்தல் தினத்தன்று நாம் அனைவரும் வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று எமது வாக்குகளை நாமே போடுவதன்மூலம் இத்தகைய சக்திகளின் செயற்பாடுகளை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும்.

எனவே பல்கலைக்கழக சமூகத்தின் சார்பில் அனைத்து தமிழ் மக்களையும் வாக்களிப்பில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-6)

SUBRA(14)
சித்தன்கேணி
இன்று ஆரம்பம்
தரம் 10 புதிய பிரிவு
அனுமதிக்கு முந்துங்கள்
"இளைய தலைமுறையின் இன்றைய தெரிவு"
SUBRA(14)
(C/19328)

தேவை
பிரபல பாமஸி ஒன்றுக்கு அனுபவம் வாய்ந்த பெண் ஊழியர்கள் தேவை.
அனுபவம் உள்ளவர்கள் உடன் விண்ணப்பிக்கவும்.
Pharmist ஒருவரும் தேவை.
உடன் விண்ணப்பிக்கவும்.
விளம்பர இல. 1391,
மே/பா உதயன், யாழ்ப்பாணம். (94576)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.11.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.